www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 137

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 29 புதன்கிழமை (11/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# இந்தியாவின் தீர்மானம் இலங்கைக்கு கெடுதல்



## சந்திரிகா எச்சரிக்கை; பாரதூரமாக ஏதோ நடந்திருக்கிறது எனவும் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 11
ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்தமை இலங்கைக்கு நல்லதல்ல என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரித்திருக்கிறார். இந்தியா அப்படியான முடிவை எடுப்பதற்கு "பாரதூரமாக ஏதோவொன்று இடம்பெற்றிருக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவிக்கிறார்.

இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு சந்திரிகா குமாரதுங்க நேற்று சிறிய செவ்வி ஒன்றை வழங்கினார்.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது நாட்

04

## நன்றி கூறுகிறது ஆஸ்திரேலியா

கொழும்பு, ஏப்.11
முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவரான குமார் குணரட்ணம் இலங்கையிலிருந்து சென்றுவிட்டார் என்பதை உறுதி செய்த ஆஸ்திரேலிய அதிகாரிகள், அவரின் பயணத்துக்கு உதவி வழங்கிய இலங்கைப் பொலிஸ் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கிரிபத்கொடை பகுதியில் காணாமல் போன, ஆஸ்திரேலியாவின் நியூ சௌத் வேல்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த 42 வயது மனிதர் பாதுகாப்பாக உள்ளார். இவரை இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்.

இவர் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்ல வசதி செய்து கொடுத்தபொலிஸ்

04

## இலங்கை மீன்பிடி படகு மாலைதீவில்

இலங்கையின் மீன்பிடிப் படகு ஒன்று மாலைதீவு கடற்துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. மாலைதீவின் - சீனு அடோல் கான் பகுதியில் வைத்து இந்த மீன்பிடிப் படகு கைப்பற்றப்பட்டதாக, மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். கடந்த இரண்டு வாரங்களில் மீட்கப்பட்ட இரண்டாவது படகு இது வெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படகில் இருந்தவர்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

## திருமலையில் மருந்து உற்பத்தி நிலையம்

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் திருகோணமலை கப்பல்துறையில் 39.9 மில்லியன் ரூபாய்கள் செலவில் சுதேச மருந்து உற்பத்தி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம, வர்த்தகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், கிழக்கு மாகாண சுகதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைத்தனர். இந்த வளாகத்தில் 5.8 மில்லியன் ரூபா செலவில் யோகா பயிற்சி நிலையமும், 10.3 மில் லியன் ரூபா செலவில் மருத்துவ நூலகமும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக இறக்குமதியான வாகனங்கள்

சுங்க சட்ட விதிமுறைகளை மீறி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கை சுங்கத் திணைக்கள விசேட பிரிவு மற்றும் தேடுதல் பிரிவு மேற்கொண்ட விசாரணையில் கொள்கலன் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இரு பஜிரோக்கள், ஓட்டப்பந்தயக் கார் மற்றும் பிறிதொரு மோட்டார் வாகனம் என்பவை இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களின் பெறுமதி 200 லட்சம் ரூபாவுக்கு அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்வதாகக் கூறி இவ்வாறு ஜப்பானில் இருந்து வாகனங்கள் இறக்குமதி செய்துள்ளதாக இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது.

## சிறைக் கலவரம் மேலும் 13 பேருக்கு விளக்க மறியல்

மகஸின் சிறையில் கடந்த ஜனவரி 25 ஆம் திகதி நடந்த கலவரத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட, மகஸின் சிறையிலுள்ள மேலும் 13 பேரை ஏப்ரல் 18 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு விடுமுறைகால நீதிமன்றத்தின் நீதிபதி கோசலா சேனாதிர நேற்றுக் கட்டளை பிறப்பித்துள்ளார். இதனால் தற்போது இந்தக் கலகம் தொடர்பில் மொத்தமாக 56 சந்தேக நபர்கள் தடுப்புக்காவலில் உள்ளனர். சிறைச்சாலையில் கிளர்ச்சியில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட 13 சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய கொழும்பு குற்றவியல் பிரிவுப் பொலிஸார், இவர்களை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கக் கோரினார்.

## மக்களின் புதுவருடக் கனவை தகர்த்துவிட்டது மஹிந்த அரசு

### சாடுகிறது ஐ.தே.க.

நியூயோர்க், ஏப்.11
பல்வேறு துன்பங்களுக்கு மத்தியிலும் சிங்கள-தமிழ்ப் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என ஆவலுடன் காத்திருக்கும் மக்களின் கனவுகளை மஹிந்த அரசு குழிதோண்டிப் புதைத்துள்ளது எனக் குற்றஞ்சாட்டிய ஐக்கிய தேசியக் கட்சி, பால் பொங்கிப் புத்தாண்டை வரவேற்க வேண்டிய தருணத்தில் அத்தியாவசியப்பொருள்களின் விலை அதிகரிக்கப்படுகின்றது என்ற அபாய சமிக்ஞை எப்போது வருமென அல்லோல கல்லோலப்பட்டே மக்கள் புத்தாண் டில்

04

## அரசியல் தீர்வுத் திட்டத்தை பகிரங்கமாக அறிவியுங்கள்

### அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப்.11
ஜெனிவாவில் ஒரு முகத்தையும், கொழும்பில் மற்றுமொரு முகத்தையும் காட்டும் மஹிந்த அரசு தேசிய இனப்பிரச்சினைக்கான தமது தீர்வு என்னவென்பதைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயகத்தை காற்றில் பறக்கவிட்டும், மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிச் செயற்பட்டுமே இந்த அரசின் ஆட்சிப் பயணம் தொடர்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்

04

## கடத்தப்பட்ட குணரட்ணத்தை ஆஸிக்கு நாடு கடத்தியது அரசு



கொழும்பு, ஏப்.11
கிரிபத்கொடவில் வைத்து ஆயுதக்குழுவினரால் கடத்தப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு விடுவிக்கப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் பிறேமகுமார் குணரட்ணத்தை நாடு கடத்தியுள்ளது இலங்கை அரசு.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்றுக்காலை 7.40 மணியளவில் புறப்பட்ட யு.எல் - 314 விமானம் மூலம் கோலாலம்பூருக்கு அனுப்பி வைக்கப் பட்ட

04

### கடத்தியவர்கள் பாதுகாப்புத் தரப்பினரே

### பரபரப்புத் தகவலை வெளியிட்டார் திமுத்து

கொழும்பு, ஏப்.11
பாதுகாப்புத் தரப்பினராலேயே நான் கடத்தப்பட்டதாக உணர்ந்தேன் என முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் பிறேமகுமார் குணரட்ணத்துடன் கடத்தப்பட்ட, அந்தக் கட்சியின் பெண்கள் பிரிவுத் தலைவி திமுத்து ஆட்டிக்கல நேற்றுத் தெரிவித்தார். இவர்கள் இருவரும் கடத்தல்காரர்களால் விடுவிக் கப்பட்டனர். இதையடுத்து, நடந்தது என்ன என்ற விவரங்களை திமுத்து வெளியிட்டார்.

கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள மடிவெல பகுதியில் வைத்து கடத்தல்காரர்கள் இவரை விடுவித்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் கொண்டுவரப்பட்டு இறக்கி விட்ட கடத்தல்காரர்கள் ஓட்டோவில் செல்வதற்கான பணத்தையும் கொடுத்து அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து திமுது ஆட்டிக்கல கட்சிப் பணியகத்துக்கு காலை 10 மணியளவில் சென்றடைந்தார்.

விடுவிக்கப்பட்ட பின்னர் மடிவெலவில் உள்ள முற்போக்கு சோசலிசக் கட்சியின் தலைமையகத்தில் செய்தி

04

## பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு – எதிர்க்கட்சி இணக்கம் அவசியம்

### இந்தியாவில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.11
அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதுதொடர்பில் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

டில்லியில், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை நேற்று சந்தித்து ரணில் விக்கிரமசிங்க இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் இந்தியாவின் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுவாழ்வுப் பணிகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக எஸ்.எம். கிருஷ்ணாவுடன் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவித்தார்.

04

## பளையில் இரவு விபத்து இளம் குடும்பஸ்தர் சாவு

### மற்றொருவர் படுகாயம்

தென்மராட்சி, ஏப்.11
பளை ஏ-9 வீதியில் கொட்டடிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்து ஒன்றில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்தார். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோசமாகச் சேதமடைந்தது.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவராஜசிங்கம் ஜெயராஜ் (வயது-31) என்பவரே மரணமடைந் தவராவார். அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் கஜேந்திரன் (வயது-26) என்பவரே படுகாயமடைந் தவராவார்.

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணத்தில் குற்றங்களின் அதிகரிப்பு இயல்பு நிலை திரும்பியதற்கான அறிகுறி

## இப்படி விளக்கமளிக்கிறார் முன்னாள் சட்டமா அதிபர்

கொழும்பு, ஏப். 11

யாழ்ப்பாணத்தில் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றமையானது அங்கு இயல்பு நிலை திரும்பி இருக்கிறது என்பதையே வெளிப்படுத்துகிறது என்று கூறியிருக்கிறார் முன்னாள் சட்ட மா அதிபரும் அமைச்சரவை ஆலோசகருமான மொஹான் பீரிஸ்.

'லக்பிம' ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். கடந்த 29 வருடங்களாக யாழ்ப்பாணம் படையினரின் இறுக்கமான கட்டுப்பாட்டில் இருந்ததால் அங்கு மக்களால் குற்றங்களைச் செய்ய முடியவில்லை என்றும் இப்போது இயல்பு நிலை திரும்பியுள்ளதால் குற்றவாளிகளும் தமது பணிகளுக்குத் திரும்பியுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அந்தச் செவ்வியில் பீரிஸ் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு-கிழக்கில் துணைப் படைகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட்டு விட்டன. அரசுக்கு ஆதரவான குழுக்களிடம் இருந்துகூட முழுமையாக ஆயுதங்கள் களையப்பட்டுள்ளன. பாதுகாப்புச் செயலாளர் இந்த விடயத்தில் மிகத் தீவிரமாகச் செயலாற்றினார். விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தினார்.

அங்கு ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. யாராவது ஆயுதங்களுடன் காணப்படுவதானால் அல்லது நடமாடுவதானால் அவற்றைப் பயன்படுத்துவதற்கான கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகிறது.

''துணைப்படைகள் ஆயுதங்களுடன் பகிரங்கமாக நடமாடுவதில்லைதான். ஆனால், ஆயுதங்களுடன் ஆங்காங்கே கொள்ளைகள் நடக்கின்றனவே?''



நாடு முழுவதும்தான் ஆயுதக் கொள்ளைகள் நடக்கின்றன. என்ன வித்தியாசம் என்றால்..... குற்றங்களே நடக்காமல் இருப்பதற்கு, யாழ்ப்பாணம் ஒன்றும் இந்த பூமியில் இருக்கும் சொர்க்கம் அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள்.

நாடு முழுவதும்தான் ஆயுதக் கொள்ளைகள் நடக்கின்றன. என்ன வித்தியாசம் என்றால்..... குற்றங்களே நடக்காமல் இருப்பதற்கு, யாழ்ப்பாணம் ஒன்றும் இந்த பூமியில் இருக்கும் சொர்க்கம் அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள். கடந்த 29 வருடங்களாக அங்கு குற்றங்கள் நடக்கவில்லை. ஏனென்றால் அந்தப் பகுதி அளவுக்கதிகமாக இராணுவ மயப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் பொதுமக்கள் குற்றங்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் இருக்கவில்லை. இப்போது அங்கு நடக்கும் குற்றங்கள் எதனைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன என்றால், யாழ்ப்பாணத்தில் அமைதி திரும்பி விட்டது என்பதைத்தான்.

தொழில்ரீதியானகொள்ளையர்களும் திருடர்களும் தமது வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். 'பிக்பொக்கெட்' திருடர்களும் தங்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். அதேபோன்றுதான் பாலியல் வன்புணர்வுகளும் கொலைகளும். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால் துர்நடத்தைகளும் குற்றங்களும் அங்கு நிகழ ஆரம்பித்துள்ளன.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தை பாதுகாப்பான இடமாகப் பேணி வந்த, அது அனுபவித்து வந்த மேலதிக பாதுகாப்பு வசதிகள் இப்போது அங்கு இல்லாமல் போய்விட்டது. வேறு வார்த்தைகளில் சொன்னால், படைக் குவிப்பால் இதுவரை காலமும் ஒடுக்கப்பட்டிருந்த குற்றங்கள் உள்ளடங்கலான பொதுமக்களின் நடத்தை மற்றும் பொது வாழ்க்கை என்பன அங்கு மீளத் திரும்பியுள்ளன.

இதைக் கையாள்வதற்கு அந்தச் சமூகம் தனக்கான சொந்தப் பொறிமுறைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நாட்டின் ஏனைய இடங்களைப் போலவே பொலிஸார் இந்த விடயங்களைக் கையாள்வார்கள்.

நாட்டின் வேறு எந்த ஒரு பகுதியையும் போலவே யாழ்ப்பாணமும் இன்று மாறிவிட்டது. அங்கு மக்கள் வாழ்கிறார்கள், சிரிக்கிறார்கள், சாகிறார்கள். (உ)

# அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவே குணரட்ணத்தின் கடத்தல் நாடகம்

## கோத்தபாய ராஜபக்ஷ சீற்றம்

கொழும்பு, ஏப் 11

கடத்தப்பட்டதாக பிரசாரப்படுத்தப்பட்ட ஜே.வி.பி. மாற்றுக்குழுவின் குணரட்ணம் என்பவர் பொலிஸில் சரணடைந்துள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கான நாடகமே இது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் இரவு அரச தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் நிலவுகின்ற சுமுக நிலையைக் குழப்புவதற்குப் பலர் முயன்று வருகிறார்கள். அதில் ஓர் அங்கம் தான் கடத்தல் நாடகங்கள். அண்மையிலும் குணரட்ணம் என்பவர் கடத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகின. இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்ச்குச் சற்று முன்பாக பொலிஸில் குணரட்ணம் சரணடைந்துள்ளதாகத் தகவல் கிடைத்தது. எனினும் அதுபற்றி முழுமையாக இன்னமும் அறிய முடியவில்லை.

கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து குணரட்ணம் தொடர்பான பரபரப்பான செய்திகள் வெளிவரத் தொடங்கின. நாட்டில் புரட்சி ஏற்படுத்தப்போவதாகவும் முன்னாள் விடுதலைப் புலிகளின்போராளிகளை இணைத்துப் புரட்சி செய்யப் போவதாகவும் செய்திகள் வெளிவந்தன. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான இந்தச் செய்தி தொடர்பாக நாமும் தேடிப்பார்த்தோம்.

குறிப்பாக, ஆஸ்திரேலியத் தூதருக்குக் கடிதம் மூலம் விளக்கம் கேட்டிருந்தேன். ஆஸ்திரேலிய வதிவுரிமை பெற்றுள்ள, ஆஸ்திரேலிய கடவுச் சீட்டில் இலங்கை வந்துள்ள குணரட்ணம் என்பவர் பற்றிய முழு விவரத்தினை வழங்குமாறு தூதுவரிடம் கேட்டிருந்தேன். ஆனால் குணரட்ணம் கடத்தப்பட்டதாகச் செய்தி வெளியாகும்வரை அவர்பற்றிய விவரங்களை ஆஸ்திரேலிய தூதுவர் வழங்கியிருக்கவில்லை.

குணரட்ணம் கடத்தப்பட்டதாகச் செய்தி வெளியானவுடன் ஆஸ்திரேலியத் தூதுவர் என்னைத் தொடர்புகொண்டு மேற்படி நபர் கடத்தப்பட்டுள்ளதாக முறையிட்டார். நான் அவரிடம் தெளிவாகக் கூறினேன், குணரட்ணம் பற்றிய தகவல்களை வழங்குமாறு தங்களுக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பியிருந்தேன். அதற்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை. முதலில் அதனை வழங்குங்கள் என்று தெளிவுபடுத்தினேன். அதன்பின்னர் ஆஸ்திரேலியத் தூதரகம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது. அதில் நொயல் முதலிகே என்ற நபர் ஆஸ்திரேலிய வதிவுரிமை பெற்றுள்ளதாகவும் அவர் தற்சமயம் கடத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

நாங்கள் குணரட்ணம் என்று அறிந்துள்ளபோது, இப்போது புதிதாக நொயல் முதலிகே என்ற பெயர் அடிபடுகிறது. நாட்டை ஏமாற்றி வெளிநாடுகளில் வேறு பெயர்களில் தஞ்சம் புகுந்துள்ளவர்களின் சதிவேலைகளுக்கு இச்சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டு. இவரைப்போல் பலர் இலங்கையில் காணாமல்போனதாக காட்டிக்கொண்டு வெளிநாடுகளில் வேறு பெயர்களில் குடியுரிமை பெற்று சுகபோகம் அனுபவித்து வருகிறார்கள்.-என்றார்.(த)

# ஆள் கடத்தல்கள், கொலைகளுக்கு தொடர்ந்தும் இடமளிக்க முடியாது

## 40 அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசுக்குக் கடிதம்

கொழும்பு,ஏப் 11

ஆள்கடத்தல்கள் மற்றும் கொலைகளுக்குத் தொடர்ந்தும் இடமளிக்க முடியாது எனவும் அரசியல், நிறம் என்ற பாகுபாடு இன்றி இதற்கு எதிராக அனைவரும் ஒன்றிணையப் போவதாகவும் அரசியல் கட்சியின் தலைவர்கள், அதன் பிரதிநிதிகள், புத்திஜீவிகள்,தொழிலாளர் அமைப்புகள், சிவில் அமைப்புகள், ஊடக அமைப்புகள், வெகுஜன அமைப்புகள் என 40 அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று அரசிடம்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

பாதாள உலகக் குண்டர்கள், போதைப் பொருள் வியாபாரிகள் என அடையாளப்படுத்தப்பட்டவர்களில் ஆரம்பித்த இந்த ஆள்கடத்தல் மற்றும் காணாமல் போகச் செய்யும் நடவடிக்கைகள் தற்போது, அரசியல் பிரதிநிதிகளை நோக்கி திரும்பியுள்ளதுடன், அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் கடத்திச் செல்லுமளவுக்குச் சென்றுள்ளது. இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 54 பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் குறித்து அரசே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் இந்த அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

குணரட்ணம் மற்றும் ஆட்டிகல ஆகியோர் குற்றம் செய்திருந்தால், அவர்களுக்கு நாட்டின் சட்டத்தின் படி தண்டனை வழங்கப்படவேண்டும். அதனை விடுத்து, நாட்டில் தொடர்ந்தும் காட்டுச் சட்டம் அரசாள இடமளிக்க முடியாது. அரசு தனது அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்காக எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் எதிர்க் கட்சியினரைக் கொலை செய்து வருகிறது. இந்த நிலைமை நீடித்தால் நாட்டில் எஞ்சியிருக்க போவது, கடத்தல் மற்றும் காணாமல் போகும் சம்பவங்களுக்கு ஆணையிடுபவர்களும், அதற்குப் பங்களிப்பு வழங்குபவர்களும் மாத்திரமே எனவும் அந்த அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

எனவே கடத்தல்கள், காணாமல் போதல்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் எனவும் அந்தஅமைப்புக்கள்கோரிக்கை விடுத்துள்ளன. (த)

# பாணந்துறையில் மூழ்கும் கப்பல்

பாணந்துறை கடற்பரப்பில் 600 தொன் மசகு எண்ணெயுடன் மூன்று வருடங்களாக நங்கூரமிடப்பட்டுள்ள எண்ணெய்க் கப்பலொன்று எந்நேரமும் கடலினுள் மூழ்கும் அபாயமுள்ளது என சூழல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சைப்பிரஸுக்குரிய இந்தக் கப்பல் 2009ஆம் ஆண்டு இலங்கை வந்துள்ளது. இந்தக் கப்பலின் கப்டனுக்கு எதிராக உள்நாட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால் குறித்த கப்பல் இலங்கையில் நங்கூரமிடப்பட்டது. இந்தக் கப்பல் ஒரு இடத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளதால் கப்பலின் பாகங்கள் மிகவும் மோசமான முறையில் துருப் பிடித்து வருகின்றன. கடலினுள் இந்தக் கப்பல் எந்நேரமும் மூழ்கும் அபாயமுள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அனைத்துலக அணுசக்தி மாநாட்டில் கூடங்குளம் மின் நிலையப் பிரச்சினை

## அமைச்சர் சம்பிக்க கிளப்புவார்

கொழும்பு,ஏப் 11

தென்னிந்தியக் கரையோரத்தில் மேற்கொள்ளப்படும் அணுமின் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக இலங்கை அரசு அடுத்து நடைபெறும் அனைத்துலக அணுசக்தி அமைப்பின் கூட்டத் தொடரில் பிரச்சினை எழுப்பவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள அனைத்துலக அணுசக்தி அமைப்பின் கூட்டத் தொடரில் தென்னிந்திய கரையோரத்தில் நிறுவப்படும் அணுமின் ஆலைகள் தொடர்பாக இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைக்கவுள்ளதாக இலங்கையின் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவில் நிறுவப்படும் அணுமின் ஆலைகள் இலங்கைக்கு அச்சுறுத்தலை விளைவிக்கும் என நடந்து முடிந்த அனைத்துலக அணுசக்தி அமைப்பின் கூட்டத்தொடரில் எடுத்துக் கூறப்பட்டதாகவும், இவ்வாறு [illegible]படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் தலையீடு செய்யுமாறு இந்த அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர உடன்படிக்கை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அனைத்துலக அணுசக்தி அமைப்பு பரிந்துரைத்திருந்தது.

'இது தொடர்பில் வெளியுறவு அமைச்சின் ஊடாக நாங்கள் திட்ட வரைவொன்றை அனுப்பியிருந்தோம். இதற்கு இந்தியத் தரப்பு குறிப்பு வடிவில் பதில் அனுப்பியிருந்தது' எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

தென்னிந்தியாவில் நிறுவப்படும் அணுமின் ஆலைகளால் ஏற்படவல்ல அணு அழிவுகளை தடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை உருவாக்கி அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளில் இலங்கை ஆர்வமாக இருந்தபோதிலும், இது தொடர்பாக இந்திய அரசு பரந்தளவிலான விடயங்களை கலந்துரையாடுவதற்கான திட்ட வரைவொன்றை அனுப்பியிருந்தது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை அதிகாரிகளுக்கு யாழ்.பொலிஸார் இடையூறு

## விசாரணைகளை ஆரம்பித்தது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஏப்.11

*இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய கிளையின் ஆணையாளர் மற்றும் ஊழியர் ஒருவர் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு மாதாந்தப் பரிசோதனைகளுக்காக சென்ற சமயம் இடையூறு விளைவிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அதன் தலைவர் உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் பிரியந்த பெரேர தெரிவித்தார்.*

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாதந்தோறும் சகல பொலிஸ் நிலையங்களுக்குப், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினர் சென்று, அங்கு யாராவது சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா? அல்லது சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனரா? என்று பரிசோதனைகள் மேற்கொள்வது வழக்கம்.

இதற்காக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையின் ஆணையாளரும் சக ஊழியர் ஒருவரும் யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

அந்தச் சமயம் அங்கு கடமையிலிருந்த பொலிஸார், மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரிகள் தமது பணிகளை மேற்கொள்வதற்கு இடையூறு விளைவித்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்.பிராந்திய கிளையின் ஆணையாளரால் எமக்கு உடனடியாகவே முறைப்பாடு செய்யப்பட்டது. அதேவேளை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால், யாழ். நீதிவான் நீதிமன்றில் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பொலிஸாரின் கடமை நேரத் தின்போது மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இடையூறு விளைவித்தனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை சட்டக்கோவையின் பிரகாரம் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாதென்பதால், இந்த வழக்கு பொலிஸாரால் பின்னர் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இருப்பினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகத் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்தவாரம் இடம்பெற்ற விசாரணையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியை அழைத்து கடுமையாக எச்சரித்து விடுவித்தோம். அடுத்த விசாரணை இன்னும் இரண்டு வாரங்களில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பொலிஸ் நிலையங்களில் சட்டத்துக்குப் புறம்பாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலோ அல்லது பொலிஸ் நிலையத்தில் வைத்துச் சித்திரவதை செய்தாலோ மனித உரிமை ஆணைக் குழுவுக்குத் தொலைபேசியூடாக 24 மணி நேரமும் அறிவிக்க முடியும்.

அண்மையில் கூட கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் சட்டவிரோதமாக சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமை ஆணைக் குழுவுக்குத் தொலைபேசியூடாக தெரிவிக்கப்பட்டது.

நாம் நேரடியாகச் சென்று பார்வையிட்ட போது 2 பெண்கள் உட்பட 5 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வேறு உள்நோக்கங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம்- என்றார். (த-5)

## நாகர் கோவிலில் மீளக் குடியமர இதுவரை 60 குடும்பங்கள் பதிவு

வடமராட்சி, ஏப். 11

நாகர் கோயில் கிழக்குப் பகுதியில் மீளக் குடியேறுவதற்கு நேற்று செவ்வாய் நண்பகல் வரை 60 குடும்பங்கள் பதிவு செய்துள்ளன.

இந்தப் பகுதியில் மீளக் குடியேறுவதற்கு ஏற்கனவே 186 குடும்பங்களைச் சேர்ந்த 600 க்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து வசிக்கும் பிரதேச செயலகப் பகுதியில் தம்மைப் பதிவு செய்திருந்தனர்.

கடந்த 6 ஆம் திகதி இந்தப் பகுதியில் சம்பிரதாய பூர்வமாக மீளக்குடியேற்றம் இடம் பெற்றதைத் தொடர்ந்து, மீளக்குடியேறுவோர் அந்தப் பகுதிக்கான கிராமசேவையாளர் ந.பாலசுந்தரத்திடம் நேற்று முன்தினம் திங்கள்கிழமை முதல் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

இதற்கமைவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை 40 குடும்பங்களும், நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் வரை 20 குடும்பங்களும் மீளக்குடியேறுவதற்காகப் பதிவு செய்துள்ளன.

**600 இற்கும் அதிகமானோர் வாழ்ந்த இந்தப் பகுதியில் இப்போது மீளக்குடியமர 60 குடும்பங்கள் மட்டுமே பதிவு செய்துள்ளன.**

மீளக்குடியேறவிரும்பும் குடும்பங்கள் தொடர்ந்து பதிவு செய்துவருவதாகவும், அதன் பின்னர் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் நாகர்கோயில் கிழக்கு கிராம சேவையாளர் ந.பாலசுந்தரம் தெரிவித்தார். (த-8)



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் சமுர்த்தி புத்தாண்டுச் சந்தை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், பிரதேச தலைமைத்துவ சமுர்த்திப் பணிப்பாளர் இ.பாலகரன் ஆகியோர் கூட்டாக புத்தாண்டுச் சந்தையை நாடாவெட்டி திறந்து வைத்தனர். (த-9)

## தனங்கிளப்பு இளம்பெண் கொலையின் பின்னணி காதல்

### சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஏப்.11

கடந்த நவம்பர் மாதம் தனங்கிளப்பு வயல் வெளியில் படுகொலை செய்து புதைக்கப்பட்ட இளம் பெண் சுப்பிரமணியம் புஷ்பமலர் (வயது 24) என்பவரின் கொலைக்கு காதல் விவகாரமே காரணம் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் கழுத்து நெரித்தே கொலை செய்யப்பட்டுள்ளதாக முதல்கட்ட விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன.

இந்தக் கொலை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கொலைசெய்யப்பட்ட பெண்ணின் காதலன் எனக் கூறப்படும் சண்முகம் ஜெயமோகன் (வயது 28) என்பவரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிவான் முன்பாக முன்னிலைப்படுத்தினர். இவரை ஏப்ரல் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கைது செய்யப்பட்ட தொக்கையன் என அழைக்கப்படும் கதிரவேலு நவரத்தினம் (வயது 52), சுப்பிரமணியம் சுரேஷ் (வயது 42) ஆகியோரைப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, கதிரவேலு நவரத்தினம் என்பவரை ஏப்ரல் 20 ஆம் திகதி வரையும் சுப்பிரமணியம் சுரேஷ் என்பவரை ஏப்ரல் 17 ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரசேகர, புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஜெயந்த [illegible] மணியரசன் ஆகியோர் விசாரணை நடத்தியபோது சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

''கிறீஸ் பூதம்'' நடமாடியதாக கூறப்பட்ட காலத்தில் இந்த இளம்பெண் தனது வீட்டுக்கு அருகில் உள்ள தொக்கையன் என்பவரின் வீட்டில் இரவு வேளைகளில் தங்கியுள்ளார். பெண்ணின் வீட்டுக்கு மறுபக்கத்தில் ஜெயமோகனின் சகோதரியின் வீடு உள்ளது. சகோதரியின் வீட்டுக்கு வரும் ஜெயமோகனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் காதல் ஏற்பட்டுள்ளது. இதனால் பெண் இரண்டு மாதக் கர்ப்பிணியானார்.

குறித்த ஜெயமோகன் செம்பியன்பற்றைச் சேர்ந்த பெண் ஒருவரை ஐந்து வருடங்களுக்கு மேலாக காதலித்து வருவதால் இந்த யுவதியை கைவிடுவதற்குத் தொக்கையனின் உதவியை நாடியுள்ளார். அவரின் திட்டப்படி குறித்த தினத் தில் தொலைபேசி மூலம் பெண்ணை வரவழைத்து அழைத்துச்சென்ற ஜெயமோகன், தொக்கையனிடம் கையளித்துள்ளார். தொக்கையனும் அவரால் அழைத்துச் செல்லப்பட்ட சுரேஷ் என்பவரும் பெண்ணின் கழுத்தை நெரித்துக் கொலை செய்து புதைத்துள்ளனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

### நிகழ்வுகள் இன்று

**இசை விருந்து**

சாவகச்சேரி நகராட்சி மன்ற பொது நூலகங்கள் இணைந்து "ஈஸ்டர் இசை விருந்தும் மழலைகள் மகிழ் கீத ஆராதனையும்" நிகழ்வு பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தேவாலயங்களின் நிகழ்வுகளும் நகராட்சிமன்ற உத்தியோகத்தர்களின் நிகழ்வுகளும் இடம்பெறும்.

நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் செல்வி கே.துரைராஜா கலந்து கொள்வார். (த-9)

**ஒருங்கிணைப்பு கூட்டம்**

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

**கருத்தரங்கு**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான சிறுவர் உரிமைகளும் கட்டாயக் கல்வியும் தொடர்பான கருத்தரங்கு காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

**புத்தாண்டுச் சந்தை**

திவிநெகும திட்டத்தின் கீழ் புத்தாண்டு தினச் சந்தை இன்று காலை 9மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் உதயன் கலந்து கொள்வார். (15)

**நீர்வேலி விபத்தில் தம்பதியர் படுகாயம்**

நீர்வேலியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மினி பஸ் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருடன் சென்ற அவரது மனைவியும் கடும் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இவர் நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியை ஆவார்.

சம்பவத்தில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த நாகமுத்து சோதிலிங்கம் (வயது -52) சோதிலிங்கம் கணேசமலர் (வயது-50) ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்கள் தமது வீடு நோக்கித் திரும்பிய போது பின்னே சென்ற மினி பஸ் அவர்களை மோதி சிறிது தூரம் இழுத்துச் சென்று நின்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (த-4-11-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தீர்மானம் இலங்கைக்கு கெடுதல்

01↘ டுக்கு நல்லதல்ல. இப்படிப்பட்ட ஒரு நிலை நாட்டுக்கு வந்தது குறித்து நான் தனிப்பட்ட ரீதியில் பெரும் துக்கமடைந்திருக்கிறேன். இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு நிலை வர ஏன் நாங்கள் விட்டோம் என்றுதான் அதிகம் கவலைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், 2009ஆம் ஆண்டு இந்தியா எங்களை ஆதரித்தது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா எங்களுக்காக அப்போது பரப்புரை செய்தது. அதனால் நாங்கள் வென்றோம். ஆனால் இரண்டுவருடகாலத்தில் இந்தியாவுடனான உறவுகளில் ஏதோ மிகப் பாரதூரமானதாக நடத்திருக்க வேண்டும். அதனால்தான் இந்தியா எதிர்த்து வாக்களித்தது.

இந்தியா அந்த முடிவை சும்மா எழுந்தமானத்தில் எடுத்தது என்று நான் ஒருபோதும் எண்ணமாட்டேன்.

"இந்தியாவின் இந்த முடிவு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை கொலை செய்யப்போகிறது என்று அமைச்சர்கள் தெரிவிக்கிறார்களே.. அது உண்மையாகுமா?"

இலங்கையின் கொள்கைகள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் அரசுகளில் தலையிடுவதையோ தடுப்பதையோ மிக அண்மைக்காலம் வரையில் இந்தியா செய்ததில்லை. இலங்கையில் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வரும்படி இந்தியா கேட்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். தனிப்பட்ட ரீதியில் எனக்கு அது பற்றி அதிகம் தெரியும். அதேநேரத்தில் போரின் முடிவு என்பது அமைதியைக் கொண்டு வந்துவிடும் என்று நான் ஒரு போதும் கருதவில்லை. ஆனால், அது தீவிரவாதத்தை அகற்றி அமைதியை ஏற்படுத்துவதற்கான முதல்படியாக இருந்தது. அதன் பின்னர் செய்வதற்கு எவ்வளவோ இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போதும், இலங்கை அரசு நினைத்தால், முன் முயற்சிகளை எடுத்தால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியமானது - என்றார். (உ)

## நன்றி கூறுகிறது ஆஸ்திரேலியா

01↘ மற்றும் வேறு அமைப்புகளுக்கு ஆஸ்திரேலிய அதிகாரிகள் நன்றி தெரிவித்துள்ளனர்' என ஆஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்களத்தின் பேச்சாளர் கூறினார்.

ஆஸ்திரேலியாவிலுள்ள இந்த நபரின் குடும்பத்துடன் கான்பெராவிலுள்ள தூதரக அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

# சர்வதேசத்தின் உடனடித் தலையீடே கணவரின் விடுதலைக்குக் காரணம்

## குணரட்ணத்தின் மனைவி கூறுகிறார்

மெல்போர்ண், ஏப் 11

சர்வதேசத்தின் உடனடித் தலையீடே தனது கணவரான பிரேமகுமார் குணரட்ணத்தின் விடுதலைக்குக் காரணம் என மனைவி சம்பா சோமரத்ன தெரி வித்துள்ளார்.

கொழும்பில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ள தனது கணவரான குணரட்ணம் தன்னுடன் தொலைபேசியில் உரையாடி, ஆஸ்திரேலியா நோக்கி வந்து கொண்டிருப்பதாகக் கூறினார் எனவும் சம்பா சோமரத்ன கூறினார்.

இலங்கையில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம், பிரேமகுமார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின் நாடு கடத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

இந்நிலையில் தனது கணவர் தன்னுடன் தொடர்பு கொண்டு,

"நான் ஆகாயத்தில் இருக்கிறேன், நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்," என்று கூறியதாக சம்பா சோமரத்ன குறிப்பிட்டார்.

குணரட்ணம் தமிழராக இருந்த போதிலும் புலிகள் இயக்கத்துடன் எவ்வித தொடர்பையும் பேணவில்லை எனவும் இலங்கையில் இடம்பெறும் மோசடிகளுக்கு எதிராகச் செயற்படவே கட்சி ஆரம்பிக்க முன்வந்ததாகவும் சம்பா சோமரத்ன மேலும் கூறினார். (த)

# கடத்தியவர்கள் பாதுகாப்புத் தரப்பினரே

01↘ யாளர்களைச் சந்தித்த திமுது ஆட்டிகல என்ன நடந்தது என்று விவரித்தார்.

"வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆறு பேர் எனது கண்களைக் கட்டி கடத்திச் சென்றனர். அவர்கள் என்னை ஒரு அறைக்குள் அடைத்து வைத்திருந்தனர்.

"அதிகாலை 5 மணியளவில் கடத்தல்காரர்கள் குணரட்ணத்தையும் என்னையும் விசாரணைக்கு உட்படுத்தினர்.

"விடுதலைப் புலிகளுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு? புதிய கட்சி ஆரம்பிப்பதன் பின்னணியில் இருப்போர் யார்? நீங்கள் இல்லையென்றால், தலைவர் இல்லாமல் உங்களின் கட்சியின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு விடுமா என்று பல கேள்விகளை அவர்கள் எழுப்பினர்.

"அடுத்த நாள் இரவு நான் வேறொரு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்றுக் காலை வரை அங்கேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தேன்.

"குமார் நாடு கடத்தப்பட்டுவிட்டதாக அவர்கள் என்னிடம் கூறினர். பின்னர் என்னையும் நன்றாகவே விடுவித்தனர்.

"தம்மை அடையாளம் காண முனையவோ, வாகன இலக்கத்தைக் குறிப்பெடுக்கவோ கூடாது என்று கடத்தல்காரர்கள் என்னிடம் கூறினர்.

"தாங்கள் விலகிச் செல்லும் வரை என்னை திரும்பிப் பார்க்கக் கூடாது என்றும் கூறியிருந்தனர். அந்த வாகனத்தின் இலக்கம் 2801 என்பது மட்டும்தான் எனக்கு நினைவில் உள்ளது.

"இதில் அரசு சம்பந்தப்படவில்லை என்றும் கடத்தல்காரர்கள் என்னிடம் கூறியிருந்தனர். கடத்தல்காரர்கள் தமக்கிடையே உரையாடிக் கொள்ளும்போது 'சேர்' என்ற சொல்லையே பயன்படுத்திக் கொண்டனர்.

"பொலிஸார் மத்தியில் தான் இவ்வாறு பேசிக் கொள்ளும் வழக்கம் உள்ளது." - இவ்வாறு திமுது ஆட்டிக்கல தெரிவித்தார். (த-சி)

# கடத்தப்பட்ட குணரட்ணத்தை ஆஸிக்கு நாடு கடத்தியது அரசு

01↘ இவர், அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்கு மாற்று விமானத்தில் பயணத்தைத் தொடர்வார்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் கொழும்பு குற்றப் புலனாய்வுப்பிரிவில் குணரட்ணம் தானாக முன்வந்து சரணடைந்திருந்தார்.

தன்னை அடையாளம் தெரியாத ஆயுதக்குழுவினர் கடத்திச் சென்றனர் எனவும், வான் ஒன்றில் ஏற்றி தெமட்டகொட பகுதிக்குக் கொண்டு சென்றனர் எனவும் அவர் பொலிஸாரிடம் கூறியிருந்தார்.

இதையடுத்து ஆஸ்திரேலியத் தூதரக அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணியகத்துக்குச் சென்று அவரைப் பொறுப்பேற்றனர்.

அவர்களின் பாதுகாப்பு வழித்துணையுடன், கடுமையான பொலிஸ் பாதுகாப்புடன் குணரட்ணம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இவர் ஏற்றி விடப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம் புறப்பட்டுச் செல்லும்வரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெருமளவு பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர் எனத் தெரியவருகிறது.

# பளையில் இரவு விபத்து இளம் குடும்பஸ்தர் சாவு

01↘ மல்லாவியில் நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றுக்காக இவர்கள் உரும்பிராயில் இருந்து பயணித்தபோதே இரவு 10.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பளைப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் உள்ள பள்ளம் ஒன்றுக்குள் பாய்ந்துள்ளது. அதனால் அதில் பயணித்த இருவரும் சுமார் 15 மீற்றர் தூரத்துக்கு மோட்டார் சைக்கிளுடன் இழுபட்டுச் சென்றுள்ளனர். இதில் குடும்பஸ்தரான ஜெயராஜ் அந்த இடத்திலேயே மரணமானார். மற்றவர் படுகாயமடைந்தார்.

விபத்து நடைபெற்ற போது வீதியில் எவரும் பயணிக்காமையால் விபத்துச் சம்பவம் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. நள்ளிரவின் பின்னரே காயமடைந்த இளைஞர் வீதிக்கு வந்து வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வாகனத்தை மறித்துத் தகவல் கூறினார். இதன்பின்னர் பளைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்து உயிரிழந்தவரின் உடலையும், காயமடைந் தவரையும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். காயமடைந்தவர் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (த-9-17)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு – எதிர்க்கட்சி இணக்கம் அவசியம்

01↘ அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினோம். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே நிலைப்பாடு. அதுதொடர்பாக, அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமாகி வருவதாகவும், அது விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும் ரணில் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப் பணிகள் நடைபெறுகின்றன. அதை மறுக்க முடியாது. ஆனால், அதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அது எதிர்க்கட்சிகளுக்கு கவலையளிக்கிறது. கடந்த மார்ச் மாதம் நான் வடமாகாணத்துக்குச் சென்றிருந்தேன். அதுதொடர்பாக முழு அறிக்கையும் தயாராக உள்ளது. மே மாதம் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது அதுபற்றி பிரச்சினை எழுப்புவோம் . வடக்கில் மீள்குடியேற்றப் பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்காக அரசுக்கு நாங்கள் அழுத்தம் கொடுப்போம் எனவும் அவர் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

மேலும், வன்னியில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பது குறித்தும் கருத்து வெளியிட்ட அவர் மீள்குடியேற்றப்படாது பலர் இன்னும் முகாம்களில் இருக்கிறார்கள். சிலர் வெளியில் இருக்கிறார்கள். கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் விரைவுபடுத்த வேண்டும் என்றும் நாங்கள் கருதுகிறோம்.

இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழு இலங்கை வருவதை வரவேற்பதாகத் தெரிவித்த அவர், நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் அந்தக் குழுவை தனித்தனியாகச் சந்திக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

# அரசியல் தீர்வுத் திட்டத்தை பகிரங்கமாக அறிவியுங்கள்

01↘ டியுள்ளார்.
இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் அரசு இரட்டைவேடம் போடுகின்றது. ஜெனிவாவில் ஒன்றையும், உள்நாட்டில் இன்னுமொன்றையும் கூறுகின்றது. நாம் எதை நம்புவது?

ஜனாதிபதியே நியமித்த [illegible]ல்லிணக்க ஆணைக்குழு[illegible]ின் சிபாரிசுகளை உதா[illegible]னம் செய்யும் அளவுக்கு [illegible]ரசின் நம்பகத்தன்மை [illegible]ள்ளது. இந்த நிலையில் அரசின் செயற்பாடுகளில் நாம் எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்.

நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியன நட்டாற்றில் விடப்பட்டுள்ளன. எனவே, இவை இரண்டையும் நாட்டில் நிலைநாட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தெரிவுக்குழு என்ற மந்திரமோதும் அரசு தேசியப் பிரச்சினைக்குத் தனது தீர்வு என்னவென்பதை பகிரங்கப்படுத்தவேண்டும். முதற்கட்டமாக வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளை அரசு தீர்க்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும் - என்றார்.

# மக்களின் புதுவருடக் கனவை தகர்த்துவிட்டது மஹிந்த அரசு

01↘ அடுப்பு மூட்ட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

நாட்டில் சுதந்திரமாக வாழும் உரிமையை இழந்து தவிக்கும் மக்களை சர்வதேச நாணய நிதியத்திடம் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு அரசு தயாராகிவருகின்றது. அரசின் அராஜகங்களைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் மீண்டும் போராட்டங்கள் வெடிக்கும் என ஐ.தே.கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பெரும் வாழ்க்கைச் சுமையைத் தமது தலைகளில் சுமந்துகொண்டு துன்பப்படுகின்ற மக்கள், கடன்பட்டாவது சிங்கள-தமிழ்ப் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இந்நிலையில், காஸ் மற்றும் பால்மாவின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன என்ற அறிவிப்பு அரசிடமிருந்து எப்போதுவரும் என்ற அச்ச உணர்வுடனேயே அடுப்பு மூட்ட வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

புத்தாண்டிலாவது நாம் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று வாங்கவேண்டும், சிறிய வீடொன்றைக் கட்ட வேண்டும் என்ற கனவுடனும், எதிர்பார்ப்புடனும் ஏழைமக்கள் ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் கனவுகளை குழிதோண்டிப் புதைக்கும் வகையில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களின் விலையை அதிகரித்துள்ளதுடன், வட்டி வீதத்தையும் அதிகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து மக்களைத் தாரைவார்த்துக் கொடுக்கமாட்டோம் என ஆட்சிக்கு வரும்போது முழக்கமிட்ட அரசு, தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் மக்களைத் தாரைவார்த்துக் கொடுக்க முயற்சிக்கின்றது. அரசின் இந்த அசம்பாவிதச் செயல் ஒரு சிறு பிள்ளைக்குக் கூட நன்றாகத் தெரியும். அரசின் இந்தச் செயலின் மூலம் அதன் இரட்டைவேடம் நாட்டினுள் அம்பலமாகியுள்ளது.

அமைச்சர்களின் சுகபோக வாழ்க்கைக்கும் அவர்களின் சுயலாபத்திற்குமே அரசு இதுபோன்ற கடன் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அமைச்சர்களின் சுகபோகத்திற்காகப் பெறப்படுகின்ற கடனை மக்களே செலுத்தும் நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது.

போரின் பின்னர் நாம் சுதந்திரமாக வாழலாம், அரசிலிருந்து எமக்கு மானியங்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்புடன் காத்திருந்த மக்களுக்கு அரசு மேன்மேலும் கடன் சுமையேற்றி வருகின்றது.

எவரிடமும் மண்டியிட்டு நாம் மக்களைத் தாரைவார்த்துக் கொடுக்கமாட்டோம் என வீர வசனம் பேசிய அரசு, தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிட்டு மக்களைத் தாரைவார்த்துக் கொடுத்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து அவர்களைப் பின்தொடர்ந்தே புத்தாண்டைக் கொண்டாட வேண்டியுள்ளது.

தொடர்ந்தும் அரங்கேற்றப்பட்டுவரும் அரசின் அராஜக செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வரை நாடு முழுவதும் எமது அரச எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்துக் கொண்டேயிருக்கும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 சபைகளைக் கிளிநொச்சியில் மேம்படுத்த ரூ.254 மில்லியன்

## ஒதுக்கப்பட்டதில் மூன்றிலொரு பகுதியே கிடைத்தது

தென்மராட்சி, ஏப். 11

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்திக்காக 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் 254 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல் தெரிவித்தார்.

2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றின் அபிவிருத்திக்கும் 200 மில்லியன் ரூபா வழங்கப்படவேண்டும். அதனடிப்படையில் கிளிநொச்சியில் மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கும் 600 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டும்.

எனினும் மூன்று ஆண்டு காலத்தைக் கொண்ட இந்தத் திட்டத்தில் ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையிலே இப்போதே அரசினால் இந்த மூன்று சபைகளுக்கும் 254 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபைக்கு 90 மில்லியன் ரூபாவும் பூநகரி பிரதேச சபைக்கு 87 மில்லியன் ரூபாவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 77 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பணத்தினைக் கொண்டு, "2010ஆம் ஆண்டு மக்கள் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமைப் பட்டியல்படி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்'' என்று கொ.ஜக்சீல் தெரிவித்தார்.

"கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட நடைமுறைச் சாத்தியமானதும் அதிக நன்மை பயக்கக்கூடியதுமான வேலைத் திட்டங்களுக்கு உடனடிச் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சில வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன'' என்றும் அவர் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் இந்தத் திட்டம் நிறைவடைய உள்ள நிலையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட முழுப் பணத்தையும் உள்ளூராட்சி சபைகளால் செலவிட்டுதிட்டங்களைநடைமுறைப்படுத்த முடியுமா? அல்லது மீதிப் பணம் வழங்கப்படாமலேயே போகுமா என்று இந்த உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் வன்னியில் உள்ளூராட்சி சபைகளைத் தெரிவு செய்யப்படுவது ஆரம்பத்தில், தர நிர்ணயத்தின் அடிப்படையில் தடுக்கப்பட்டிருந்தது. அந்தத் தகவல்கள் ஊடகங்களில் வெளியாகிதைத் தொடர்ந்து அவையும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இப்போது, அரைவாசிக்காலம் முடிந்த நிலையில் ஒதுக்கப்பட்டதில் மூன்றிலொரு பகுதி நிதியே வழங்கப்பட்டுள்ளதால் சபை உறுப்பினர்களிடையே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது. (உ-9)

# கணினி மையத்தை இடித்து பொது நூலகத்தில் மலசலகூடம்

## ஆளுநரின் உத்தரவின்பேரில் நடவடிக்கை
## யாழ். முதல்வர் எதிர்ப்பு ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். பொது நூலகத்தில் அமைந்துள்ள கணினி மையத்தை உடனடியாக இடித்து அகற்றி விட்டு அங்கு நவீன மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி உத்தரவிட்டுள்ளார்.

நூலகத்தின் மாடியில் உள்ள மண்டபத்தில் நிகழ்வுகள் நடக்கையில் அங்கு வரும் விருந்தினர்களின் பயன்பாட்டுக்காக மலசலகூடம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது என்று மாநகர சபை தெரிவிக்கிறது. ஆனால், அகற்றப்படும் கணினி மையத்தை எங்கு மீள அமைப்பது என்பது குறித்து எந்தத் திட்டமும் மாநகர சபையிடம் இல்லை.

ஆளுநரால் முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்துக்கு யாழ். மாநகர முதல்வரோ, வடமாகாண முதன்மைச் செயலரோ எதிர்ப்பு எதுவும் தெரிவிக்காத நிலையில் கணினி மையத்தை அழித்துவிட்டு அந்த இடத்தில் மலசலகூடம் அமைப்பதற்கான திட்டத்தை இறுதி செய்து அதற்கான அனுமதியையும் ஆளுநர் வழங்கியுள்ளார்.

அவரது இந்தச் செயலை இலங்கைத் தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. தனது அதிருப்தியைத் தெரிவித்து அது ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கணினி மையமானது, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் அரசுகளின் நிதி உதவியின் கீழ் கட்டப்பட்டது. நூலக சிற்றுண்டிச் சாலை ஏற்கனவே வடமாகாண சபைக்கான மாநாட்டு மண்டபம் போன்று பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் மாடியில் மலசலகூடம் வேண்டும் என்பதற்காக கணினி மையத்தை இடிப்பதற்கு ஆளுநர் திட்டமிட்டுள்ளார்.

நூலகத்துக்கான மலசலகூடம் கீழ்த் தளத்தில் ஏற்கனவே இருக்கின்றது. எனினும் மாடியில் உள்ள மண்டபத்தில் நிகழ்வுகளுக்காக வரும் விருந்தினர்களுக்காகவே கணினி மையம் அகற்றப்பட்டு அந்த இடம் மலசலகூடம் ஆக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையானது, பல்வேறு தரப்பினரிடையே கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து கல்விமான்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் கவனத்திற்குத் தான் இந்த விடயத்தைக் கொண்டு சென்றுள்ளார் என்று போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

பொது நூலகத்தில் மக்கள் பயன்பாட்டுக்கு என இருந்தது ஒரேயொரு கணினி மையமே. அதனுடன் இணைந்து இறுவட்டுக்களைப் பார்ப்பதற்கும் கேட்பதற்குமான வசதிகளைக் கொண்டிருந்த இடமும் அழிக்கப்படவுள்ளது. (உ)

# மாதகல் கடலில் மூழ்கி ஒருவர் சாவு


யாழ்ப்பாணம், ஏப். 11

மதகல் கடலில் குளித்தவர் நீரில் மூழ்கி மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் சில்லாலை வடக்கு பண்டத்தரிப்பைச் சேர்ந்த மேரி ஜோசப் இம்மானுவேல் (வயது-65) என்பவரே மரணமானார்.

சடலம் சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர் குளித்துக் கொண்டிருந்த வேளை மாரடைப்பு ஏற்பட்டே மரணம் சம்பவித்ததாகக் கூறப்பட்டது. (4)



சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு மற்றும் உதவி தினத்தை முன்னிட்டு பொருளாதார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியிர் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

# காந்தியின் சிலை உடைப்புக்கு ஜெனிவா விவகாரம் காரணமல்ல

## இந்தியாவிடம் தெளிவுபடுத்தியது இலங்கை

கொழும்பு, ஏப்ரல் 11

மட்டக்களப்பில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை உடைக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அரசியலோ அல்லது ஜெனிவா விவகாரமோ சம்பந்தப்படவில்லை என இலங்கை அரசு இந்தியாவிடம் தெளிவுபடுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், குற்றவாளிகள் இனங்காணப்படும் பட்சத்தில் பாரபட்சமின்றி தண்டனை வழங்கப்படும் என்றும் புதுடில்லியிடம் இலங்கை உறுதியளித்துள்ளது.

மட்டக்களப்பில் மகாத்மா காந்தி உட்பட நான்கு வரலாற்றுத் தலைவர்களின் உருவச்சிலைகள் கடந்த 6ஆம் திகதி விஷமிகளால் சேதமாக்கப்பட்டன. இதனையடுத்து, இச்சம்பவத்தின் பின்னணியில் அரசியல் உள்ளது என விமர்சனங்கள் எழுந்தன.

அத்துடன், ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்பட்டதற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே சிலை உடைப்பு சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது என அரசுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், காந்தி சிலை உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்த இந்தியா, உடனடி விசாரணைக்குப் பணிப்புரை விடுத்திருந்தது.

இவ்வாறான ஒரு நிலையிலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கியுள்ளது எனத் தெரியவருகிறது.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பில் 'உதய'னிடம் கருத்து வெளியிட்ட இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்தவை வருமாறு:-

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது என்ற பகைமை உணர்வு காரணமாகவே மகாத்மா காந்தி சிலை சேதமாக்கப்பட்டுள்ளது என விமர்சனங்கள் எழுந்துள்ளமை தவறானது.

சிலை உடைப்பு சம்பவத்தின் பின்னணியில் அரசியலோ அல்லது ஜெனிவா விவகாரமோ சம்பந்தப்படவில்லை என நாம் இந்தியாவுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். இச்சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதையும் தெரிவித்திருக்கிறோம் - என்றார். (த-சி)

# வீதிகளில் குப்பை வீசிய 8 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வீதிகளில் குப்பை வீசிய 8 பேருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

சந்தேகநபர்களை யாழ். பொலிஸார் கைது செய்து நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தினர்.

சந்தேகநபர்கள் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

தவிர வீட்டுக்குப் பின்புறமாக பிளாஸ்ரிக் பொருள்களைச் சேகரித்து வைத்து டெங்கு பரவக் காரணமாக சூழலைப் பேணிய ஒருவருக்கு நீதிமன்றம் 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது. அண்மைப் காலமாக பொலிஸாரினால் வீதிகளில் குப்பைகள் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (4)

# பெண்களைக் கடத்தும் கீழ்த்தரமான அரசு

## சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, .11

நாங்களும் பெண்களை மதிக்கின்றோம், அவர்களுக்கு சம உரிமை கொடுக்கின்றோம் என முழக்கமிட்டு மகளிர் தினத்தைக் கொண்டாடிய அரசுதான், தலைமைத்துவம் ஏற்றுவருகின்ற பெண்களையும் கடத்தும் கீழ்த்தரமான செயலில் ஈடுபடுகின்றது.

- இவ்வாறு குற்றஞ்சாட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க, அரசின் அராஜகச் செயல்களால் சர்வதேசத்தினரிடையே இலங்கை தொடர்பில் விழுந்துள்ள கரும்புள்ளியை ஒரு நாளும் அழிக்கமுடியாது எனவும் கூறினார்.

அரசின் அராஜகச் செயல்கள் அனைத்தையும் உடனடியாக நிறுத்தி மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலையும் நாட்டில் ஏற்படுத்தவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வெள்ளை வான்களில் கடத்தல், கொலை, கொள்ளை, பணமோசடி என பல அராஜகச் செயல்களை அரசு நாட்டில் அரங்கேற்றி, மக்கள் சுதந்திரமாக வாழமுடியாத நிலையை நாட்டில் உருவாக்கியுள்ளது.

பெண்களுக்கும் நாம் தலைமைத்துவம் கொடுத்து அவர்களையும் கௌரவிப்போம் எனக் கூறிய அரசுதான் தற்போது அவர்களையும் கடத்துகின்றது. அதுமட்டுமல்லாது, நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக புதிய தலைமைத்துவம் ஏற்றுவருகின்ற இளைய தலைமுறையினரையும் கடத்திச் செல்வதுமட்டுமல்லாது, அவர்களை அச்சுறுத்துகின்றது.

அரசின் இந்த அராஜகச் செயல்களால் சர்வதேசத்தினரிடையே எமது நாடு அபகீர்த்திக்கு உள்ளாகியுள்ளது.

கோட்டை ரஜ மஹா விகாரையின் பிக்குமார்கள் இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாகப் பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பில் வெல்லங்வெல விமலரத்ன மஹாநாயக்க தேரர் கருத்து வெளியிடுகையில், "பொலிஸாரின் செயற்பாடுகளில் அரசினது தலையீடுகள் இல்லையெனில் அவர்கள் நாட்டில் இடம்பெற்று வரும் குற்றங்களைத் தடுப்பதற்கு சுதந்திரமாகச் செயற்பாடுவார்கள்'' எனக் கூறியுள்ளார். மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை அரசு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்றார் கயந்த கருணாதிலக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லளவில் மட்டுமே வடக்கின் அபிவிருத்தி

கடந்த காலங்களில் வடக்குக்கு வந்த அமைச்சர்களும் – நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேடைகளில் ஏறி 200 மில்லியன் வழங்கப்படும், 280 மில்லியன் ஒதுக்கப்படும் எனக் கூறப்பட்டதே ஒழிய எந்த ஒரு மில்லியனும் வடக்குக்கு இதுவரை வரவில்லை.

யாழ்ப்பாணம்,ஏப்.11

வடமாகாண அபி விருத்தி என்பது சொல் அளவில் மட்டுமே உள்ளது.

கடந்த காலங்களில் வடக்குக்கு வந்த அமைச்சர்களும் - நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேடைகளில் ஏறி 200 மில்லியன் வழங்கப்படும், 280 மில்லியன் ஒதுக்கப்படும் எனக் கூறினார்கள். ஆனால் எந்த ஒரு மில்லியனும் வடக்குக்கு இதுவரை வரவில்லை என வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

மானிப்பாய்- செல்லமுத்து விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற சிறுவர் சங்கமம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையில் இருந்து கடந்த 3 ஆண்டுகளில் பெரும்பாலான அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கில் உள்ள முக்கிய மேடைகளில் ஏறி தங்களுடைய அமைச்சுகள் ஊடாக பல மில்லியன் ஒதுக்கப்படும், அபிவிருத்தி செய்யப்படும், பல தொழில்கள் உருவாக்கப்படும், பட்டதாரிகளுக்கு வேலைகள் வழங்கப்படும் என பல கோஷங்களை எழுப்பிப் பல மாதங்கள் கழிந்துவிட்டன.

ஆனால் இந்த வடக்கு அபிவிருத்தி என்பது மையக் கருவில் பூச்சியமாகவே உள்ளது.

இன்றைய எமது சமுதாயம் கடந்த 50 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ளது.

இதில் சிறுவர் - இளைஞர் - வயோதிபர் எனப் பல மட்டத்தினரும் கடந்த 30 ஆண்டுகளில் பாதிப்படைந்துள்ளனர்.

இன்று ரூபாயின் பணப் பெறுமதி இறக்கத்தினால் சகல துறைகளும் செயல் இழந்துள்ளன.

தொழில் முயற்சியாளர்கள் தொழிலை கைவிடும் நிலைக்குப் பணப்பொருளாதாரம் கசிந்து சென்றுள்ளது.

கூடையில் அதிக பணத்தைக் கொண்டு சென்று கையளவில் பொருள்களை வாங்கும் அவல நிலை இந்த நாட்டில் வந்துவிட்டது.

இனிமேல் வடக்கில் அபிவிருத்தி என்பதை நாம் நினைக்கக் கூடாது.

உள்ளூராட்சி சபைகளை எடுத்துக் கொண்டால் பல முன்மொழிவுகளை பேப்பரில் எழுதி அழகாக அனுப்புகிறோம். ஆனால் எந்த ஒதுக்கீடுகளும் இதுவரை இல்லை.

வடக்கில் விலைவாசி உயர்வால் உற்பத்தி முடக்கம், விவசாயிகள் உறக்கம், கைத்தொழில் படுத்துவிட்டது.

இவ்வாறு இன்று வடக்கு அபிவிருத்தியை மற்றையவர்கள் ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கை இனி இருக்கக் கூடாது.

எமது வளமான வளங்களை மீண்டும் பயன்படுத்த அனைவரும் பாடுபட வேண்டும். இதற்கான திட்டங்களை முன்வையுங்கள். அதற்காக உழையுங்கள்.

இல்லாவிடில் வலுவிழந்ததாக எமது தேசம் அழியும் நிலை வெகு தொலைவில் இல்லை என்றார். (எ)

## யாழ்.பேக்கரி உற்பத்திகளை தீவகத்தில் தடை விதிக்குக

### தீவக பேக்கரி உரிமையாளர்கள் வேலணைப் பிரதேச சபைக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரி உற்பத்திப் பொருள்களை தீவகப் பகுதிக்குள் விற்கத் தடை விதிக்கும் படி கோரி தீவக 8 பேக்கரி உரிமையாளர்கள் வேலணை பிரதேச தலைவருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாண பேக்கரி உற்பத்திப் பொருள்கள் தீவகப் பகுதிக்குள் கொண்டு வந்து விற்பனை செய்யப் படுவதால் தமது பேக்கரி உற்பத்திப் பொருள்களை விற்க முடியாத நிலை உள்ளதாகவும் தீவக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்தே தாம் வேலணை பிரதேச சபைத் தலைவருக்கு கடிதம் கொடுத்ததாகவும் தெரிவித்தனர்.

தடை நடைமுறைக்கு வருமாயின் தீவக பேக்கரி உரிமையாளர் தமது தொழிலினை நட்டம் ஏற்படாத வாறு மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.(எ)

## சிறுமியைக் கடத்திய மூவர் கைது

கொழும்பு, ஏப்.11

சிறுமியொருவரைக் கடத்திச் சென்று மறைத்து வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சபுகஸ்கந்த பிரதேசத்தில் பதினான்கு வயதான சிறுமியொருவர் ஒரு மாதத்துக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டிருந்தார் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் விசாரணைப் பிரிவு தெரிவித்தது.

வெலிகந்த பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போது அந்தச் சிறுமி மீட்கப்பட்டுள்ளார் என்று அதிகார சபை குறிப்பிட்டது.

சிறுமியைக் கடத்திச் சென்ற 23 வயதான இளைஞர் ஒருவரும் அவரது உறவினர்கள் இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மஹர நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட சிறுமி நேற்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (எ)

## இடைநிறுத்தப்பட்ட மாணவர்களை மீள இணைக்கக் கோரிக்கை

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்பட்ட 7 மாணவர்களையும் மீளவும் இணைத்துக்கொள்ளுமாறு மாணவர்களின் பெற்றோர்கள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவிடம்நேற்று நேரில் சென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாணவர்களால் பாதிக்கப்பட்ட ஆசிரியையிடம் மன்னிப்புக் கேட்பதற்கு தமது பிள்ளைகள் தயாராக இருக்கின்றனர் எனவே அவர்களை மீளவும் கல்விச் செயற்பாட்டில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுங்கள் என பெற்றோர்கள் தரப்பில் கேட்கப்பட்டதாக கல்விப் பணிப்பாளர் கூறினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் தற்போது கொழும்பில் உள்ளதன் காரணமாக உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாதுள்ளது. அதிபர் யாழ்ப்பாணம் வந்ததும் நாம் பாடசாலைச் சமூகத்துடன் கதைத்து சுமுகமான முடிவுக்கு வருவோம் என பெற்றோர்களிடம் கூறியுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார். (3)



கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு, உலக சுகாதார தினம் ஆகிய தினங்களை முன்னிட்டு சுகாதாரக் கருத்தரங்கு, கலை நிகழ்வுகள் என்பன கடந்த 7 ஆம் திகதி கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச சபை உபதலைவர் திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுகாதாரப் பழக்க வழக்கங்கள், அவற்றைக் கையாளும் முறைகள், சுகாதாரமற்ற முறையில் ஏற்படும் நோய்த்தாக்கங்கள், அவற்றால் சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் தொடர்பாக படங்களுடன் விளக்கங்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து கோண்டாவில் பிரதேச பாடசாலை மாணவர்களின் பேச்சுப் போட்டி, பொதுமக்கள் கலந்துகொண்ட பட்டிமன்றம், கலைநிகழ்வுகள் உட்பட மஜிக்ஷோ என்பன இடம்பெற்றன. (14)

## வேலணையில் கொடி முந்திரிகை

வேலணையில் கொடி முந்திரிகைச் செய்கை வெற்றியளித்துள்ளது. கொடி முந்திரிகைச் செய்கை உற்பத்தி வெற்றியால் பெருமளவு முந்திரிகைகள் கொழும்புக்குக் கடந்த வாரம் ஏற்றப்பட்டுள்ளன. இந்தச் செய்தியை வேலணை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து விவசாய போதனாசிரியர் ஆர். இராமநாதன் தெரிவித்தார்.

இதனையடுத்து ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்து கொண்டவர்கள் கொடி முந்திரிகை விவசாயியான ந.விவேகானந்தராவைப் பாராட்டியுள்ளனர். (எ)

## சத்தியசாயியின் நினைவும் வழிபாடும்

யாழ்ப்பாணம்,ஏப்.11

மகா சமாதியடைந்த சத்தியசாயி பாபாவின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் சர்வமத தியான நிலையத்தில் எதிர் வரும் விசேட பூஜை வழிபாடு இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் கனகசபை வீதியில் உள்ள சர்வமத ஸ்தாபன நிறுவுநர் பேராசிரியர் எஸ்.லீலாகிருஷ்ணன் தலைமையில் பூஜை வழிபாடு இடம்பெறும்.

மகா பிரார்த்தனை, தியானம், வழிபாடு, பஜனை என்ற ஒழுங்கில் நிகழ்வு இடம்பெறும். (எ)

## கடல்தொழில் பரிசோதகர்களுக்கு ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது

யாழ்.மாவட்ட கடல்தொழில் பரிசோதகர்களில் 17 பேர் பணிபுரிய வேண்டும். ஆனால் தற்போது 8 பரிசோதகர்களே பணியாற்றி வருகின்றனர்.

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.மாவட்ட கடல் தொழில் பரிசோதகர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக மாவட்டக் கடல் தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்.மாவட்டக் கடல் தொழில் பரிசோதகர்களில் 17 பேர் பணிபுரிய வேண்டும். ஆனால் தற்போது 8 பரிசோதகர்களே பணியாற்றி வருகின்றனர்.

எரிபொருள் மானியம் வழங்குதல், படகுப் பதிவுகள் மேற்கொள்ளல், உதவித் திட்டங்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்.

அத்துடன் சட்டவிரோதமான வலைகளைப் பாவித்து கடலட்டை பிடிக்கும் செயல்களில் மக்கள் ஈடுபடுவதால் நீதிமன்றுக்கு அலைய வேண்டிய சூழ்நிலை. இதனால் வழமையான வேலையை விடவும் அதிகமான அலைச்சலையும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகிறோம்.

இதற்கு ஆளணிப் பற்றாக்குறையே காரணமாக அமைகிறது. அரசு புதிய ஆளணி நியமனங்களைத் தர வேண்டும் என பணிப்பாளர் [illegible] வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-13)

## மயிலிட்டி காச நோய் வைத்தியசாலை மீண்டும் பாவனைக்கு விடப்படவேண்டும்

### மருத்துவர் யமுனானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.11

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீண்டும் பாவனைக்கு விட வேண்டும் என்று யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி மருத்துவர் சி.யமுனானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 19 ஆவது வருடாந்த செயலமர்வு யாழ். பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் வடபகுதி காசநோய் பற்றிய அனுபவங்கள் எனும் தலைப்பில் உரையாற்றும் போதே இந்தக் கோரிக்கையையும் விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த கால போர் அனர்த்தத்தின் போது 90 ஆம் ஆண்[illegible] மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை கைவிடப் பட்டது. தற்போது சமாதான சூழ்நிலையின் போதும் மயிலிட்டிப் பகுதி விடுவிக்கப்படவில்லை மக்கள் மீளக்குடியமர்த்தப் படவும் இல்லை.

போர்ச் சூழ்நிலையின் போதும் காசநோய்க்குரிய சிகிச்சைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தன.

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை 1990 ஆம் ஆண்டு உயர்பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட போது, வேறு இடங்களில் இயங்கி வந்தது. 2000 ஆம் ஆண்டு சாவகச்சேரியிலும் 2006 ஆம் ஆண்டு பண்ணையிலும் இயங்கிய போது பல அசௌகரியங்களை எதிர் கொண்டது. 2008 ஆம் ஆண்டு நிஷா புயலின் போது பண்ணை வைத்திய சாலை சேதமுற்றது.

பண்ணை வைத்திய சாலை 2005 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. நோயாளர்களுக்கு நேரடி கண்காணிப்பில் மருந்து வகைகளும் அளிக்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டு சேர்மான மருந்து வகைகளும் 2007 ஆம் ஆண்டு பருத்தித் துறை, சாவகச்சேரி, தெல்லிப் பழை ஆகிய இடங்களில் கிளை சிகிச்சை நிலையங் களும் நிறுவப்பட்டன. 2007 ஆம் ஆண்டு நோயாளர்களுக்கான சளிப்பரிசோதனையும் குழந்தைகளுக்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி தற்போது காசநோயின் தாக்கம் குறைந்து வருகிறது. வடக்கைப் பொறுத்த வரையில் போர் காலத்தின் போது அந்தச் சூழலுக்குள் அகப்பட்டவர்கள் அதிகமானோர் காச நோயால் பாதிக்கப்பட்டனர்.

தகுந்த சிகிச்சைகள் தற்போது வழங்கப்பட்டு வருவதால் நோயாளர்களின் வீதம் குறைந்து வருகிறது- என்றார். (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலையை பாதுகாக்க அரசு தலையிட வேண்டும்

கொழும்பு,ஏப்.11
பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சிறுவர் வைத்தியசாலையைப் பாதுகாக்க அரசு தலையிட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலையின் முதல் கட்டப் பணிகள் 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாம் கட்டம் 2007ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாக அந்த சங்கத்தின் செயலாளர் சந்திக எப்படகட்டுவ குறிப்பிட்டார்.

எனினும் இன்றுவரை இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவடையவில்லை என சங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலையில் தற்போது உள்ள ஸ்கேனர் இயந்திரம்கூட பழுதடைந்துள்ளதாகவும் இவ்வைத்தியசாலை மூலம் நன்மை பெற சரியான நிர்வாகம் அமைய வேண்டும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
(எ)

# மன்னாரில் வாராந்த சந்தை உடன் இயங்க ஏற்பாடு செய்க

### பிரஜைகள் குழு நகர சபைத் தலைவருக்குக் கடிதம்

மன்னார், ஏப். 11
மன்னாரில் உடனடியாக வாராந்த சந்தையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவினர் மன்னார் நகரசபைத் தலைவரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் இந்த வாராந்தச் சந்தை ஆரம்பிக்கப்பட்டதாகவும் இதனால் அனைத்து மக்களும் பயனடைந்து வந்ததாகவும் அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்ச் சூழலைப் பயன்படுத்தி அரசியல் செல்வாக்குடன் இங்கு வந்த சில வெளிமாவட்ட வியாபாரிகள் வாராந்தச் சந்தை இயங்கிய இடத்தை ஆக்கிரமித்துள்ளதாகவும், அதில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

தினச் சந்தைத் தொகுதி தீயினால் சேதமடைந்த போது, நகரசபை வழங்கிய உதவிகளைப் பாராட்டிய பிரஜைகள் குழுவினர், அந்தத் தொகுதி, தனிநபர்களின் வியாபார மையமாக நிரந்தரமாக மாறுவதைத் தாம் எதிர்ப்பதாகவும் கூறியுள்ளனர்.

தற்போது இந்தச் சந்தைத் தொகுதியை வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்துள்ளதால், உள்ளூர் மக்கள் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்வதாகக் கூறிய பிரஜைகள் குழுவினர் போருக்கு முந்திய காலப்பகுதியில் இந்த இடம் எவ்வாறு இருந்ததோ அதனைப் போன்றே தற்போது வாராந்தச் சந்தையாக மாற்றப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

இந்தக் கடிதத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர், செயலாளர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். இதன் பிரதிகள் முக்கிய பிரமுகர்கள்பலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# தமிழ் புத்தாண்டை அடுத்து பொருள்கள் விலை கூடும்

### கயந்த கருணாதிலக தெரிவிப்பு

தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டின் பின்னர் அத்தியாவசியப் பொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக, கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனாளிகளாக மக்கள் இன்று மாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம், வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் உரிமையை, அரசு மக்களிடம் இருந்து பறித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசு மேன்மேலும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்துவதற்குத் தயாராகி வருவதை தம்மால் அவதானிக்க முடிவதாக தெரிவித்த அவர், பொது மக்களால் சமாளிக்க முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இது தவிர, மக்களின் சுதந்திரமான சூழலையும் அரசுபறித்துள்ளதாகவும், இந்த முறை பல்வேறு சிக்கலான தருணத்தில், தமிழ் சிங்கள புதுவருடம் கொண்டாடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# வன அதிகாரி கைது

**50,000 ரூபாவை லஞ்சமாகப் பெற்ற வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவர் கந்தளாயில் கைது செய்யப்பட்டுள்ளார்.**

கொழும்பு, ஏப்.11
அனுமதிப்பத்திரத்தின் கால எல்லையை நீடிப்பதற்காக நபரொருவரிடமிருந்து 50,000 ரூபாவை லஞ்சமாகப் பெற்ற வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி ஒருவர் கந்தளாயில் வைத்து ஊழல் மற்றும் லஞ்ச ஆணைக் குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன பாதுகாப்புத் திணைக்கள தம்பலகாமம் பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றும் அதிகாரியொருவர் காட்டுப் பகுதியில் கிறவல் தோண்டுவதற்கான அனுமதிப்பத்திர ஊழல் மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரி கந்தளாய் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (எ)

# 4 முத்திரைகள் வெளியீடு

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நான்கு தபால் முத்திரைகள் வெளியிடப்பட உள்ளன.

ஐந்து ரூபா பெறுமதியான தபால் முத்திரைகளே இவ்வாறு புத்தாண்டு தினத்தில் வெளியிடப்பட உள்ளதாக தபால் திணைக்கள முத்திரைப் பிரிவு அறிவித்துள்ளது. சிங்கள கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்தத் தபால் முத்திரைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எண்ணெய் தேய்த்தல், அடுப்பு எரித்தல், புண்ணிய காலத்தில் மத வழிபாடுகளில் ஈடுபடல் என்றவாறான காட்சிகள் இந்த முத்திரைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இதற்கு முன்னர் 1987 ஆம் ஆண்டு தபால் முத்திரை வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(எ)

# நல்லிணக்க ஆணைக்குழு ஜனாதிபதியின் குழந்தை

### புறந் தள்ளிவிட முடியாது என்கிறார் இந்திய விமர்சகர்

கொழும்பு,ஏப்.11
கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு ஜனாதிபதி ராஜபக்ஷவினுடைய குழந்தை. அதனை அரசு தன்னுடையது அல்ல என்று சொல்லிவிட முடியாது. அது அரசின் சர்வதேச வாக்குறுதிகளுடன் தொடர்புடையது. இனிவருங்காலங்களுக்கும் பொருந்தக்கூடியது இனி வரப்போகும் அரசுகளும் ஆணைக்குழு தொடர்பாக அவைகளின் நிலைப்பாடுகளும் விடுபட்டுள்ளதாலும் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை தீர்மானத்தின் போது நட்பு நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் மூலமும் வேறு வகையிலும் இலங்கை கட்டுப்பட்டிருக்கிறது கொழும்பில் அரசாங்கம் மாறினாலும் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவில் இருந்து இலங்கை விவகாரங்களை விமர்சித்து எழுதும் கட்டுரையாளர் என்.சத்திய மூர்த்தி. அவர் மேலும் தெரிவிக்கையில், ஆனால் வெகு காலம் சென்று அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படுமானால் அப்போது அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான முறைகளில் மாற்றம் ஏற்பட முடியும். அரசுகள் வழங்கும் வாக்குறுதிகள் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டிய கடப்பாடுகளாகவே கருதப்படுவனவாகும் என்று கூறுகிறார். அவர், மேலும் கூறுகையில்,

மனித உரிமைகள் பேரவையானது தொடர்ந்தும் இருக்கப் போகின்றது. இலங்கையின் நிலைப்பாடு அதனை அசைத்துவிட முடியாது. 2012 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருந்து இந்த நிலை வரவில்லை. அது 2009 ஆம் ஆண்டு ஜெனிவா தீர்மானத்தில் இருந்து வந்தது. பிரச்சினை, சர்வதேச மயமானதற்கும் இலங்கையும் அப்போது ஒரு பங்காளியாக இருந்துள்ளது. இப்பொழுது போலவே அப்போதும் அது பிரசாரத்தில் ஈடுபட்டது. எதிர்ப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் கொண்டது என்றார்.

2012 ஆம் ஆண்டு திர்மானம் நிறைவேற்றும் அம்சத்தை அறிக்கையில் இடுமாறு வலியுறுத்துவதாகவுள்ளது. அவ்வாறான அறிக்கையின் மூலம் வெளிப்படக்கூடிய விடயம் முன்கூட்டியே எதிர்வு கூற முடியாது. பேரவை அதன் மீது மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வரக்கூடும். பிரச்சினையை ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கே அது திருப்பி அனுப்பவும் கூடும். அவரே ஜெனிவா செயற்பாடுகளை தொடக்கி வைத்தவர். பாதுகாப்பு சபைக்கும் அது போகக் கூடும். அதற்கு மேல் ஐ.நா. பொதுச்சபைக்கும் அது போகும் சாத்தியம் உண்டு.

கவனத்துக்குரிய இன்னொரு விடயம் என்னவென்றால் செயலாளர் நாயகத்துக்கு தாக்கல் செய்யப்பட்ட தருஸ்மன் அறிக்கை மனித உரிமைப் பேரவையால் விவாதிக்கப்படவில்லை. தீர்மானம் பிரத்தியேகமாக எல்.எல்.ஆர்.சி அறிக்கையையே கவனத்தில் எடுத்திருந்தது என்று குறிப்பிடும் கட்டுரையாளர் சத்தியமூர்த்தி தொடர்ந்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

**தேவானந்தாவை கவனிக்க வில்லை**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டின் போது இலங்கைக்கு எதிராக செயற்பட்டவர்கள் அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வந்திருந்ததைக் கவனிக்கவில்லை. எல்.எல்.ஆர்.சி அறிக்கையில் அவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளதா இந்தக் கட்டத்தில் அறிக்கையில் பெயர் குறிக்கப்பட்டவர்களை தண்டிக்க உலகம் விரும்பவில்லை. இருந்த போதிலும் நிலமையை விளக்குவதற்கு பேரவை தவறியுள்ளது. இலங்கையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் பல வருடங்கள் சென்றாலும் அரசுக்கு இது ஒரு பாரமாகவே இருக்கப்போகிறது. ஜெனிவா மாநாட்டுக்கு பின்னர் அமைச்சர் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி உறுப்பினர்களின் பத்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. அப்படியான ஒரு தேவைக்கு காரணமாய் உள்ளதற்கு அப்பால் தம் பார்வையை செலுத்தும் நிலையில் உலகம் இல்லை.

கட்டுரையாளர் இறுதியாக பின்வருமாறு முடிக்கிறார். வாக்களித்தபடி மீள் நல்லிணக்கம் தொடர்பில் உலகம் நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு இலங்கை போதியளவு செயற்படாமல் இருக்கலாம். இன்று மீள் நல்லிணக்கத்துக்கான ஒரு வீதி வரைபடம் பல வகையிலும் சிந்தித்து - விவாதிக்கப்பட்டு உருவாக்கப்படுமானால் நிலைமைகளை மாற்றமுறச் செய்யலாம். அப்பொழுது இலங்கை அரசானது அந்த வாக்குறுதிகளை வெறும் வாக்குறுதிகளாக வைத்திருக்காமல் செயற்படுத்தவும் வேண்டியிருக்கும்
(சி)



# கவுஸ் ஒவ் செலெக்ஷன்

## கிளை நிறுவனத்தின் விற்றுத்தீர்த்தல்

*அனைத்து புடைவைகளும் மலிவான விலையில் விற்றுத்தீர்க்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.*

| பொருள் விவரம் | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சாறி W.Blouse | 800 | 400 |
| சாறி சில்க் W.Blouse | 1100 | 800 |
| டெனிம் ஸ்கேட் | 950 | 300 |
| ஸ்கேட் | 600 | 200 |
| பிளவுஸ் | 500 | 150 |
| டெனிம் ஜீன்ஸ் | 1100 | 300 |
| டெனிம் ஜீன்ஸ் (சிறிது) | 1250 | 400 |
| ஜீன்ஸ் (சிறிது) | 650 | 200 |

| பொருள் விவரம் | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சோக்கோ ஜீன்ஸ் | 1150 | 400 |
| சேட் பெரிது | 850 | 300 |
| ஜம்பர் | 650 | 200 |
| சல்வார் பெரிது | 1200 | 400 |
| சல்வார் சிறிது | 900 | 300 |
| சோலிக்கிற் பெரிது | 1200 | 400 |
| பாட்டி வுறக் | 850 | 300 |
| துப் | 900 | 300 |
| T சேட் | 350 | 150 |
| வெஸ்ட் | 190 | 100 |
| 01m கொட்டன் பிறின்ட் | 280 | 160 |
| 01m பட்டுக் குயின் | 260 | 100 |
| 01m ரெறின் | 280 | 200 |



75B, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(C\721) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணரட்ணத்தை கடத்தியது யார்?

## அரசிடம் கேட்கிறார் வீரவன்ஸ

கொழும்பு, ஏப்.11

மக்கள் போராட்ட அமைப்பின் உறுப்பினர்களான பிறேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோரை யார் கடத்தினார்கள் என்பதனை அரசு வெளிப்படுத்த வேண்டுமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிறேம்குமார் குணரட்ணம் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவர்கள் கடத்தப்பட்டிருந்தால் அதனை யார் செய்தார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

வழமை போன்று இந்தக் கடத்தல் சம்பவத்திற்கும் பாதுகாப்புத் தரப்பைக் குற்றம் சுமத்துவது இலகுவானது. எனினும், இவ்வாறு குற்றம் சுமத்துவதன் மூலம் வேறும் தரப்பினர் இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டிருந்தால் அவர்கள் தப்பிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

**வேறு தரப்பினர் இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டிருந்தால் அவர்கள் தப்பிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.**

இலங்கைக்கு எதிராக சர்வதேச அமைப்புக்கள் மற்றும் வெளிநாடுகள் போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவரும் தருணத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.சர்வதேச ரீதியில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் சிலர் செயற்படுகின்றனர்.

அண்மையில் மட்டக்களப்பு நகரில் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியிலும் இந்தக் கும்பல் இயங்கியுள்ளது.எனவே பிறேம்குமார் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தல் சம்பவம் தொடர்பில் உண்மையான தகவல்களை அரசு துரித கதியில் வெளியிட வேண்டும் -என்றார். (த)

## மரண அறிவித்தல்

### வேலு கந்தையா (கிளி)



யாழ்ப்பாணம், ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலு கந்தையா (கிளி) நேற்று (10.04.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் மீரா ஆகியோரின் அன்புக் கணவரும் சின்னத்துரை, லக்ஸ்மி, சரஸ்வதி, பரமேஸ்வரி, மலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வெளிநாட்டில் வசிக்கும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
சகோதரர்கள்.

## கடத்தல் குறையும் என்பதெல்லாம் வெறும் கனவு

நியூயோர்க், ஏப்.11

பிறேம்குமார் குணரத்ணம் கடத்தப்பட்டமை மற்றும் மீண்டும் விடுவிக் கப்பட்டமை என்பன இலங்கை அரசியல் தன்மையின் அடையாளத்தை வெளிப்படுத்துவதாகவும் ஏனைய காணாமல் போன சம்பவங்களின் பண்புகளைக் காட்டி நிற்பதாகவும், யுத்தம் இடம்பெற்ற சமயத்தில் இலங்கைக்கான ஐ.நா வின் பேச்சாளராகச் செயற்பட்ட கோர்டன் வைய்ஸ் தெரிவித்துள்ளார். கடத்தல்கள் குறையும் என மக்கள் நினைத்தனர். அவை எல்லாம் வெறும் கனவாகவே உள்ளன என்றும் அவர் கூறினார்.

எனினும் பலர் காணாமல் போன சம்பவங்கள் குறித்து தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான யுத்தம் நிறைவடைந்த பின் கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடராது என மக்கள் நினைத்த போதும் சம்பவங்களில்குறைவுஇல்லை எனவும் வைய்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக காணாமல் போதல் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதையே அவதானிக்க முடிவதாக அவர் கூறியுள்ளார்.

கடத்தல் தொடர்பில் உறவினர்கள் வெளி உலகிற்கு கூறியதை அடுத்தே பிரேம்குமார் குணரத்ணம் விடு[illegible] கோர்டன் வைய்ஸ் தெரிவித்துள்ளார். (த)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம்



'துவாரகா', கதிர்காம சுவாமி கோயிலடி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 281, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) 09.04.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், செல்வநாயகி (முன்னாள் ஆசிரியை, ஆ.தி.ம. வித்தி யாலயம், காரைநகர் - பிரான்ஸ்), அம்பிகாதேவி (தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற கமலநாயகி (சுருக்கெழுத்தாளர், நீதிமன்றம் ஊர்காவற்றுறை), ஆனந்தகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடனகுமார், வசந்தநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராசசிங்கம், இராசரத்தினம், கலாவதி ஆகியோரின் அன்பு மாமனும், சுவாதி, பாரதி, ரஞ்சன்குமார், துளசி, பவித்திரன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2012) வியாழக் கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

281, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அரச சேவைக்கு புதிய திணைக்களம்

மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபை மலைநாட்டு கிராமிய ஆணைக்குழு, சமுர்த்தி அதிகார சபை மற்றும் தென்னிலங்கை அபிவிருத்தி அதிகார சபை என்ற நான்கு அரச நிறுவனங்களும் இல்லாதொழிக்கப்பட்டு அவரற்றுக்குப் பதிலாக அரச திணைக்களமொன்றை ஏற்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வாழ்வெழுச்சி கிராமிய அபிவிருத்தித் திணைக்களமென்ற பெயரில் அந்தப் புதிய திணைக்களத்தை அறிமுகப்படுத்தவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.ஏ.ஏ.ரணவக்க தெரிவித்துள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலும்

தோற்றம்
04 * 02 * 1937



மறைவு
12 * 03 * 2012

### அமரர்.கோணர் மயில்வாகனம்

எமது அன்புத் தெய்வத்தின் இழப்பு எமது குடும்பத்திற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னார் காலமானதையறிந்து நாம் கதிகலங்கிஉணர்விழந்து நின்ற வேளையில் தம் உணர்வுகளை எம்முடன் பகிர்ந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அன்னார் உயிரிழந்த வேளையில் உதவிகள் பல வழங்கிய நெஞ்சங்களுக்கும் அத்துடன் இறுதிக்கிரியைகளுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் தம் அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி மூலம் தமது அனுதாபங்களை எங்களுடன்ங பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் கடந்த (12.03.2012) இறைபதம் அடைந்த அமரர் கோணர் மயில்வாகனம் அவர்களின் 31ம் நாள் இன்று (11.04.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழவிலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசீர்வாதம் வீதி,
உசன், மிருசுவில்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### சிவராசசிங்கம் ஜெயராஜ்



உரும்பிராய் தெற்கு ஒஸ்காலேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசசிங்கம் ஜெயராஜ் நேற்றுமுன்தினம் (09.04.2012) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவராசசிங்கம் - சந்திரபவானி தம்பதியரின் அன்பு மகனும் நிரஞ்சனியின் அன்புக் கணவரும் நிருபனின் பாசமிகு தந்தையும் மேகலா (லண்டன்), கமல்ராஜ்(கலா களஞ்சியம் உரும்பிராய்), மோகன்ராஜ், காலஞ்சென்ற சிவகலா மற்றும் ஜெயகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமசிவம் (லண்டன்), மனோகரி(ஆசிரியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), தாட்சாயினி, ராஜரூபன்(ஸ்டார்ஹொட்டல் உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனரும் கிசாந், துர்ஷகா, மீனுகா, விதுர்ஷிகன், சபர்ணிகா ஆகியோரின் அன்பு மாமனும் மதுஷனா, மயூரிகா, தசாங்கனி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2012) புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்காலேன்,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### இன்னாசிமுத்து மேரியோசவ் இம்மனுவேல்

(தம்பிமாமா)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து- மேரியோசவ் இம்மனுவேல் (தம்பிமாமா) (09.04.2012) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இன்னாச்சி முத்து- சூசானம் தம்பதியரின் அன்பு மகனும் விமலாவின் அன்புக்கணவரும் மரீனா, ஜறின் ஆகி யோரின் பாசமிகு தந்தையும் மேரியோசவின் (கண்மணி), மேரிதிரேசா(பொற்கொடி), மேரிறீற்றா (ராணி), மேரிபேணடேற் (ரத்தினம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.04.2012) செவ்வாய்க்கிழமை சில்லாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சில்லாலை கதிரைமாதா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை
பண்டத்தரிப்பு

தகவல் (சகோதரி) கண்மணி
(மருமகன்) பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சி மக்களுக்கு பயன்தரு அலகாக மாறுவது எப்போது?

உலக நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி உண்டாகி உள்ள இந்த வேளையில், காலத்தில், இலங்கை 8.3 சதவீத வளர்ச்சியைக் கடந்த வருடத்தில் கண்டுள்ளது. இது மகிழ்ச்சிக்குரியதாகும். பொருளாதாரத் துறையில் நாடு கண்டுள்ள இந்த வளர்ச்சி, அதன் அனுகூலங்கள் நாட்டின் சாதாரண பொது மக்களையும் சென்றடைவதற்கு, வழி செய்யப்பட வேண்டும். அதனை உறுதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு அறிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. மத்திய வங்கியின் 2011 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை வெளியிட்டு வைத்துப் பேசுகையிலேயே, ஜனாதிபதி இவ்வாறு புளகாங்கிதம் அடைந்துள்ளார்;

இத்தனைக்கும், முந்திய வருடத்தில் - 2010 இல் - நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக இருந்து, கடந்த (2011 ஆம்) ஆண்டு 8.3 சதவீதமாக வீழ்ச்சி கண்டது என்பது ஊன்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

எப்படியோ, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தில் உண்டான சிறு மாறுதலை பெரிது படுத்தாமல், வளர்ச்சியின் பலாபலன்கள் யாவும், மக்களைச் சென்றடைய அரசு வழிவகை செய்தால் மட்டுமே, அது அவர்களுக்கு நன்மை பயக்கும். பூவோடு சேர்ந்த நார் போன்று நாட்டுக்கு மட்டுமன்றி, ஜனாதிபதியின் அரசுக்கும் ஆட்சிக்கும் இது மேலும் பலம் சேர்க்கும்.

இதேவேளை, பொருளாதார வளர்ச்சி உரிய முறையில் பேணப்பட்டிருப்பின், கடந்த வருடத்தில் பல அத்தியாவசிய மற்றும் நாளாந்தப் பாவனைப்பொருள்களின் விலை உயர்வுகளால் மக்கள் அல்லாடி இருக்க மாட்டார்கள்.

இருந்திருந்தாற்போல், உணவு மற்றும் அத்தியாவசியப் பாவனைப்பொருள்களின் விலைகள் எகிறிச் சென்றுகொண்டிருக்கும் இந்நாட்டில், குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு பொருளாதாரம் சுமாராகவேனும் வளர்ச்சி கண்டது என்பதனைப் பொருளியலில் தேர்ச்சி உள்ளவர்கள் நம்பமாட்டார்கள், ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

பொருளாதார வளர்ச்சியை, நாட்டின் தலைவர்கள் தமது அரசியல் மேம்பாட்டுக்கும், அதனூடு ஆட்சி இருப்புக்கும் பலம் சேர்க்கும் கண்ணூடு பார்த்துச் செயற்படக்கூடாது.

எங்கள் நாட்டில் ஆட்சித் தலைவரே நிதி அமைச்சராகவும் இருப்பதால், இயல்பாகவே அவர் நாட்டின் நிதி நிலைமையையும், மக்கள் நலன்களையும் ஒரே தராசில் வைத்து நிறுத்துச் செயற்படுவார் என்று பல சதவீதம் எதிர்பார்க்கலாம்.

பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்தது அல்லது குறைந்து போயிற்று என்பது ஒருபுறமிருக்க, மக்களின் நாளாந்த வாழ்க்கைச் செலவை, திடீரென எகிறச் செய்யும் அறிவிப்புகள் எப்போது வருமோ என்று மக்களை ஏக்கமுற வைக்கும் சூழல் அண்மைக் காலமாக அதிகரித்து வருவது ஒன்றும் புதியதல்ல, புதினமல்ல.

இந்த வருடத்தின் மூன்று மாதங்களில் மக்களை பெரிய அளவில் பாதிக்கும் வகையில் விலை உயர்வுகளும், வரி உயர்வுகளும் அடிக்கடி மக்களின் தலைகள் மீது சுமத்தப்பட்டன.

மண்ணெண்ணெய், டீசல் ஆகிய பிரதான எரிபொருள்களின் விலை உயர்வுகளும் -

அதனை அடுத்து மின்சாரக் கட்டண உயர்வு, மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவைகளுக்குரிய வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வைகளின் உயர்வுகளும் -

சாதாரண பொதுமக்களின் நாளாந்த, அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கான செலவை பல சதவீதத்தால் எகிறச் செய்து விட்டன. உணவுப் பொருள்கள் முதற்கொண்டு போக்குவரத்து வரையான மிக அத்தியாவசியமான சேவைகளுக்கு அதிக பணத்தைச் செலவிட நிர்ப்பந்தித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட பொருளின் விலை உயர்வு, பரவிப் படர்ந்து பல வகையான பாதிப்புகளை உண்டாக்கியுள்ள பரிதாப நிலையில் மக்கள் அனுதினமும் அல்லாடுகிறார்கள்.

கறுப்பு வெள்ளையில் காட்டப்படும் பொருளாதார வளர்ச்சியை நாட்டின் சாதாரண பொதுமக்கள் குறிப்பிடத்தக்க அளவிலேனும் அனுபவிக்க வகையோ வசதியோ செய்யப்படுவதற்கான எந்தத் தோற்றமும் தெரியவில்லையே! அது குறித்து அரசும் நாட்டின் நிதியாள்கைக்குப் பொறுப்பான அமைச்சரும், அவரின் அதிஉயர் அதிகாரிகளும் அடிமட்ட மக்களின், பொதுமக்களின், தலைகள் மீது தாம் அழுத்தும் சுமைகளை சராசரியாகவேனும் குறைத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யாதவரை, பொருளாதார வளர்ச்சி என்பது வெறும் புஸ்வாணமே.

நாடு முழுவதிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதால், வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளதால், பொருளாதார அபிவிருத்தியும் அதிகரித்துள்ளது என்பது அர்த்தமாகாது. அந்த அதிகரிப்புகளினதும் அபிவிருத்திகளினதும் பெறுபேறுகள், மக்களைச் சென்றடைய வேண்டும். மறுவளமாகச் சொன்னால் மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும். அப்போதுதான் பொருளாதார வளர்ச்சி மக்களுக்குப் பயன் தரும் அலகாக மாற இயலும்.

அதற்கான இலகுவான வழித்தடங்களும், செயல்ரீதியான வடிவங்களும் மக்களின் வாழ்க்கைத் தேவைகளை நாடி, மேலோட்டமாக அன்றி, கனதியான முறையில் செயற்படுத்தப்பட வேண்டும். இதுவரை எந்தப் பாதையில் நடந்தோம், எந்தப் புதிய மார்க்கத்தில் செல்வதால் சமகாலத் தேவைகளை மக்களுக்கு வழங்க முடியுமென்பதனை ஆய்ந்து செயல்வடிவம் கொடுக்க வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, இந்த ஆண்டில் (2012) நாட்டின் பொருவாதார வளர்ச்சி, 7.2 சதவீதமாக கீழிறங்கும் என்று, படுபாதாளத்தில் விழும் என்று, தேசத்தின் பொருளியலை எடை போடும் மத்திய வங்கி எச்சரித்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் அதளபாதாளத்தை நோக்கிப் படுவேகத்தில் சரிந்து கொண்டிருப்பதே இதற்குக் காரணம். அது குறித்து இன்னொரு இதழில் தனியாக நோக்கலாம்.

# தனியார் நிறுவனங்களுக்கு எதிராக 18 தொழில் பிணக்கு வழக்குகள்

**தனியார் தொழில் தருநர் நிறுவனங்களுக்கு எதிராக தொழில் முனைவோரால் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம், ஏப்.11

வடபகுதியிலுள்ள பல தனியார் நிறுவனங்களுக்கு எதிராகத் தொழில் பிணக்குகள் தொடர்பான 18 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் முதல் இரண்டு மாதங்களான ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையே இதுவாகும்.

தொழில் முனைவோரால் தொடரப்பட்ட இந்த 18 வழக்குகளில் 8 பிணக்குகள் சாதகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன.

வடபிராந்திய பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் 7 வழக்குகள் தொடரப்பட்டன. அதில் 5 பிணக்குகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 9 வழக்குகள் தொடரப்பட்டன. இதில் ஒரு பிணக்குத் தீர்க்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் தொடரப்பட்ட இரண்டு வழக்குகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த இரண்டு மாத காலங்களில் வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

தனியார் தொழில் தருநர் நிறுவனங்களுக்கு எதிராக தொழில் முனைவோரால் இந்த வழக்குகள் தொடரப்பட்டன-என்றார். (த-3)

# சேமலாப நிதித் திட்டத்தில் வடக்கில் 163 நிறுவனங்கள்

## இரு மாதங்களில் மட்டும் இணைந்தன

**கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 48 நிறுவனங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம், ஏப்.11

ஊழியர் சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் இந்த வருடத்தின் முதலிரு மாதங்களில் வடக்கில் 163 நிறுவனங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழியர் சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 48 'நிறுவனங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 47 நிறுவனங்களும், வவுனியா மாவட்டத்தில் 15 நிறுவனங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 நிறுவனங்களும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

தற்போது புனரமைக்கப்பட்டு நிறைவுபெறும் நிலையிலுள்ள கிளிநொச்சி மாவட்ட தொழில் அலுவலகம் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் செயற்பட ஆரம்பிக்கும். கிளிநொச்சி 155ஆம் கட்டையில் இந்த அலுவலகம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 28 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் புனரமைக்கப்பட்டு வருகிறது-என்றார். (த-3)

# நயினாதீவில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்

நயினாதீவில் உள்ள கடல்நீரை நன்னீராக்கி குடி தண்ணீர் வழங்கும் திட்டம் குறித்து வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாஸின் ஜெகு ஆராய்ந்து வருகின்றார்.

இதற்கான முன்வரைவினைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறு வேலணைப் பிரதேச சபைத் தலைவரை உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக நயினாதீவில் உள்ள யாத்திரிகர் மடப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான முன்மொழிவுப் பத்திரத்தை வேலணைப் பிரதேச சபை தயாரித்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டம் வெற்றியளிக்கப்பட்டால் வெளி மாவட்டங்களில் இருந்தும், ஏனைய பிரதேசங்களிலிருந்தும் வரும் யாத்திரிகர்கள் பெரும் நன்மை அடைவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. (எ)

# மாகாண சபைகளைக் கலைப்பதற்கு முன் உறுப்பினர்களுக்கு வரிச்சலுகை வாகனம்

கொழும்பு ,ஏப்.11

இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாணசபைகள் சிலவற்றைக் கலைத்துவிட்டு தேர்தல் ஒன்று நடத்த அரசு திட்டமிட்டுள்ளதால் எஞ்சியுள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கும் சலுகைகளின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கான அனுமதிப் பத்திரங்களை விரைவாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அநேகமாக அடுத்துவரும் ஜூலை மாதத்தில் வடமத்திய, சப்ரகமுவ, மற்றும் கிழக்கு மாகாண சபைகள் கலைக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வரிச் சலுகைகளுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களும் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு தேர்தல்கள் இடம்பெற்ற வரிசைக் கிரமங்களுக்கு அமைய வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாண சபை உள்ளடங்கலாக மாகாணசபைகள் சிலவற்றின் பதவிக்காலம் அடுத்த ஆண்டில் முடிவடையவுள்ள போதிலும் இந்த ஆண்டுக்குள் குறிப்பிட்ட மூன்று மாகாணசபைகளையும் கலைத்து தேர்தலை நடத்துவதே அரசின் நோக்கமாக உள்ளது.

அவற்றைக் கலைப்பதற்கு முன்னர் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கு அதிகபட்சம் 35 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் முதலமைச்சர்களுக்கு அதிகபட்சம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என்ற பெறுமதியில் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அவசியப்படின் மேற்படி அதிகபட்ச வரையறைக்கு மேலதிகமாக 5 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதி கொண்ட வாகனங்களை அவர்கள் இறக்குமதி செய்து கொள்ள முடியும், அந்த மேலதிகமான 5 ஆயிரம் டொலர்களுக்கான தீர்வை வரிகள் உள்ளடங்கலாக ஏனைய வரிகளை அவர்களே செலுத்த வேண்டும். (த-22)

# இயக்குநர் சபை தேர்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.11

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்துக்கான இயக்குநர் சபைத் தேர்தல் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு தளையடியில் உள்ள சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் [illegible] தலைமையில் நடைபெறும். (த-28)

# வாழ்க்கைப் பயணம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.11

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் நாடாளுமன்ற செய்தித் தொகுப்பாளர் முருகேசு ரவீந்திரனின், வாழ்க்கைப் பயணம் என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் த.அருணகிரிநாதன் தலைமையில் இந்த விழா நடைபெறும் ரவீந்திரனால் உருவாக்கப்பட்டு அவ்வப்போது தேசிய நாளிதழ்களில் வெளியான 12 சிறுகதைகள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாழ்.கல்வி வலய தமிழ் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் நூல் ஆய்வுரை நிகழ்த்துவார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் போட்டியில் வென்றோருக்கு மதுபானம்

## முல்லையில் இராணுவத்தினரின் 'முன்மாதிரி'

கிளிநொச்சி,ஏப்.11

விளையாட்டுப் போட்டியொன்றில் வெற்றியீட்டியவர்களுக்கு மதுபானப் போத்தல்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் புதுவருடத்தை முன்னிட்டு இராணுவத்தினர் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கே மதுபானப் போத்தல்கள் பரிசில்களாக வழங்கப்பட்டுள்ளன.

புதுவருடத்தை முன்னிட்டு இராணுவத்தினரால் பொது மக்களிடையே பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் நடத்தப்பட்ட கபடிப் போட்டியில் முல்லைத்தீவு சந்திரன் விளையாட்டுக்கழகம் முதலிடத்தையும், அலையோசை விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதில் முதலிடத்தைப் பெற்று கொண்ட சந்திரன் அணி வீரர்களுக்கு ஆறுசாரங்களும், ஆறு மதுபானப் போத்தல்களும் இராணுவத்தினரால் பரிசில்களாக வழங்கப்பட்டுள்ளன. மேற்படி போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோதே இவ்வாறு மதுபானப் போத்தல்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன. (க-6)

# பூநகரி மீனவர்களுக்கு மீண்டும் 'பாஸ்' நடைமுறை

**வலைப்பாடு, நாச்சிக்குடா, கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, பள்ளிக்குடா, பூநகரி ஆகிய இடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் பலர் 'பாஸ்' நடைமுறை காரணமாகத் தொழிலுக்கு செல்வதை இடைநிறுத்தியுள்ளனர்.**

அக்கராயன்,ஏப்.11

பூநகரியில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு மீண்டும் 'பாஸ்' நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி கடற்றொழிலாளர்கள் மீன் பிடியில் ஈடுபடுவதற்குக் கடற்படையினர் 'பாஸ்' நடைமுறையை மீண்டும் நடைமுறைப் படுத்தியுள்ளமையால் கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடற்கரையில் இராணுவத்தினர் பணியில் இருந்த நாள்களில் அடையாள அட்டையைக் காண்பித்து மீன் பிடியில் ஈடுபட முடிந்தது.

ஆனால் தற்போது கடற்படையினர் கடற்கரையோரங்களில் பணியில் உள்ளனர். இவர்கள் பாஸ் நடைமுறையை நடைமுறைப் படுத்தியதால் தொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

வலைப்பாடு, நாச்சிக்குடா, கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, பள்ளிக்குடா, பூநகரி ஆகிய இடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் பலர் பாஸ் நடைமுறை காரணமாகத் தொழிலுக்கு செல்வதை இடைநிறுத்தியுள்ளனர். (க-18)

# வவுனியாவில் நெல் கொள்வனவு

**சம்பா நெல் கிலோ ஒன்று 30 ரூபாவாகவும், ஏனையவை 28 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றது.**

வவுனியா,ஏப்.11

வவுனியாவில் சதொச நிறுவனம் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றது.

வவுனியா கமநல சேவை நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்ட விவசாயிகளிடம் இருந்தே சதொச நிறுவனம் நெல்லைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றது.

கமநல சேவை நிலையங்களில் பதிவுகளை மேற்கொண்டு நெற் செய்கைக்கான உரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிய விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தால் மேலதிக கழிவுகள் ஏதுமின்றி இவர்கள் நெல்லை வழங்க முடியும்.

தற்போது சம்பா நெல் கிலோ ஒன்று 30 ரூபாவாகவும், ஏனையவை 28 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

ஒரு விவசாயி ஆகக் கூடியளவு 3 ஆயிரம் கிலோ நெல்லை வழங்க முடியும். அத்துடன் நெல்லை 50 கிலோ கொண்ட மூடைகளாகக் கட்டி வழங்க முடியும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைத் தமது பகுதிக்குரிய கமநல சேவை நிலையங்களில் விவசாயிகள் அறிந்து கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

# 50 ஆயிரம் கிலோ கோவா முழங்காவிலில் தேக்கம்

அக்கராயன்,ஏப்.11


கிளிநொச்சி முழங்காவில் கிராமத்தில் 50 ஆயிரம் கிலோவுக்கும் மேலான கோவா, விற்பனை செய்ய முடியாத நிலையில் தேங்கிக் கிடப்பதாக தோட்டச் செய்கையாளர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே மரக்கறிச் செய்கையில் முழங்காவில் முதன்மை நிலை வகிக்கின்றது. ஆனால் உற்பத்தி செய்த மரக்கறி வகைகளைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர்.

அத்துடன் பெருமளவு பொருள் செலவில் இவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட இந்த மரக்கறி வகைகள் விற்பனையாகாது போனால் இவர்களது வாழ்வாதாரமே முற்றாக அழிந்துவிடும் அபாய நிலையும் ஏற்பட்டுவிடும்.

ஏற்கனவே இடப்பெயர்வு, மீள்குடியமர்வு எனத் தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட இந்த மக்கள், தற்போது கடும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதிகாரிகள் இவர்களது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு உதவ வேண்டுமென்பதே இந்த மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-18)



வீதியில் பொதிகளை வைத்துவிட்டு மன்னார் செல்வதற்கென மரநிழலில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பல்லவராயன்கட்டு மக்கள்.

# 250 பேருக்கு சைக்கிள்கள்

அக்கராயன்,ஏப்.11

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த 250 பேருக்கு இந்திய அரசின் அன்பளிப்பாக சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலைத் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

20 கிராமங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. மீளக்குடியமர்வின் போதும் விவசாய உபகரணங்கள் இந்திய அரசின் உதவியுடன் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# சேமலாப நிதியிலிருந்து தப்புவதற்காக முடங்கியதாக நடிக்கும் நிறுவனங்கள்

வவுனியா,ஏப்.11

ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தாமல் தப்பித்துக்கொள்வதற்காகவே பதிவு செய்யப்பட்ட பல நிறுவனங்கள் இயங்காத நிலையில் இருப்பதாகக் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத் தொழில் திணைக்களத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் 22 ஆயிரத்து 219 பேர் இணைந்து ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பணம் செலுத்தி வந்த போதிலும் தற்போது உள்ள சூழ்நிலையில் மேலும் ஆயிரத்து 550 ஊழியர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா தொழில் திணைக்களத்தில் பதிவு செய்துகொண்ட பல வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன தாம் ஒழுங்காக இயங்காத நிலையில் இருப்பதாகக் காட்டிக் கொள்கின்றன எனக் கூறப்பட்டது.

தொழில் திணைக்களத்தில் ஆயிரத்து 744 தொழில் பெறுநர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளபோதும் 542 தொழில் நிலையங்களே தற்போது இயங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

தற்போது நாட்டிலுள்ள சூழ்நிலையில் ஊழியர்களின் பாதுகாப்புக்காகப் பல அமைப்புக்களும் அரசும் கோரிக்கை விடுத்து வருவதால் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தாமல் தப்பித்துக் கொள்வதற்காகவே பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பல இயங்கா நிலையில் இருப்பதாகக் காட்டப்படுவதாகவும் தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-400)

# ஆசிரிய வெற்றிடத்தை நிரப்புமாறு இரந்து கேட்கும் பெற்றோர்கள்

**போதியளவு விஞ்ஞான பாட ஆசிரியர்கள் இல்லாததால் க.பொ.த. உயர்தரப் பிரிவில் விஞ்ஞானம் பயின்ற ஒருவரைத் தெரிவு செய்து தந்தால், அவருக்கு ஆளுநரிடம் இருந்து கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.**

கிளிநொச்சி,ஏப்.11

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புமாறு பெற்றோர்கள் கல்வி அதிகாரிகளிடம் இரந்து கேட்கின்ற நிலை கிளிநொச்சியின் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ளது.

இத்தகையதொரு சம்பவம் கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இந்தப் பாடசாலைக்குக் கிளிநொச்சி கல்வி வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். இருதயராசா வருகை தந்திருந்தார். இதனை அறிந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், பெற்றோர்களும் அவரிடம் நேரில் சென்று தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

பாடசாலையில் தரம் 3,4 வகுப்புகளுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லையெனவும், மேலும் விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் இல்லை எனவும் கூறினர்.

அத்துடன் கல்வி உயரதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரிடம் பல தடவைகள் தெரியப்படுத்திய போதிலும், பயன் எதுவும் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதிக் கல்விப் பணிப்பாளர், இரண்டாம் தவணையின் ஆரம்பத்தின்போது ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இருவரையும், தமிழ் பாடத்துக்கான ஒரு ஆசிரியரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் போதியளவு விஞ்ஞான பாட ஆசிரியர்கள் இல்லாததால் க.பொ.த. உயர்தரப் பிரிவில் விஞ்ஞானம் பயின்ற ஒருவரைத் தெரிவு செய்து தந்தால், அவருக்கு ஆளுநரிடம் இருந்து கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (க-127)

# பூநகரியின் கரையோர கிராமங்களில் தேடுதல்

அக்கராயன்,ஏப்.11

கிளிநொச்சி பூநகரியின் கரையோரக் கிராமங்களில் இராணுவத்தினரும், கடற்படையினரும் வீடு வீடாகத் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து புலிகள் வந்துவிட்டார்கள் என்ற செய்தி வெளியாகிய பின்னர் இத்தேடுதல்களை இராணுவத்தினர் நடத்தியுள்ளனர்.

போர் நடைபெற்று ஓர் அமைதியான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் படையினர் மக்களை பீதிக்குள்ளாக்கும் வகையில் தேடுதல்களை நடத்துவதென்பது மீள்குடியமர்ந்த மக்களை அச்சுறுத்தலாக்கும் செயலாக அமைந்துள்ளது.

இதேவேளை பூநகரியின் கடற்கரைக் கிராமங்களில் அடையாள அட்டைப் பரிசோதனைகள் இறுக்கமாக இடம்பெறுவதாகவும் மக்களின் நடமாட்டச் சுதந்திரம் பாதிக்கப்படுவதாகவும் இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-18)

# பாலியாற்றில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

அக்கராயன்,ஏப்.11

மன்னார் பாலியாற்றில் தொடர்ந்து சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகின்றது.

கட்டுமானப் பணிகளைச் சாட்டாக வைத்து இந்த மணல் அகழும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் இந்த மணல் அகழும் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு எவரும் நடவடிக்கை எடுப்பதில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் கட்டுமானப் பணிகள் முழு அளவில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு மணல் அவசியம் தேவை. ஆனால் இங்குள்ள மக்கள் இதனை இலகுவாகப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான வகையில் மணலை ஏற்றிச் செல்வதைக் காணமுடிகின்றது. (க-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை பொலிஸாரினால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று நடத்தப்பட்டதுடன் அவர்களுக்குப் புதுவருடப் பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மண்டபத்தில் தெல்லிப்பழைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்கா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ண, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கமகே, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி எஸ்.ஜெயக்குமார், வைத்திய நிபுணர் குழந்தை வேலு உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். (த-86)

# அரியாலை கடற்கரைப் பகுதியில் போதைப் பொருள்கள் விற்பனை

## சிறுவர்கள் இதனால் பெரும் பாதிப்பு

**ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் கடற்கரையை அண்மித்த பகுதியில் கஞ்சா, கசிப்பு வியாபாரம் இடம்பெறுகிறது.**

யாழ்ப்பாணம், ஏப்.11

அரியாலை ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் கடற்கரையை அண்மித்த பகுதியில் கஞ்சா, கசிப்பு வியாபாரம் இடம்பெறுகிறது. இதனால் சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர் இந்த விடயம் குறித்து மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இந்த விடயத்தில் இரு பெண்களே ஈடுபட்டுள்ளனர் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் உண்மையானது என்றால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். வீண் பழிகளைச் சுமத்தாது ஆதாரத்துடன் அத்தாட்சிப்படுத்த வேண்டும். நிரூபிக்கப்படும் பட்சத்தில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் இதற்குப் பதில் கூறினார். (ம-7)

# மாதகல் மேற்கு மக்களின் மீள்குடியமர்வு இழுத்தடிப்பு

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர்கள் விசனம்

**மாதகல் மேற்குப் பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனால் அந்தப் பகுதி மீள்குடியமர்வு தொடர்பில் கடற்படையினரே பதிலளிக்க முடியும். ஆனால் அவர்கள் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.**

யாழ்ப்பாணம், ஏப்.11

மாதகல் மேற்குப் பகுதியில் மக்கள் எப்போது மீள்குடியமர்த்தப்படுவார்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பதில் கிடைக்கவில்லை. இந்தக் கூட்டத்துக்குக் கடற்படைஅதிகாரிகள் சமுகம் கொடுக்காமையால் அந்த விடயம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட பொதுமக்கள், மாதகல் மேற்குக் கிராம சேவகர் பிரிவுகளில் இன்னமும் மீள்குடியமர்வு இடம்பெறவில்லை. அந்தப் பகுதிகளில் எப்போது மீளக் குடியமர்த்துவீர்கள்? என்று கேள்வி எழுப்பினர்.

குறித்த மாதகல் மேற்குப் பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனால் அந்தப் பகுதி மீள்குடியமர்வு தொடர்பில் கடற்படையினரே பதிலளிக்க முடியும். ஆனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு எந்தவொரு கடற்படை அதிகாரியும் சமுகமளிக்கவில்லை. இதனால் கூட்டத்துக்கு வந்திருந்த மக்கள் கடும் விசனமடைந்தனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் பிரதேச செயலரிடம் கூட்டம் தொடர்பில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டதா என்று கேட்டார். அதற்கு கடற்படை அதிகாரிக்குக் கூட்டம் தொடர்பில் முன்னரே அறிவிக்கப்பட்டதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மக்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்காமல், இந்த விடயம் தொடர்பில் விசேட கூட்டம் கூட்டி ஆராயலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு மழுப்பல் பதில் அளித்தார். (த-5)

## கைபேசிக் கடையில் திருடியவர்களில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.11

அரியாலை, மாம்பழம் சந்தியில் உள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு திருடிய சந்தேகநபர்கள் மூவரை யாழ்.பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

மேலும் இருவர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 450 ரூபா பெறுமதியான 16 கைத்தொலைபேசிகள், 2 டிவிடி பிளேயர்கள், 2 கமராக்கள், றைற்ரர் என்பன திருடப்பட்டிருந்தன. அது பற்றி யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே பண்டத்தரிப்பைச் சேர்ந்த 2 பேரும், குடத்தனையைச் சேர்ந்த ஒருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பளை மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த 2 பேரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். விசாரணையைத் தொடர்ந்து திருட்டுப் போன 8 கையடக்கத் தொலைபேசிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. (ஒ-4)

## நுளம்பு வலைகள் விநியோகம்

தென்மராட்சி, ஏப். 11

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த மாதம் சர்வோதய அமைப்பினால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்ட போது கிடைக்காத குடும்பங்களுக்குச் சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை கோயிற்குடியிருப்பு (ஜே/301), சாவகச்சேரி வடக்கு (ஜே/303) ஆகிய பிரிவுகளுக்கும் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை கல்வயல் கிராம அலுவலர் பிரிவுக்கும் நுளம்பு வலைகள் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## பாடசாலைகளை புனரமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஏப்.11

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்துள்ள பாடசாலைகளைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், தனங்களப்பு அ.த.க.பாடசாலை, கரம்பகம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் கட்டடங்கள் போர் வேளையில் முழுமையாக அழிவடைந்தபோதிலும் தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்பட்டுப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் துரித மீட்சித்திட்டத்தில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகிறது. இந்த நிலையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள மூன்று பாடசாலைகளைப் புனரமைக்க இந்த திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படாதது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## இளைஞர்களின் அடாவடி; ஆசிரியை படுகாயம்

அச்சுவேலி, ஏப். 11

இராசவீதியில் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவரை, மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் காலால் உதைந்து விழுத்தியதால் அவர் படுகாயம் அடைந்தார்.

முன்பள்ளி ஆசிரியை ஒருவர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தார். இவரை முதற் தடவை கடந்து சென்ற இளைஞர்கள் அவர் தலையில் அணிந்திருந்த தொப்பியைப் பறித்துக் கொண்டு சென்றனர். மீண்டும் திரும்பி வந்த அவர்கள் காலால் சைக்கிளை உதைந்து ஆசிரியையைத் தள்ளிவிட்டுச் சென்றனர். சைக்கிளோடு வீதியோரத்தில் விழுந்த ஆசிரியை படுகாயம் அடைந்த நிலையில் வீட்டுக்குத் திரும்பினார்.

இளம் பெண்கள் வீதியால் செல்லும் போது இவ்வாறான அடாவடிச் செயல்கள் அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (த-11)

# பழுதடைந்த கடலுணவுகள் காக்கைதீவில் விற்பனை

## நுகர்வோர் பெரும் விசனம்

வலி.தென்மேற்கு,ஏப்.11

காக்கைதீவு மாலை நேரச் சந்தையில் பழுதடைந்த நிலையில் குளிரூட்டப்பட்ட கடலுணவு விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த மோசடியான செயல் குறித்து அதிருப்தி அடைந்துள்ள பாவனையாளர் சுகாதாரத்துக்குப் பங்கமேற்படுத்தும் வகையில் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் பல மாதங்களாக வீதியோரங்களில் இயங்கி வந்த மாலை நேரச் சந்தை போக்குவரத்துக்கு ஏற்பட்ட இடையூறு காரணமாக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து காக்கைதீவுக் கடற்கரையில் இயங்கி வருகின்றது.

இந்த மாலை நேரச்சந்தையால் குறிப்பாக வேலை முடிந்து வீட்டுக்குச் செல்பவர்கள் நன்மையடைகின்றனர். இந்த நிலையில் பகல் நேரங்களில் சந்தைகளில் விற்பனை செய்யப்படாமல் மிகுதியாக இருக்கும் பழுதடைந்த நிலையிலுள்ள கடலுணவுகளை, வியாபாரிகள் குளிரூட்டி மாலை நேரச் சந்தையில் விற்பனை செய்து வருகிறார்கள்.

இதனால் மறுநாள் தேவைக்காக கடலுணவை வாங்கிச் செல்லும் பாவனையாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

இது குறித்து அதிருப்தியடைந்துள்ள பாவனையாளர், மோசடியான வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுகாதாரப் பிரிவினரைக் கோரியுள்ளனர். (த-115)

# எரிபொருள் மானியம் தீவகத்திலும் வழங்கப்படும்

## 10 நிலையங்களில் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.11

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து கடல்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் எரிபொருள் மானியம் யாழ்.மாவட்டத்தின் 10 எரிபொருள் நிலையங்கள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீவகத்திலும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, பண்டத்தரிப்பு, வேலணை, யாழ்ப்பாணம், புலோலி, சங்கானை, காரைநகர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக இந்த எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் யாழ்ப்பாணம், காரைநகர் ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தனியாருக்குச் சொந்தமானவை ஆகும். ஏனைய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குரியவை.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, பண்டத்தரிப்பு, வேலணை ஆகிய நான்கு நிலையங்கள் ஊடாக மானியங்கள் வழங்குவதற்கு முன்னர் கடற்தொழில் அமைச்சு அனுமதி அளித்திருந்தது.

இந்த நிலையில் கடற்தொழிலாளர்களின் வேண்டுகோளை அடுத்து யாழ்.மாவட்டக் கடல்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி கடல்தொழில் அமைச்சுக்கு விடுத்த கோரிக்கையின் பிரகாரமே 10 நிலையங்கள் ஊடாக மானியம் வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (த-3-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய புரட்சியாளர்களால் அமைதித் திட்டம் நிராகரிப்பு



முன்னாள் ஐ.நா. செயலாளர் கோபி அனானினால் கொண்டுவரப்பட்ட அமைதித் திட்டத்தை சிரிய புரட்சியாளர்கள் நிராகரித்திருக்கின்றனர்.

சிரியாவில் அதிபர் அசாத் ஆட்சிக்கு எதிராக புரட்சியாளர்கள் ஆயுதம் தாங்கி போராடி வருகின்றனர். இந்த நிலையில் அரபு நாடுகளின் தூதுவர் கோபிஅனான் முயற்சியால் உருவான அரசின் படைகளை வாபஸ் பெரும் திட்டம் நாளை முதல் நடைமுறைக்கு வருவதாக இருந்தது. ஆனால் படைகளை திரும்ப பெறுவதற்கு முன் எதிர்ப்பாளர்கள் தங்கள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என அதிபர் ஆசாத் நிபந்தனை விதித்தார்.

மேலும் கிளர்ச்சியாளர்கள் எழுத்து பூர்வமாக உறுதி அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் கிளர்ச்சியாளர்கள் குழுவின் தலைவர் ரியாத் அல் ஆசாத், எழுத்து வடிவில் எந்த உறுதியும் கொடுக்க முடியாது என்று பதிலளித்திருந்தார். இதனால் படைகளைத் திரும்ப பெறுவதில் சிக்கல் எழுந்துள்ளது.

இப்பின்னடைவு குறித்து அனானின் செய்தித் தொடர்பாளர் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. முன்னதாக சிரியாவின் படைகள் உலங்கு வானூர்திகள் மூலம் தாக்குதல் செய்வது நிறுத்தப்பட வேண்டும் என கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெட்கப்படும் சர்தாரியின் மகன்!

இந்தியா- பாகிஸ்தானில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் அதிகம் இருக்கும் போது இரு நாடுகளும் ஆயுதங்களை வாங்கி குவிப்பது தேவையற்றது என்றும் அதற்காக வெட்கப்படுகிறேன் என்றும் பாகிஸ்தான் அதிபர் சர்தாரியின் மகன் பலாவல் சர்தாரி கூறியிருக்கிறார். இந்தியாவிற்கு பயணம் முடித்து நாடு திரும்பிய பலால் தனது டுவீற்றரில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டாமல் இருக்க வேண்டும். இந்த இரு நாடுகளும் பணத்தை கல்வி, மருத்துவம், சுகாதாரம் என முன்னேற்றத்திற்கு செலவழிக்க வேண்டும். வறுமையில் வாடுவோர் அதிகம் வசிக்கையில் ஆயுதம் குவிப்பு தேவையற்றது.

அணு ஆயுத அழிவையும் அவர் வெறுத்து கருத்து வெளியிட்டுள்ளார்.

## துருக்கி – சிரிய எல்லையில் துப்பாக்கிச் சூடு; 2 பேர் சாவு



துருக்கி - சிரிய எல்லையில் சிரியாவின் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் துருக்கியிலிருந்த சிரிய பிரஜைகள் இருவர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர் என்று அனடோலியா செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

காயமடைந்த 17 பேர் துருக்கிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அவர்களில் இருவர் இறந்தாகவும் துருக்கிய சுகாதார அதிகாரிகள் தெரிவத்துள்ளனர்.

சிரிய பகுதியிலிருந்து இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவிலிருந்து அயல்நாடுகளான துருக்கிக்கு அகதிகள் தப்பிச்சென்றுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தற்போது துருக்கியில் சிரிய அகதிகள் சுமார் 24,000 பேர் உள்ளனர்.

## காத்திருக்கிறது வடகொரியா



சர்ச்சைக்குரிய தமது ஏவுகணைத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக வட கொரியா அறிவித்துள்ளது.

செய்மதி தாங்கிய ஏவுகணை ஒன்றை நாளை 12 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஏவுவதற்கு வட கொரியா தீர்மானித்துள்ளது.

வட கொரியாவின் வட மேல் பிராந்தியத்தில் வைத்து இந்த ஏவுகணை விண்ணுக்கு ஏவப்படவுள்ளது.

எனினும் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் வட கொரியாவின் இந்தத் திட்டம் அமைந்துள்ளதாக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன

## சவுதியில் சிக்கிய 'அடிமை'



ரியாத், ஏப்.11

சவுதியில் ஒட்டகம் மேய்க்கும் வேலைக்குச் சென்ற தமிழர், தாய்நாடு திரும்ப முடியாமல் 18 ஆண்டுகளின் பின் நாடு திரும்பியுள்ளார்.

1994ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் வேலைக்குச் சென்றார். ஒட்டகம் மேய்க்கும் வேலைதான் கிடைத்தது. ஹெய்ல் பகுதியில் ஒட்டகம் மேய்த்து வந்தார். ஆனால், பெரியசாமிக்கு சம்பளம் வழங்கவில்லை. இப்படியே பல மாதங்கள் கழிந்தன. ஊருக்குச் சென்று எல்லோரையும் ஒருமுறை பார்த்துவர விரும்பி விடுமுறை கேட்டார். அதுவும் மறுக்கப்பட்டது. விசா, கடவுச்சீட்டு உட்பட எல்லா ஆவணங்களையும் உரிமையாளர் பிடுங்கி வைத்துக் கொண்டார்.

பல ஆண்டுகள் கழிந்தும் அவருக்கு விடிவு காலம் பிறக்கவில்லை. மன உளைச்சல் காரணமாகத் தற்கொலைக்கும் முயன்றார். இவருடைய பரிதாப நிலையை அறிந்து சவுதி நண்பர்கள் சிலர், இவர் தமிழ்நாடு திரும்ப உதவினர். அடிமை போல அவரை வேலைக்கு வைத்திருப்பது குறித்து முதலில் உள்ளூர் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். அதன் அடிப்படையில் பொலிஸார் விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவரை கைது செய்தனர்.

## தாய்லாந்துக் குண்டுவெடிப்புக்கு ஈரானியர்களே சூத்திரதாரிகள்

பாங்கொக், ஏப். 11

தாய்லாந்தில் கடந்த பெப்ரவரி மாதம் குண்டு வெடிப்பு நடந்தது. இதில் ஈடுபட்டவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை ஒன்றைச் சமர்பித்துள்ளனர். அதில் 5 ஈரானியர்கள் மீது சந்தேகம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மசூத் சிதாஹாத் சதீக் என்பவர் முக்கிய புள்ளி ஆவர். தற்போது இவரை மலேசிய பொலிஸ் கைது செய்து வைத்துள்ளது. எனவே அவரை தாய்லாந்துக்குக் கொண்டு வர தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் சபீர் மொராதி, முகமது காசாய், நிக்காபார்த் ஜாவாத் மற்றும் லைலா ரோகனி என்ற பெண் ஆகிய 4 பேருக்கும் குண்டு வெடிப்பில் தொடர்பு இருக்கிறது. இந்த தகவலை தாய்லாந்து உயர் பொலிஸ் அதிகாரி பன்சீரி பிரபாவாத் தெரிவித்தார்.

## கேபிள் கார் விபத்து

சுவிற்சர்லாந்தின் செயின்ட் மோரிட்ஸ் ரெசார்ட் பகுதியில் உயர்ந்த பனிமலைகள் உள்ளன. இவற்றை சுற்றிப் பார்க்க பல வெளிநாட்டுப் பயணிகள் வருகின்றனர். இந்நிலையில், 75 சுற்றுலாப் பயணிகள் பனிமலையைச் சுற்றிப் பார்க்க கேபிள் காரில் சென்றனர். கிளிட்ஸ் பனிமலை பகுதியில் கேபிள் கார் சென்ற போது திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக நின்றுவிட்டது. அந்தரந்தில் கார் தொங்கிக் கொண்டிருந்தது. தகவல் அறிந்து மீட்புப் படையினர் ஹெலிகொப்டர்களில் விரைந்து சென்று பயணிகளை மீட்டனர்.


**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.

சம்பளம் : ரூபா 10,250/=

தொடர்பு : 077 3765628

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் கோழிகள் தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்த புறொயிலர் ரூ.450 மட்டுமே.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல.021 222 6944

உ
சிவமயம்

**ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு**



தவப்பேறு 15 ★ 05 ★ 1950

சிவப்பேறு 14 ★ 03 ★ 2012

அரியாலையூர்

அமரர்

**லலிதா சண்முகலிங்கம்**

( ஓய்வு பெற்ற உப அதிபர், யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நாளை (12.04.2012) வியாழக்கிழமை மு.ப. 11.45 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வுக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி வீரர்கள், யாழ்/ பல்கலைக்கழக விளையாட்டுத்துறை, விஞ்ஞான அலகு மாணவர்கள் மற்றும் எனது நண்பர்கள் அனைவரும் எனது நிலைமையினைக் கருத்தில் கொண்டு இந்த அழைப்பை என்னுடைய தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
V.K. சண்முகலிங்கம் (கணவர்)
(கிரிக்கெட் பயிற்றுநர்),
S. அகிலன், S. விமலன்
(பிள்ளைகள் - ஆஸ்திரேலியா)

125, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

**நீங்காத நினைவலைகள்**

நான்காம் ஆண்டு



மண்ணில் 16 ★ 04 ★ 1927 விண்ணில் 14 ★ 03 ★ 2008

முதலாம் ஆண்டு



மண்ணில் 05 ★ 04 ★ 1933 விண்ணில் 01 ★ 03 ★ 2011

அளவெட்டி மேற்கு, மலைவேம்படி தம்பனையைச் சேர்ந்த

அமரர் **ஆறுமுகம் தர்மலிங்கம்**

(முன்னாள் முகாமையாளர்
இலங்கை வங்கி - காங்கேசன்துறை, கிளிநொச்சி)

திருமதி **இராஜேஸ்வரி தர்மலிங்கம்**

அன்பு, அரவணைப்பு, அழியாக்கல்வி
ஆழுமை தந்து ஆளாக்கிய
தெய்வங்களே.........

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்


பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(16679) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டு சோதனைக்கு தயாராகிறது வடகொரியா

## தென்கொரிய புலனாய்வுத்துறை பரபரப்புத் தகவல்



ஏவுகணை சோதனை நடத்தப்படும்போது எழும் சர்வதேச கண்டனங்களை, தனது அணுகுண்டு சோதனைக்கான சாட்டாக வட கொரியா பயன்படுத்தும் என தென்கொரிய புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா மீண்டும் அணுகுண்டு சோதனைகளை நடத்தவுள்ளதாக தென்கொரிய புலனாய்வுத் தகவல்களை மேற்கோள் காட்டி சி.என்.என். செய்தி வெளியிட்டுள்ளது.

வடகொரியாவின் புங்கிறீ பிராந்தியத்தில் இந்த அணுகுண்டு சோதனை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அப்பகுதியில் 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் அணு குண்டு சோதனைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வாரம் ஏவுகணை சோதனையொன்றை வட கொரியா நடத்தவுள்ள நிலையில் தென்கொரியாவின் இந்தப் புலனாய்வு அறிக்கை வெளியாகியுள்ளது.

ஏவுகணை சோதனை நடத்தப்படும்போது எழும் சர்வதேச கண்டனங்களை, தனது அணுகுண்டு சோதனைக்கான சாட்டாக வட கொரியா பயன்படுத்தும் என தென் கொரிய புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணுகுண்டு சோதனைக்காக தோண்டப்பட்டதாகக் கூறப்படும் சுரங்கத்தின் செய்திமதிப் புகைப் படங்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சுரங்கத்தின் வாயிலில் அசாதாரணமான வகையில் மண்குவியல்கள் உள்ளதை இப்புகைப்படங்கள் காண்பிக்கின்றன. மார்ச் மாதத்திலிருந்து இம்மண்குவியல்களின் அளவு அதிகரித்து வருவதாக மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணுகுண்டு சோதனை தொடர்பாக வடகொரிய அரச ஊடகங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. எனினும் இத்தகைய சோதனைக்கு வட கொரியா திட்டமிடுவதாக அமெரிக்கா நம்புவதற்கு காரணம் உள்ளது என அமெரிக்காவின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் தெரிவித்துள்ளனர்.

## பெருவில் சுரங்க விபத்து 9 தொழிலாளர்கள் உயிர் ஊசல்



பெரு நாட்டில் தங்கம் மற்றும் செம்பு ஆகியவற்றை எடுக்கும் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்த சுரங்கங்களில் அடிக்கடி நிலச்சரிவு காரணமாக விபத்துக்கள் ஏற்படுவது வழக்கம். இது போன்று அந்நாட்டின் தென்பகுதியில் காபசா என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு சுமார் 200 மீற்றர் ஆழத்தில் 9 தொழிலாளர்கள் சிக்கி தவிக்கிறார்கள்.

இவர்களை உயிருடன் மீட்கும் நடவடிக்கையில் நிவாரண குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். குழாய் மூலம் இந்த தொழிலாளர்களுக்கு திரவ உணவு மற்றும் ஒட்சிசன் கொடுத்து வருகின்றனர்.

## தடைசெய்யப்பட்ட கட்சிகளும் எகிப்து தேர்தல் களத்தில்

### வேட்பு மனுத்தாக்கல் நிறைவு

எகிப்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியை அடுத்து ஜனாதிபதித் தேர்தல் முதல் தடவையாக நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 23 பேர் தங்களை பதிவு செய்துள்ளனர். எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி இந்தத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஹோஷ்னி முபாரக் பதவி விலக்கப்பட்டதை அடுத்து எகிப்தில் அரசியல் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. முன்னர் எகிப்தில் தடை செய்யப்பட் டிருந்த பல கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 27 ஆண்டுகளுக்குப் பின் துருக்கிப் பிரதமர் சீனாவுக்கு



துருக்கிய பிரதமர் ரிசெப் தாயிப் ஏர்கோடன் சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

சிரியா விவகாரம் மற்றும் சீனாவின் உய்குர் பிராந்திய விவகாரங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் முரண்பாடுகள் உள்ளபோதிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, அரசியல் உறவுகளை விருத்தி செய்வதற்கு இந்தப் பயணம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 27 ஆண்டுகளில் துருக்கிய பிரதமர் ஒருவர் சீனாவுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

பிரதமர் ஏர்கோடனுடன் 300 வர்த்தகர்களும் சீனாவுக்குச் சென்றுள்ளனர் என்று சீன அரசின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிசக்தி, நிர்மாணத்துறை, வாகனங்கள், வங்கி, தகவல் தொடர்புத்துறை என்பனவற்றில் இரு நாடுகளும் ஒத்துழைக்க முடியும் என சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஏர்கோடன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரவுத் தேடுதலுக்கு ஒப்பந்தம் கைச்சாத்து

### அமெ. - ஆப்கன் இடையே

தீவிரவாதிகள் ஆதிக்கம் உள்ள இடங்களில் இரவில் தேடுதல் நடத்த, ஆப்கானிஸ்தானுடன் அமெரிக்கா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கும்பணியில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஈடுபட்டுள்ளன.

ஆனால், ஆப்கனை விட்டு படைகள் வெளியேற வேண்டும் என்று கோரி தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க படைகள் திடீர் திடீரென சோதனை நடத்தி தாக்குதலில் ஈடுபடும் போது, பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். அவர்களுடைய வீடு உள்ளிட்ட உடைமைகளும் சேதம் அடைந்தன. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

இந்நிலையில், தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் இரவில் தேடுதல் நடத்த ஆப்கன் - அமெரிக்கா ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அதன்படி, பொதுமக்களுக்கு தெரிவிக்காமல் திடீர் தேடுதல் நடத்த முடிவாகி உள்ளது.

இதில் அமெரிக்க படையினருடன் ஆப்கான் பொலிஸாரும் ஈடுபடுவார்கள். வீடுகளுக்குள் புகுந்து எந்த நேரத்திலும் சோதனையிட அமெரிக்கப் படைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் ஆப்கன் ராணுவ அமைச்சர் ஜெனரல் அப்துல் ரகிம் வர்தாக், அமெரிக்க படை கொமாண்டர் ஜெனரல் ஜோன் ஆலன் ஆகியோர் கையெழுத்திட்டனர்

## மாலியின் ஜனாதிபதி பதவி துறந்தார்



நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் நோக்கில், மாலியின் ஜனாதிபதி அமாடு டவுமணி தமது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. இடைக்கால அரசை அமைப்பதற்கான செயற்பாடுகள் தற்போது மாலியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னாள் இராணுவத்தினரை உள்ளடக்கிய கிளர்ச்சிக்குழுவினால் கடந்த மாதம் நாட்டின் அதிகாரம் கைப்பற்றப்பட்டிருந்தது. எனினும் சர்வதேச அழுத்தங்களினால் தேர்தல் ஒன்றை நடாத்தி ஜனநாயக வழியில் செயற்பட கிளர்ச்சியாளர்கள் முன் வந்துள்ளனர்.

ஜனாதிபதியின் திறனற்ற செயற்பாடுகளால் இராணுவ சதிமூலம் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்ததாக கிளர்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## புதிய நிபந்தனைகளோடு ஈரானுடன் அணுசக்திப் பேச்சு

### நாளை மறுதினம் நடைபெறும்

ஈரானின் அணுசக்தி உலை தொடர்பான முதல் கட்ட பேச்சுவார்த்தை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மன் ஆகிய நாடுகள் தான் முடிவு எடுக்கும் நிலையில் இருக்கின்றன எனத் தெரியவருகின்றது. ரஷ்யா, சீனா ஆகியவை விலகி இருக்கின்றன.

இதற்கிடையில் ஈரான் மனிதவள மேம்பாட்டிற்கு அணுசக்தியை பயன்படுத்த அமெரிக்க ஜனாதிபதி விருப்பம் தெரிவித்து விட்டதாகவும், அதனை ஈரான் தலைவருக்கு தனது தூதுவர் மூலம் தெரிவித்து விட்டதாகவும் ஒரு தகவல் வெளியானது.

என்றாலும் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமானால், அந்த நாடு மலைப் பிரதேசத்தில் அமைத்துள்ள அணு உலை இயக்கத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் நிபந்தனை விதித்து இருக்கின்றன. இதை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் தெரிவித்ததாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஒபாமா நிர்வாக உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், இந்த விவகாரத்தில் ஈரானின் கருத்து என்ன என்பதை தற்போதைக்கு ஊகிக்க இயலாது. முதல் கட்ட பேச்சுக்கு பின்னரே எதுவும் கூற முடியும் என்று தெரிவித்தார்.

## தெருவில் இறங்கினர் ஜனநாயகவாதிகள்...




[illegible]ப்பின்மை, ஆள்கடத்தல் போன்ற [illegible] ஜனநாயகவாதிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சே மாநில தேர்தல்

இந்தோனேஷியாவில் அச்சே மாநிலத்தில் 30 ஆண்டுகாலம் நடைபெற்ற பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த 2005 அமைதி உடன்படிக்கைக்குப் பின் - அங்கே இரண்டாவது தேர்தல் நடைபெறுகின்றது.

அதில் மக்கள் வாக்களிக்கும் முக்கியமான பதவிகளில் ஒன்று - கணிசமான அளவு சுயாட்சி அதிகாரம் உள்ள - அச்சே பகுதிக்கான ஆளுநர் பதவி.

இதில் தற்போதைய ஆளுநர் இர்வந்தி யூசப், முன்னாள் போராளிகளின் ஆதரவாளர்களிடம் பிரபலமான வேட்பாளரான சைனி அப்துல்லாவிடம் இருந்து கடும் போட்டியைச் சந்திக்கிறார்.

# அணுமின் நிலையத்தை எதிர்ப்பதா? இலங்கைக்கு கருணாநிதி கண்டனம்



சென்னை,ஏப்.11

கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு இலங்கை எதிர்ப்புத் தெரிவித்துள்ளதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

நீண்ட நாள்களின் பின்னர் சட்டப் பேரவைக்கு கருணாநிதி வந்தார். அங்கு வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டார். அதன்பின்னர் இந்திய அணுசக்தி நிலையங்களால் இலங்கைக்கு ஆபத்து இருப்பதாக இலங்கை முறைப்பாடு தெரிவித்து வருகிறது. இதுகுறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோதே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணுமின் நிலையத்தால் தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக இலங்கை அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது. கூடங்குளம் அணுமின் நிலையம் தமிழக கடலோரப் பகுதிகளுக்கு மட்டுமின்றி இலங்கைக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. எதிர்பாராதவிதமாக அங்கு கதிர் வீச்சு ஏற்பட்டால் அது இலங்கை வரை பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால் இலங்கையின் மேற்கு கடலோரப் பகுதியில் இருந்து 240 கி.மீ. தூரத்தில் தான் கூடங்குளம் அணுமின் நிலையம் அமைந்துள்ளது.

பசுமை வீடுகளின் வாயுக்களின் வெளியேற்றம் அதிகரித்தால்(கிரீன் ஹவுஸ் கேஸஸ்) புயல், பெருமழை போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்படும். இந்தியாவில் இது வரை அதிகபட் சமாக 200 மெகாவாற் திறன் கொண்ட அணு உலைகளே அமைக்கப்பட்டன. தற்போது கூடங்குளத்தில் முதன் முறையாக 1000 மெகாவாற் திறன் கொண்ட அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே அந்த அணு உலைகளை நிர்வகிப்பதில் சிறிய தவறு ஏற்பட்டாலும்பெரிய ஆபத்துஏற்படும் என்று இலங்கை தெரிவித்தது.

இந்த நிலையில் கூடங்குளம் அணுமின் திட்டம் நேற்று ஆரம்பிக்கவில்லை. அந்தத் திட்டம் நீண்ட காலமாக இடம்பெற்று வருகிறது. தற்போது கூடங்குளம் பற்றி இலங்கை பிரச்சினை எழுப்பியிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் கூறமாட்டேன். ஆனால் மத்திய அரசு இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன் - என்றார் அவர்.(வ)

## ஹைதராபாத்தில் அமைதி திரும்பியது எனினும் ஊரடங்கு நீடிப்பு

ஹைதராபாத்,ஏப்.11

ஹைதராபாத்தில் இருபிரி வினரிடையே ஏற்பட்ட கலவர பகுதியில் நேற்றுமுன்தினம் அமைதி திரும்பியது. எனினும் இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினமும் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் இரு பிரிவினருக்கு இடையே கடந்த சனிக்கிழமை மோதல் ஏற்பட்டது. கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. பஸ்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. மதனபட், சைதாபாத் பகுதிகளிலும் கலவரம் பரவியது.

பொலிஸார் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர தடியடி நடத்திப் போராட்டக்காரர்களை விரட்டி அடித்தனர். மேலும், கலவரம் பரவாமல் தடுக்கும் வகையில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பொலிஸார் கடந்த சனிக்கிழமை இரவு முழுவதும் ரோந்து சுற்றி வந்தனர்.

பத்தாம் வகுப்புத் தேர்வு நடந்த பகுதிகளில் கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இதற்கிடையே, கலவரத்தில் ஈடுபட்டதாக 60 இற்கும் மேற்பட்டவர்களைப் பிடித்து பொலிஸார் விசாரணை நடத்தினர். இதில் 15 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். பொலிஸாரின் தீவிர கண்காணிப்புக்குப் பின் நிலைமை நேற்று முன்தினம் சுமுகமடைந்தது.

## பிரான்ஸிலிருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்தியவர் கைது

சென்னை,ஏப்.11

பிரான்ஸிலிருந்து சென்னை வந்த விமானத்தில் ரூ.81 லட்சம் மதிப்புள்ள தங்கத்தைக் கடத்தியதாக தொழிலதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.


சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி, பிரான்ஸிலிருந்து வந்த விமானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு சோதனை நடத்தப்பட்டது.

இதில் காரைக்காலைச் சேர்ந்த அப்துல் காதரின் (வயது 34) உடைமைகளை சோதனை செய்தபோது, வெளிநாட்டு சொக்லேட், பிஸ்கெட் பொதிகளில் தங்க நாணயங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

அவர் கொண்டு வந்த பெட்டியில் இருந்த 350 தங்க நாணயங்களை அதிகாரிகள் கைப்பற்றினார்கள். அத்துடன், அவரது சட்டையில் 18 தங்க நாணயங்களை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இதன்மூலம் அவரிடமிருந்து மொத்தம் 3 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு சுமார் ரூ.81 லட்சம் ஆகும்.

இது தவிர அவரிடம் இருந்து வெளிநாட்டுப் பணமும் கைப்பற்றப்பட்டது. இதுகுறித்த பொலிஸ் விசாரணையின்போது, பிரான்ஸில் ஓட்டல் நடத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.(வ)



இந்திய கடலோர விமானப்படை மூலம் பாக்.ஜலசந்தி, மன்னார் வளைகுடா பகுதிகளில் இன்று முதல் கண்காணிப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட உள்ள நவீன சிறிய ரக ஆளில்லா விமானம்.

## லோக்பால் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த எஸ்.எம்.எஸ். அட்டை

மும்பை, ஏப்.11

லோக்பால் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அன்னா ஹசாரே தலைமையிலான இயக்கம் எஸ்.எம்.எஸ். அட்டை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அட்டை வருடம் முழுவதும் லோக் பால் குறித்த பிரசாரத்தை சந்தாதாரர்களுக்கு வழங்கும்.

தலா 20 ரூபா மதிப்பில் ஒரு கோடி அட்டைகளை வாங்கியுள்ளோம். அதை பொதுமக்களிடையே விநியோகித்து வருகிறோம் என்று ஹசாரேவின் நண்பர் தத்தா ஏவாரி தெரிவித்தார்.

## அதிகமுறை வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட இந்திய ஜனாதிபதி



**தனது ஐந்தாண்டு பதவிக்காலத்தில் 12 முறை வெளிநாடு பயணம் மேற்கொண்டு 22 நாடுகளுக்கு அரசு முறைப்பயணமாக சென்றுள்ளார்.**

அதிகதடவைகள் வெளிநாடு பயணம் மேற்கொண்ட இந்திய ஜனாதிபதி என்ற பெருமையை பிரதிபா பாட்டீல் பெற்றுள்ளார். மேலும் இவர் ஆபிரிக்கா நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீலின் பதவிக்காலம் இந்த வருடத்துடன் ஜூலையில் நிறைவடைகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு பதவியேற்ற இவர், தனது ஐந்தாண்டு பதவிக்காலத்தில் 12 முறை வெளிநாடு பயணம் மேற்கொண்டு 22 நாடுகளுக்கு 79 நாள்கள் அரசு முறைப்பயணமாக சென்றுள்ளார்.

இதன் மூலம் அதிக தடவைகள் வெளிநாடு சென்ற இந்திய ஜனாதிபதி என்ற பெருமையை பிரதிபா பெற்றுள்ளார். இதற்காக மத்திய அரசு ரூ.205 கோடி செலவிட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் தனது கடைசி வெளிநாட்டு பயணமாக வரும் ஜூலை மாதத்தில் 12 நாள் பயணமாக சிசிலி, தென்னாபிரிக்கா உட்பட ஆபிரிக்க நாடுகளுக்கு செல்ல உள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரம் தெரிவித்துள்ளது.

எனினும் இதுகுறித்து உறுதியான தகவல்கள் இல்லை என்றாலும் அதற்கு முன்னதாக ஏப்ரல் 27 அல்லது 28 ஆம் திகதிகளில் புறப்பட்டு மே 8 ஆம் திகதி நாடு திரும்ப திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ராஷ்டிரபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 10 வருடங்களாக கடும் விரதமிருந்து மகனை எம்.எல்.ஏ. ஆக்கிய தாய்!

அரசியல்வாதியான தன் மகன் சட்டசபை உறுப்பினர், அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டும் என்பதற்காக, பத்து ஆண்டுகளாக பால், பழங்கள் மட்டும் சாப்பிட்டு விரதமிருந்த தாய், தன் பிரார்த்தனை நிறைவேறியதை அடுத்து, விரதத்தை முடித்துக்கொண்டார்.

உத்தரப்பிரதேச மாநிலம் பாஸ்தி மாவட்டத்தில் உள்ளது ருத்ஹவுலி சட்ட சபைத் தொகுதி. இந்தத் தொகுதியைச் சேர்ந்தவர் சஞ்சய் பிரசாத் ஜெய்ஸ்வால். இவரது தாயார் மாயாதேவி. அரசியல் வாதியான ஜெய்ஸ்வால், 2002ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில், ருத்ஹவுலி சட்ட சபைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். முதன் முதலாக சந்தித்த இந்தத் தேர்தலில், அவர் மூன்றாம் இடத்தைப்பிடித்தார்.

மகனின் தோல்வியைக் கண்டு மனம் வருந்திய தாய் மாயாதேவி, ஜெய்ஸ்வால் எம்.எல்.ஏ.ஆகும் வரை உள்ளூர்த் தெய்வத்தை வேண்டி, விரதம் இருக்கப் போவதாகவும், அதுவரை பால், பழங்கள் மட்டுமே சாப்பிடப்போவதாகவும் அறிவித்தார். மகன் பேரவை உறுப்பினரான பின்னரே விரதத்தைக் கைவிடப் போவதாகவும் கூறினார். அதன்படி விரதத்தை ஆரம்பித்தார்.

கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில், ஜெய்ஸ்வாலுக்கு மீண்டும் தேர்தலில் போட்டியிட இடம் வழங்கப்பட்டது. இம்முறை அவர் அதிக வாக்குகள் வாங்கினாலும், தோல்வியையே தழுவினார். இதன்பின் 2008ஆம் ஆண்டு கலிலாபாத் லோக்சபா தொகுதி இடைத்தேர்தலிலும் போட்டியிட்டார். அதில் நான்காவது இடத்தைத்தான் பிடிக்க முடிந்தது. மூன்று தேர்தல்களில் தோல்வி அடைந்ததால், ஜெய்ஸ்வால் நம்பிக்கை இழந்தார். ஆனால் அவரின் தாய் விரதத்தை விட வில்லை. கடவுள் தன்னைக் கைவிட மாட்டார் எனக் கூறி வந்தார்.

**மகன் மூன்று தடவையும் தோல்வியுற்றபோதும் மனம் தளராது விரதத்தைத் தொடர்ந்த தாய்.**

இந்தநிலையில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் அண்மையில் நடந்த சட்டசபைத் தேர்தலில், காங்கிரஸ் கட்சி சார்பில் ஜெய்ஸ்வால் மீண்டும் போட்டியிட்டார். அவரது தாயாரின் விரதத்திற்கு பலன் கிடைத்தது. தேர்தலில் ஜெய்ஸ்வால் வெற்றி பெற்று சட்டசபை உறுப்பினரானார். இதையடுத்து, உள்ளூரில் உள்ள பைரவா தேவி கோவிலுக்குச் சென்ற, மாயாதேவி அங்கு கடவுளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தன் விரதத்தைக் கைவிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கடலுக்குச் செல்லத் தடை மீன் விலை உயரும் அபாயம்



தூத்துக்குடி, ஏப்.11

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏப்ரல் 15 ஆம் திகதி தொடக்கம் 45 நாள்களுக்கு விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே மீன் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கடலில் மீன்கள் இனப் பெருக்கத்தைக் கருத்தில் கொண்டு ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்படுவது வழக்கம். அந்த நாள்களில் மீன்கள் ஆழ்கடலில் முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இன விருத்தி செய்யும். எனவே கடலில் மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில் கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து தமிழகம் மற்றும் புதுச்சேரி கடல் பகுதியில் 45 நாள்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டு வருகிறது.

**ஒவ்வொரு ஆண்டும் கடலில் மீன்கள் இனப் பெருக்கத்தை கருத்தில் கொண்டு ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்படுவது வழக்கம்.**

விசைப்படகுகள் கடலுக்குச் செல்ல அனுமதி இல்லை. கட்டுமரம் மற்றும் பைஃபர் படகுகளுக்கு அனுமதி உண்டு. தமிழகம் முழுவதிலும் இருந்து 15 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லாது. கடலுக்குச் செல்ல முடியாததால் விசைப் படகு மீனவர்கள் தொழில் மற்றும் வருவாய் இன்றித் தவிக்கும் நிலை ஏற்படும். இந்த நிலையைப் போக்க தமிழக அரசு மீனவர்களுக்கு ரூ.4,000 நிவாரணத் தொகையாக வழங்குகிறது.

## சுய மதிப்பீடல்

(8)

"இந்தக் காலத்தில் யார் தன்னம்பிக்கையோடு வலம் வருகிறார்கள்?" என்றொரு கேள்வி ஒரு மனோவியலாளரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

'சட்டைப்பையில் போதுமான பணம் இருப்பவர்களே தன்னம்பிக்கையோடு வலம் வருகிறார்கள்!'

அவரது வார்த்தைகள் நூற்றுக்கு நூறு உண்மை. அவசியத் தேவைக்குக் கூட கையில் பணமில்லாமல் பிறரை எதிர்பார்த்துக் காத்திருப்போருக்கு ஒருபோதும் தன்னம்பிக்கை இருக்காது.

செலவு செய்யும் முன் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து, இது நமக்கு அவசியம்தானா என்று சிந்தித்து எந்தப் பொருளையும் வாங்குங்கள்.

"வசதியான சூழலிலும், வசதியைத் தவிர்த்து வாழ்ந்து பாருங்கள்" என்று கூட ஒரு பொன்மொழி கூறுகிறது. வசதியைக் குறைத்து வாழ வேண்டாம். ஆனால், ஊதாரித்தனமாகச் செலவு செய்வதையாவது குறைத்துக் கொள்ள முடியும்.

பணத்தின் தேவையைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அதே வேளையில் பணமே எல்லாம் என்ற எண்ணமும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பெயர் தெரியாத நிதி நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்துவிட்டு பிறகு கையிலுள்ளதையும் பறிகொடுத்து எதிர்காலம் குறித்த அவநம்பிக்கையில் திரியாதீர்கள்.

### தைரியம் தேவை

பயம் என்பது ஒரு வலையைப் போன்றது. அது ஒரு சிறையைப் போல உங்கள் தன்னம்பிக்கையை சிதைத்து விடக் கூடியது. பயமானது உங்கள் அறிவைக் குழப்பி, ஆற்றலைச் சிதைத்து உங்கள் தன்னம்பிக்கையை முழுவதுமாய் தின்றுவிடுகிறது.

ஆக, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள, நீங்கள் தைரியத்தை வளர்த்துக் கொண்டே ஆகவேண்டும்.

இந்த உலகில் எதைக் கண்டெல்லாம் நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று ஒரு பட்டியல் தயார் செய்து பாருங்கள்.

ஆரோக்கியம் குறித்துப் பயப்படுகிறீர்களா?
வேலை போய்விடும் என்று பயப்படுகிறீர்களா?
வறுமை குறித்துப் பயப்படுகிறீர்களா?
பிறருடைய அபிப்பிராயத்துக்காகப் பயப்படுகிறீர்களா?
விபத்துக் குறித்துப் பயப்படுகிறீர்களா?
- இப்படிக் கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள்.

இந்த உலகில் நாம் அச்சப்படும் பெரும்பாலானவற்றில் புறச் சூழ்நிலையிலிருந்து வெறும் 2 சதவீதம் மட்டுமே நடக்க வாய்ப்பிருப்பதாக மனோவியலாளர்கள் கூறுகிறார்கள். மீதி எல்லாம் நம் மனதின் அச்சம்தான். அதைத்தவிர வேறொன்றுமில்லை.

இதுவரை நடக்காத, ஆனால் நடந்துவிடுமோ என்று பயப்படுகின்ற எந்தத் தீமையாகட்டும், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், 'வரும்போது பார்த்துக் கொள்ளலாம்; இப்போதைக்கு நம்பிக்கையோடு செயல்படுவோம்!' என்ற எண்ணத்தோடு வாழ வேண்டியதுதான்! அவ்வாறு வாழ்ந்து பாருங்கள்! நீங்கள் பயப்படுகிற எதுவுமே நடக்காமலேயே போய்விடும்.

இனி நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது குறித்து அச்சப்பட்டுக் கொண்டிருந்தால் அந்த அச்சம் மேலும் மேலும் உங்கள் தன்னம்பிக்கையைச் சிதைத்துக் கொண்டிருக்கும். அதனால் துணிந்து செயலில் இறங்கி விடுங்கள்.

இதுவரை உங்களுக்குத் தெரியாமல் போனது எதனால்? நீங்கள் அதைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கவில்லை, அவ்வளவுதான்.

உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியவில்லை. அதன் காரணம் என்ன? நீங்கள் அதற்கான முயற்சியில் இதுவரை இறங்கவில்லை என்பதுதான் உண்மையே தவிர, வாழ்நாள் முழுவதும் நீங்கள் கார் ஓட்டத் தெரியாதவராகவே ஆகிவிட முடியாது.

அடுத்து, புறக் காரணங்களால் ஏதேனும் பாதகமான சூழ்நிலை வந்துவிட்டால் என்ன செய்வது? அந்தப் பிரச்சினையில் மாட்டிக் கொள்வதும், அதிலிருந்து விடுபடுவதும் அந்தப் பாதகமான சூழ்நிலையை நீங்கள் எப்படிக் கையாள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது. அதனால் எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் தைரியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். தன்னம்பிக்கை தானாக ஊற்றெடுக்கும்.

### வயது போய்விட்டதா?

இள வயதிலேயே பெரும் சாதனையாளனாக யாருக்குத்தான் ஆசை இருக்காது? ஆனால்,எல்லோருக்குமே அந்த வாய்ப்பும் சூழ்நிலையும் கிடைத்துவிடுகிறதா?

என் இளமை வறுமையிலும் துன்பங்களிலும் கடந்துவிட்டது. இனிமேல் நான் என்ன சாதித்துவிடப் போகிறேன்? என்று பலருக்கும் தளர்ச்சி ஏற்படலாம்! ஆனால் நீங்கள் தன்னம்பிக்கையோடு திகழ்வதற்கும், சாதனைகள் புரிவதற்கும் வயது ஒரு தடையே அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொண்டாக வேண்டும்.

வயது போய்விட்டால் ஒருவருடைய கற்பனை வளமும் (Creativity), செயல்திறனும் (productivity) நலிந்து போய் விடும் என்பது ஒருபோதும் உண்மையில்லை.

உலகில் எத்தனையோ சாதனையாளர்கள், எத்தனையோ படைப்பாளிகள் தங்கள் தலைசிறந்த சாதனையை, படைப்பை (master piece)முதுமையில்தான் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# வரலாற்றை ஆராய்வதற்கு தாய்மொழியே வழிகாட்டி

### பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**மனித ஆற்றலை வளமாக்கவும், ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும் தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும். இது அறிவியல் பூர்வமாக நிரூபணமான உண்மை. பல முன்னேறிய நாடுகள் இதற்குச் சான்றுகளாக இருக்கின்றன.**

வடமராட்சி,ஏப்.11

மொழி என்பது கருத்து பரிவர்த்தனைக்கான ஒரு சாதனம். எனினும் கால வளர்ச்சியில் தவிர்க்க முடியாத தேவையாகி விட்டதுடன் ஓர் இனத்தின் அடையாளமாகியும்விட்டது. மனித வரலாற்றை ஆராய்வதற்கும் அவர்களது தாய்மொழியே வழிகாட்டியாக அமைகின்றது என பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.


மருதங்கேணி கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டிகள் தாளையடி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா தலைமையில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஸ்ரீரங்கேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

ஒரு வளமான நாட்டுக்கு அடிப்படை வளமான கல்வி முறையே ஆகும். அதுவும் தாய் மொழிக் கல்வி முறையே ஆகும். உலகம் முழுவதிலும் அனைத்து நாடுகளிலும் இலங்கை உட்பட ஒரு சில ஆசிய, ஆபிரிக்க நாடுகளைத் தவிர தாய்மொழி மூலமாகவே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. மனித ஆற்றலை வளமாக்கவும், ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும், தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும். இது அறிவியல் பூர்வமாக நிரூபணமான உண்மை. பல முன்னேறிய நாடுகள் இதற்குச் சான்றுகளாக இருக்கின்றன.

மனிதனது சிந்தனைத் திறனுக்கும் தாய்மொழிக்கும் தொடர்பு இருக்கின்றது. தாய் மொழியிலேயே ஒருவர் அதிகம் சிந்திக்க முடியும். ஒருவரது சிந்தனை ஆற்றல் முழுவதும் தாய் மொழியில் ஊடாடி மூளையில் பதிந்து போகிறது.

வெளி உலகத்தைப் பார்க்கத் தொடங்கும் குழந்தையின் மூளையில், வெளி உலகமே தாய் மொழியில்தான் பதிந்து போகின்றது. காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு என்பது போல், அவரவர் தாய் மொழி அவரவருக்கு உயர்ந்தது என்பதில் ஐயமில்லை.- என்றார். (எ-8)



யாழ்.திவ்விய ஜீவன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கைத் திருமுறை மன்ற பண்ணிசை வகுப்பு மாணவர்களின் தேவாரப் பண்ணிசை நிகழ்வு.

## மணிவிழா நிகழ்வு

செட்டிகுளம் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற நா.ஜெகநாதனின் மணிவிழா நிகழ்வு கோவில்குளம் தாஜ் ஹோட்டலில் இடம்பெற்றது.

வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

வவுனியா கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சொலமன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை வலய நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி மு.அன்னமலர், கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி க.கந்தையா, கல்வி அபிவிருத்தி கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மாணிக்கவாசகம், வவுனியா நகரக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா, பொறியியலாளர் சிவகுமார், சிங்களப் பிரிவுக்கான கோட்டக் கல்விப் பணிப்பாளர் பெனடிக்ற், விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் மாதவன் ஆகியோர் நிகழ்த்தினர். வாழ்த்துக் கவியினைத் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.உதயகுமார் நிகழ்த்தினார்.

மணிவிழா நாயகனுக்குத் தெற்கு வலயக் கணக்காளர் பரஞ்சோதி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (க-400)

## நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

கைதடி,ஏப்.11

கைதடியிலுள்ள சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் கடந்த வாரம் இடம்பெற்றது.

கைதடிப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீஸ்வரன் கலந்து கொண்டார்.

தலைவராக இ.கந்தசாமியும், செயலாளராக தி.சத்தியதீபனும், பொருளாளராக கு.சுரேஸ்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 13 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (எ-288)

# அபிவிருத்தியை இலக்குவைத்து மக்கள் வங்கி செயற்படுகிறது

### பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

போரின் பின்னரான காலத்தில் மக்கள் வங்கி பிரதேச அபிவிருத்திகளை இலக்குவைத்து புதிய கடன் திட்டங்களையும், ஓய்வூதியக் கடன் திட்டங்களையும் பொது மக்களுக்கு வழங்கி வருகின்றது என மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் என்.பத்மநாதன் தெரிவித்தார்.

மூத்த பிரஜைகளுக்கான நிலையான வைப்புக் கணக்கில் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட சேமிப்பை உடைய வாடிக்கையாளர் ஒருவருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

மக்கள் வங்கியின் ஊடாக புதிய புதிய கணக்குகள் சிறுவர் முதல் முதியோர் வரை பயன்பெறக் கூடிய வகையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் வங்கிச் சேவையை ஊக்குவிக்கும் முகமாக பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மக்கள் வங்கி ஓர் அரச வங்கி என்பதால் கூடுதலான வாடிக்கையாளர்கள் நம்பிக்கையுடன் தமது கணக்குகளை ஆரம்பித்து வங்கி மூலம் பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

வங்கிச் சேவையானது பிரதேச அபிவிருத்தியில் மட்டுமல்லாது, குடும்பத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கும் கைகொடுக்கிறது. கடந்த காலங்களைவிட, போரின் பின்னரான காலத்தில் மக்கள் வங்கி புதிய புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை உரிய முறையில் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் பயன்பெற வேண்டும்- என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நம்பிக்கை ஒளிக்கீற்றை சிதைத்து விடாதீர்கள்

குற்றங்களுக்காக அதிலும் குறிப்பாகப் பாலியல் குற்றங்களுக்காக அடுத்தவர்களை நோக்கி விரல்களை நீட்டிய காலங்கள் மலையேறிவிட்டன. இப்போது மற்றைய எல்லோரையும்விட அத்தகைய குற்றங்களை எங்கள் மண்ணிலேயே புரிபவர்களாக தமிழர்களாகிய நாங்கள் மட்டுமே இருக்கிறோம்.

சிறுமிகளை வன்புணர்வு செய்து கொல்லும் கொடூரமும், இளம் பெண்களை மூவர் சேர்ந்து கண்முன்னே துடிக்கத் துடிக்கக் கொல்லும் கல்மனமும் எங்களுக்கு வாய்க்கப் பெற்றிருக்கிறது. எதிரிகூடச் செய்யத் துணியாதவைகளை எமக்கு நாமே செய்து சீரழிந்து கொண்டிருக்கிறோம்.

சிங்களப் படையினரால் வன்னியில் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காக எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று உலகம் முழுவதும் சென்று குரல் கொடுக்கும் இதே தமிழர்களுக்கு மத்தியிலிருந்தே, மோசமான கொலைகளும் குற்றங்களும் மேற்கிளம்புகின்றன என்பதை கேட்பதற்கும் உணர்வதற்கும் சகிக்க முடியவில்லை.

குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வந்த நடைமுறை இந்த நாட்டில் நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தமையும், குற்றங்களுக்கு அதிகபட்சத் தண்டனை வழங்கப்படும் என்ற பயம் நீங்கப்பட்டமையும் எமது இத்தகைய நிலைமைகளுக்குக் காரணங்கள். படையினர் செய்தவைகள் உட்பட கடந்த சில தசாப்தங்களாக நடைபெற்ற பல கொலைகள் மற்றும் கொள்ளைகளில் குற்றவாளிகள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதில்லை.

அந்த நிலையில் இருந்து மீள்வது தொடர்பான ஒரு சிறு நம்பிக்கை ஒளி இப்போது தென்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் சிவில் குற்றங்கள் தொடர்பான குற்றவாளிகளாவது நீதியினால் தண்டிக்கப்படுவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும் என்று தோன்றுகின்றது.

தனங்களப்பில் இளம் பெண் ஒருவரின் கொலை தொடர்பான விசாரணைகளில் கிடைத்திருக்கும் பெறுபேறுகள் இந்த நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றன.

24 வயதான சுப்பிரமணியம் அற்புதமலரைக் கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட மூன்று மாத கால தீவிர விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபர்கள் பிடிபட்டுள்ளனர். இதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சாவகச்சேரி நீதிவான் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரி ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

இந்த வழக்கில் அந்த இளம் பெண்ணைத் தாமே கொலை செய்தார்கள் என்பதைச் சந்தேகநபர்கள் ஏற்றுக்கொண்டு வாக்குமூலங்களை வழங்கியுள்ளார்கள் என்று தெரிகின்றது. எனினும் வழக்கு விசாரணையின்போது இவர்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடப் போகும் சட்டத்தரணிகள் தமது திறமையால் இந்தக் கொலைகளை அவர்கள் செய்யவில்லை என்று நிரூபித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி இங்கு பல நடக்கின்றன.

சமூக நன்மை கருதி சட்டத்தரணிகளும் இந்த விடயத்தில் சிந்தித்து நடக்க வேண்டும். குற்றம் செய்தவர்கள் என்று உறுதியாகத் தெரியும் நிலையில் தங்கள் வாதத் திறமையால் குற்றவாளிகளை விடுவிக்க அவர்கள் முயற்சிக்கக்கூடாது. அவை குற்றங்களைக் குறைப்பதற்குப் பதில் அதிகரிக்கவே வழிவகுக்கும். நீதி குறித்து இப்போது தோன்றியிருக்கும் நம்பிக்கை ஒளிக்கீற்றை சிதைத்து விடாதீர்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்பட அமைகியுங்கள்.

# ஈழவர்களின் இரண்டாம் இன்னிங்ஸ்

■ செந்தூரி

பாடசாலைகள் தவணையிடை விடுமுறையினை, கொண்டாடிக் கொண்டிருப்பதால் அடுத்தடுத்து வரும் இந்த இரண்டு விடுமுறை தினங்களையும் பள்ளிப் பிள்ளைகள் பெரிதாகக் கணக்கில் எடுத்துச் கொள்வதில்லை. எமது நாள்காட்டிகளின் வாக்கின்படி தமிழ்-சிங்கள இணைப்பினை எழுத்தளவிலாவது பேணுகின்ற வருட ஆரம்ப தினக் கொண்டாட்டங்களுக்குரிய நாள்கள் இவை. ''வடமாகாண சபை தனது நாள்காட்டிப் பதிப்பில் ''சிங்கள-தமிழ்'' புதுவருடம் என அச்சேற்றி விசுவாச முதன்மையை வெளிக்காட்டியதை தற்செயலாக இந்த வாக்கியத்தை எழுதி முடிக்கு முன்னர் பார்க்க நேர்ந்தது. நான்காம் வகுப்பு தமிழ்ப் பாடப்புத்தகத்தின் (1990 தொடக்கம் 1995 காலப் பகுதிக்கான) அடுத்தடுத்த இரண்டு அருகருகே வசிக்கும் பெரும்பான்மை- சிறுபான்மை இனக் குடும்பங்கள் புதுவருட ஆரம்பத் தினத்தை தத்தமக்குரிய பாரம்பரிய நெறிகளுடன், மத ஆசாரங்களுக்குட்பட்டு கொண்டாடும் விதத்தினை விவரித்து உள்ளடக்கியிருந்தன. அரச பாடப்புத்தகங்களில் பெரும்பான்மையினத்தின் பெயர் தாங்கி வரும் கதாபாத்திர சிறுவர்களை, வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாட்டில் ''பாவற்காய்'' கறியை பார்க்கும் பாவனையில் வெறுத்தொதுக்கும் அளவுக்குப் பிஞ்சிலேயே ''பழுத்திருந்தது''அப்போதே தனித் தேசியம்! ஆங்கிலப் புத்தகத்தில் ''I am From Sri lanka''என்று வேற்று நாட்டுச் சிறுவர்களுடன் கைகோர்த்தபடி சொல்லும் குட்டிப் பையனின் பெயர் ''Suman'' என்பதும், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் ''I am From India'' வைச் சொல்லும் சிறுமிக்குத்தான் Geetha எனவும் பெயர் வழங்கப்பட்டிருந்ததையும் பிஞ்சிலேயே "பழுக்க" வேண்டியிருந்ததற்கான முதற் புள்ளியாக ஏற்றுக் கொள்வீர்கள் எனவும் நம்புகின்றேன். நைஜீரியாவின் Muru வையும் இன்னமும் மறக்க முடியவில்லை.

"சே குவேரா"வுக்கு முன்னரும், ''பிரபாகரனுக்கு'' பின்னரும் கூட வலுவிழந்து போய்விடாத ''புரட்சியாளர்கள் பிறப்பதில்லை, உருவாக்கப் படுகின்றார்கள்'' என்கின்ற அகிலத் தோற்றத்துக்கான நிறுவல் மெய்ப்பாட்டுக்கு ஒற்றைச் சதவீத பங்களிப்பாவது, மேற்கூறிய குழந்தைப் பருவ புத்தக அத்தியாயங்களிலிருந்து நிச்சயம் கிடைக்கும். இலங்கையனாக பிறந்த ஒவ்வொரு குழந்தையையும், ''தமிழனாக'' -''முஸ்லிமாக'' -''சிங்களவனாக'' மாற்றி வெறி கொண்டு மோத விட்டதற்காய் ஆளுமினமும், அவர்தம் கல்விக் கொள்கை ஆக்குநர்களும், ஏன், தமிழர்களான பாடநூல் பதிப்பாசிரியர்களும் கூட பெருமைப்பட்டேயாக வேண்டும்.

நிற்க, சித்திரை மாதத்து தொடக்கத்தை ஆரியப்புத்தாண்டு என்ற வகைக்குள் அடக்கி பகிஷ்கரிக்கும் வழக்கமும் இருக்கின்றது. சைவமும், தமிழும் என்கின்ற இரு கண்களையுடைய திராவிடக் குடும்பத்துக்குரிய தமிழினம் சைவத்தை "இந்துத்வா" வாக தவறுதலான புரிதல் கொண்டதன் விளைவே இந்த முரண்பாட்டு மூடைகளுக்கு அடிகோலியதாக "பகுத்தறிவுத் தமிழகம்" சாடுவதுண்டு. பன்னிரண்டு மாதங்களுக்குரிய பன்னிரண்டு ராசிகளும் உலக மதங்கள் பலவற்றுக்கும் பொதுவானவையாக, வெவ்வேறு பெயர்களுடன் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் குறித்தவொரு ராசியிலிருந்து சூரியன் இன்னொரு ராசிக்கு இடம்பெயரும் பொதுப்பண்பு நகர்வினை பல்வேறு மதத்தவரும், இனத்தவரும் தத்தமது புத்தாண்டு எனக் கொண்டாடி வருவதுண்டு. இலங்கையில் சிங்கள- தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடப்படும் அதே தினம் கேரளத்தினரான மலையாளிகளால் ''விஷுகளி'' எனும் பெயரில் "களி கண்டு விழிக்கும்" புது வருடமாக கொண்டாடப்படுவது ஆரியக் கலப்பின், உறைப்பை ஆழமாக உணர்த்தும் சாட்சி. பஞ்சாங்கங்களுக்கு உட்பட்ட இந்த சர்ச்சையை, ''ஆரிய ஊடுருவல்'' எனும் குற்றச் சாட்டை, ''தமிழ்ப்புத்தாண்டு'' எனும் தனிப்பெயரில் முறியடித்து தை முதல் நாள்தான் தமிழாண்டின் முதல் நாள் என ''கடிதவாரிதி'' கருணாநிதி, மாற்றியதும், திராவிடத்தாய் ஜெயலலிதா, ஏட்டிக்குப் போட்டியாக ஆட்சியிலமர்ந்த அடுத்த சில மாதங்களிலேயே மீண்டும் சித்திரை முதல்நாளை புத்தாண்டாக பிரகடனப்படுத்தியதும் அரசியல் அசிங்கம் சிந்திய ஆன்மிகச் சிலம்பமாகிப் போனது கவனிக்கத்தக்கது. எடுத்து "வெளியே விட்டால்'', எம்மவர்களுக்குள்ளும் எண்ணற்ற வாதப் பிரதிவாதங்களை தோற்றுவிக்கும் இந்த ''மனுஸ்ய சக்தி'' க்கு மேற்பட்ட விடயத்தை இத்தோடு நிறுத்துவதே ''பிரசுரிப்பவர்களுக்கும்'' ஏற்றது. திராவிட- ஆரியக் குழப்பத்தை தமிழ்த் தெய்வமான நல்லைக் கந்தனும், ''பார்த்திருப்பதால் தான் இத்துணை பாடும்'' என்கின்ற நாமத்துக்குரிய ஸ்ரீரங்கத்து அரங்கநாதப் பெருமாளும் ''மருமகன்-மாமன்'' சண்டையின் பின் தீர்வு கண்டு கொள்ளட்டுமே! சொல்லட்டுமே!!

ஏற்கனவே கடந்து போன புது வருடங்களைப் போல ''பிறக்கின்ற இந்தப் புதுவருடத்திலாவது'' என்கின்றதில் தொடங்கி மீதிவார்த்தைக் கோரிக்கைகளை நிரப்பிக்கொள்கின்ற எமக்கு நாமே சொல்லிக் கொள்கின்ற "சமாதான வாழ்த்துக்கள்" இந்த முறையும் மாறிவிடப் போவதில்லை. ஆனால்2008-2009 பருவகாலத்துக்குப் பின்னான, முதல்வெற்றியைப் பெறுவதற்காக உலகத் தமிழினம் சுமார் மூன்றுக்கு மேலான வருடங்களை உழைத்துக் கழித்ததென்பதும், கடல் கடந்து தீவிர ''ஜெனிவா''க் களத்தைத் தனக்குச் சாதகமான பீடமாக மாற்றியதென்பதும் குறைத்து மதிப்பிடும் விடயங்களல்லவே? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தன்னால் பதவிகளால் திருப்திப்படுத்தக் கூடிய ''கொள்ளளவு'' கொண்ட இன்னொரு தமிழ்(?)அமைப்பு ஒன்றினையும் மேவியதான, ''உலகத் தமிழனின் உறுதி'', ஆள்வோனின் தூக்கத்தில் அடிக்கடி எழுப்பி ''ஜூஸ்'' குடிக்க வைக்கும் கெட்ட கனவாக வாடிக்கையாக வந்து போகும் செய்தியை உலகமே அறியும். ''இல்லாதொழிக்கும் இடர்'' நோக்கத்தோடு பழிவாங்கப்பட்ட இனமொன்றின் உறுதியான மறுதாக்குதலின் வலிமையாக புலம் பெயர் தமிழர்கள் மையங்கொண்டிருப்பது பற்றி எம்மிலும் அதீத சிரத்தையோடு தரவு சேகரிக்கும் பணியில் ''அவர்கள்'' ஆர்வங்கொண்டிருப்பதையிட்டு, நிச்சயமாக தமிழினம் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ''பாதையில் தடையா! பதறாதே, ''போகும் வழி சரியானதே'' என்ற எதிரியின் செய்தி அது'' என்று நற்சகுனமாகக் கருதி இன்னுமின்னும் தளராத ஊக்கத்துடன் வீரியங் கொள்ளும் வேண்டுகைக்குரிய நேரம் இது!

''கோதுமையையும், கொக்கோ கோலாவையும் புறக்கணிப்போம்'' என்று ஸீன் போடுவது, "எண்ணெய் வர்த்தகம் உட்பட்ட பன்னாட்டு வியாபாரங்களுக்கு அமெரிக்க டொலரிலிருந்து இன்னொன்றுக்கு மாறுவோம்'' என்று பூச்சாண்டி காட்டுவது, "பெரும்பான்மையான இந்திய வாகனத் தயாரிப்புக்களுக்கான இறக்குமதித் தீர்வை''யை அதிகரித்து, தன்நெஞ்சில் தானே தட்டிப் பெருமிதமடைவது போன்ற ''கோபம் போட்டு விளையாடும் குழந்தைத் தனத்தின் '' பின்னான காயப்படுத்தும் ஆவேசம், ஈழத்தமிழினத்தின் மீது ''மட்டுமே'' திரும்பும் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றே! ''என்ன செய்தாலும் எம் நாட்டுக்குள்ளே தானே'' எனும் வகைக்குரிய இறுமாப்புகளும், ''நியூயோர்க்குகளும், ஜெனிவாக்களும் என்னை ஒன்றும் செய்து விட முடியாது'' என்கின்ற வீராப்புகளும், ''இந்தியாவுடனான வெளியுறவுக் கவசத்தில் விழுந்த ஓட்டைகளை அடைக்க முடியும்'' என்கின்ற மீசை மண்துகள்களும், தமிழினத்தினால் இப்போதைக்கு கடைக்கண் இரசனைக்கு விருந்தாக்கிக் கொள்ளக் கூடிய வினோத நாடகங்கள்!

"இத்தோடு முடிந்து விடவில்லை இந்த ஆட்டம்'' என்கின்ற நம்பிக்கையை ''கடும்பனி காலத்துச் சளிக்கு கற்பூரவள்ளிச் சாறாய்'' அள்ளிக் கொடுத்த சனல்-4 இனை சுலபத்தில் மறப்பதற்கில்லை. எளிமையான இலக்கண ஆங்கிலத்தில், நின்று நிதானித்த எமது நடையில் அழுத்தம் திருத்தமாய் சர்வதேசத்தின் அடைத்த செவிச்சவ்வுகளில், "முள்ளிவாய்க்கால்'' வரையான வலி கொடுத்த மரணங்களின் நீதிக்குரல்களால் ஓதித் திறந்த பெருமை ''ஜோன் ஸ்னோ'' (John Snow) உள்ளிட்ட குழுவினரைச் சேர்ந்தது. சிறு சிறு காணொலிகளை சேகரித்தவர் முதற் கொண்டு, சனல் 4 இன் நிர்வாகஇயக்குநர் குழுவினர் மீது உலகத் தமிழர்கள் கொண்ட நன்றியறிதல்களுக்கு, இன்றுவரை சென்று குவித்த மின்னஞ்சல்களும், ''ஜோன் ஸ்னோ''வினது மின்னஞ்சல் வருகைப் பெட்டியுமே மௌனச் சாட்சிகள்!

'ரைம்ஸ்' சஞ்சிகையின் பிரசித்தமான சதவர்களுள்(நூறுபேர்), இந்தவருடத்துக்கான இடத்தை உறுதி செய்யும் பட்டியல் வாக்கெடுப்பில், தென்னாபிரிக்க தமிழ் வம்சாவளிக்குரிய ''நவநீதம் பிள்ளை''யின் உறுதியான இடமும் இன்னொரு வகைக்குரிய நன்றியறிதலினால் சாத்தியமானது. (கடந்த வருடம், இதே வாக்கெடுப்பில் கள்ள ஒட்டுப்போட்டு, ''ரெட்காட்'' வாங்கி வெளியேறிய பெருமகனை இந்த இடத்தில் நினைவு கூருவோமாக) இந்திய நடிகை ''வித்யா பாலன்'', கிரிக்கெட் வீரர் ''சச்சின் டெண்டுல்கர்'' குஜராத்திய முதல்வர் ''நரேந்திரமோடி'' போன்ற அயலவர்களுக்கு நிகராக ஐ.நாவின் மனித உரிமைப் பணியாளராக ''குறையாத மிடுக்கோடு சொல்லாடிய'' பெண்மணி நவிப்பிள்ளையை, முன்னணி பெறச் செய்தான் உலகத் தமிழன். சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு வாக்கெடுப்பில் பங்களிக்கச் சொல்லி வற்புறுத்திக் குவித்த செய்திச் சொட்டுக்கள் ஒவ்வொன்றினுள்ளும், எதையோ சாதித்த திருப்தியும், இலகுவில் இறங்கி விடாத நம்பிக்கையும் சுடர் கொண்டு மின்னியதையே தரிசிக்க முடிந்தது.

வழக்கமான "தன்னைத் தாழ்த்தி குறையிரக்கும் பொழுதுகளோடு விடியாத, மின்னிடும் சுயநம்பிக்கைகளோடு, 'கடக்கும் தேவையுடைய கடும்பாதைகளை" கச்சிதமாக திட்டமிடும் வருடமாக விடியட்டுமே இந்த ஆண்டு!'' ''மாற்றமொன்று தானே, இந்த உலகில் மாறுவதேயில்லை!'' ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழாய் நீர் அரசியல்

வேழன்

பிரித்தானிய வரவின் பலனாக பரந்து விரிந்திருப்பது இரணைமடுக்குளம். 36 உச்ச கனவடி நீரை தன்னகத்தே கொண்டு கிளிநொச்சி மண்ணை பசுமையால் ஆட்சி புரிகிறது. இந்தக் குளத்தோடு இணைந்த வாழ்க்கைமுறை வன்னி மக்களுக்கு பெருமை தந்தது.

இத்தகைய இரணைமடுக்குளம் இன்று யாழ்ப்பாண மக்களின் குடிதண்ணீர் தேவை கருதி வடக்கு நோக்கி செல்கின்றது. இதன் பின்னால் இளையோடி வருகின்ற அரசியல் ரீதியான தீய நோக்கு எதிர்காலத்தில் தமிழ் மக் களுக்குக் கிடைக்க இருக்கின்ற அரசியல் அதி காரப்பகிர்வில் எதிர் மறைத்தாக்கத்தை ஏற் படுத்தி விடுமா? என்ற சந்தேகங்களும் இல்லாம லில்லை.

போர் நிறைவின் பின் உடனடித் தேவை கள் ஏராளம் இருக்க அரசியல் விளம்பரங்க ளோடும், நெறிப்படுத்தல்களோடும் யாழ்ப்பாணத் துக்கான குடிதண்ணீர் விநியோகத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது என்றால், அரசின் இந்தக் கரிசனை குறித்து தமிழ்ச்சமூகம் அக் கறை கொள்வது அவசியமானது.

யாழ்ப்பாணத்தின் நிலக்கீழ், தரைமேல் நீர்வள மாசடைவு, அதிகரிக்கின்ற வெப்பமாதல் குடிப்பெருக்கம் என்பன குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை நியாயப்படுத்துகின்றன. இது தொடர்பி லான மனிதாபிமான புரிதல், அப்பாவி விவ சாயிகள் தொடக்கம் அறிவுஜீவிகள் வரை வியாபித்திருக்கிறது. இந்தத் திட்டம் நடை முறைக்கிடைப்பட்ட போதும் மூடப்பட்ட கருத்திட்டமாகவே இருந்து வருகிறது.

இந்தத் திட்டம் குறித்து மாவட்ட அளவில் கூட கருத்தெடுப்புக்கள் நிகழ்த்தப்படவில்லை. இதனால் திட்டம்குறித்த பலத்த சந்தேகங்கள் வெளிக்கிளம்பத் தொடங்கியிருக்கிறது.

வெளிப்படையாக பார்க்கின்ற போது மனி தாபிமானத் திட்டமாக இது தெரிகின்ற போதும், உட்கிடையாக எதிர்காலம் குறித்த பலத்த சவால்களை இது உள்ளடக்கியிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. நிலாவரை, சாட்டி போன்ற ஆழ்கிணற்று நீர் நிலைகளை இந்தக் குடிதண்ணீத்திட்டத்துக்கு தயார்ப்படுத்துவதைத் தவிர்த்து மிகப் பெரும் விவசாய மாவட்டம் ஒன்றிலிருந்து நீரைக் கொண்டு செல்லுதலா னது இன்னும் 50 வருடங்களில் வன்னியை வரட்சி அடையச் செய்துவிடும் என்று கூறப் படுகிறது. அவ்வாறு வரட்சி நிலை ஒன்று தோன்று மானால் வன்னி மக்களின் சுயநிலைப் பொருளாதாரம் மாற்றம் காணக்கூடிய ஆபத்தை இந்தத் திட்டம் கொண்டிருக்கவும் கூடும். 36' கனவடி உச்சகொள்ளளவை இர ணைமடுக்குளம் கொண்டிருந்த போதும், நீண்ட காலப்புனரமைப்பின்மை அதனை 30' வரையான கொள்ளளவாகக் குறைத்திருக்கி றது. மேலும் புனரமைப்புப் பணிகள் நடை



பெற்றாலும் கூட, குளத்தின் கொள்ளளவு ஆற்றலை 2' உயர்த்துவதே காரியச்சாத்திய மானது என ஆய்வு நிறுவனம் ஒன்று யுத்த காலத்தில் ஆய்வு செய்து தெரிவித்தது. அவ்வாறு 2'கனவடி கொள்ளளவு ஆற்றலை அதிகரிக்கின்ற போது குளத்தின் தென்கிழக்கு திசையிலுள்ள குடிசார் பகுதிகள் பாதிப்படையக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது. இருப் பினும் இந்த நோக்கத்தை அடைவதற்கு 4 பில்லியன் தேவை என மதிப்பிடப்பட்டிருந் தது. குளத்தை மேலும் ஆழப்படுத்துவதைப் பொறுத்தவரை அதன் அடித்தளப்படைகளி டையே காணப்படுகின்ற பசை கலந்த மண் (க்கிளே) ஆழமாக்கலை அனுமதிக்கப்போவ தில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே புனரமைப்பு வேலைகள் நடைபெற்றா லும் கூட குறித்த 36' நீரையே தேறிய கொள் ளளவாக இந்தக் குளம் கொண்டிருக்கும்.

இந்தக் குளத்து நீரை நம்பியே கிளிநொச்சி மாவட்டத்தை அண்டிய பெரும்பாலான குடும் பங்களின் வயிற்றுப் பிழைப்பு நடக்கின்து.

யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஏற்கனவே ஒரு தடவை திட்டமிடப் பட்ட போது பரந்தன் பூநகரி வழியூடாகச் சாவகச்சேரியைச் சென்றடைந்து அங்கிருந்து வடமராட்சிப்பகுதிகளுக்கு நீர்விநியோகம் செய்வது பற்றி ஆராய்வு செய்யப் பட்டிருந் தது. அந்தத் திட்டம் நடைமுறைக்கிடப்பட்டி ருந்தால் ஆனையிறவு, பரந்தன், என்பவற் றோடு பூநகரி, பூரணமான நீர்விநியோகம் பெற்ற பகுதியாக மாற்றப்பட்டிருக்கும். ஆனால் இன்று நடைமுறைப் படுத்தப்பட்டிருக் கின்ற திட்டம், பூநகரி மக்களின் நீர்த் தேவையை நிறைவு செய்யக் கூடிய உத்தரவாதத்தைக் கொண்டுள் ளதா என்பது வெளிப்படையற்றது. அத்துடன் சிறுபோகத்தில் 12,800 ஏக்கர் நிலம் செய்கை பண்ணப்படுகிறது. மாரிமழை பெய்கின்ற பருவம் ஒன்றில் இந்த நிலங்களுக்கு இரணைமடுக்குளத்திலிருந்தே நீர்ப்பாசனம் செய்ய வேண்டி இருக்கிறது. அப்போது குடிதண்ணீருக்கு நீரை வழங்குவதா? வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதா? என்கின்ற தேவை முன் னெழுகின்றபோது குடிதண்ணீர்த் தேவையே முதன்மைப்படுத் தப்பட வேண்டும். அப்பொழுது பாதிப்புறு கின்ற விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற் குரிய உத்தரவாதத்தை இந்தத் திட்டம் கொண்டிருக்கிறதா? என்பதை சம்பந்தப்பட்டோர் உறுதிப்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், விவ சாய அமைப்புகள் இந்தத் திட்டத்தின் பகிரங்க மற்ற தன்மைகுறித்து கோபத்தையும், கொதிப் பையும் கொண்டிருக்கின்றபோதும் பேசமுடியாத அதிகார அரசியல் சூழலால் அடங்கிப்போய் உள்ளனர். என்பதே உண்மை. கோரக்கன் கட்டு விவசாய அமைப்பு இந்தத் திட்டம் தொடர்பில் தனது கண்டனத்தைத் தெரிவித்தி ருந்தது. ஒரு தடவை இந்தத் திட்டத்துக்கு விவசாய அமைப்புக ளின் ஒப்புதல் பெறப்பட்ட தாக அரச அதிபர் தெரி வித்திருந்தார். இது பற்றி விவசாய அமைப் புக்களிடம் வினவிய போது கமக்கார அமைப்புக் களின் சம்மேளனத்தலைவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களின் விசுவாசியாக இருப்பதனால் விவசாயிகளின் உணர்வுகளுக்கு எதிராக அவர் கையெழுத்திட்டிருப்பார் எனத் தெரிவிக் கின்றனர். மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக் காத, அவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்காத, எந்த அபிவிருத்தித் திட்டங்களும் அரசியல் விளம்பரத்துக்கானவையே தவிர மக்களுக் கானவை அல்ல என்பது வெளிப்படை இங்கு இந்தத் திட்டத்தின் பின்னால் இருக்கின்ற நீண்ட கால அபாயம் குறித்தும் சங்கு ஊதப்படுகி றது.

இரணைமடு நீரினது கொள்ளளவு கிளி நொச்சி மாவட்ட மக்களின் தேவைகளையும் நிறைவு செய்து, யாழ்ப்பாண மக்களுக்கம் குடி தண்ணீத்தேவையை நிறைவு செய்வதற்குப் போதுமானதாக எதிர்காலத்தில் அமையாது என்பதை ஆட்சியாளர்கள் அறிந்து வைத்திருக்கி றார்கள். அத்தகைய ஒரு நிலை ஏற்படுகின்ற போது, இயல்பாகவே யாழ்.வன்னி மக்களிடம் இருந்து மகாவலி கங்கையினுடைய நீரை இரணைமடுக்குளம் நோக்கி கனகராயன் ஆறு வழியாக இணைக்குமாறு கோரிக்கைகள் எழும். அவ்வாறு எழுந்தால் அந்த மக்களின் சம்மதத் தோடு மகாவலி நீரை இரணைமடு வோடு இணைப்ப தென்றும், மகாவலியின் DELTA-H வலயக் குடியேற்றத்தின் 6 ஆம் தலைமுறைச் சிங்கள மக்களை நெடுங்கேணி கனகராயன் ஆற்றின் நீள் சதுரப்பிரதேசத்தில் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. (அதற்கான முன்னோடியாக ஏ9 வீதியின் கிழக்குப் புறத்தின் காட்டுப்பகுதியில் தற்போது அமைக்கப்படுகின்ற வீடுகளை அந்தத்திட்டத்துக்கான தயார்படுத்தல் எனக் கொள்ளலாம்). அவ்வாறான நிலை ஏற்படுகின்ற போது இரண்டு மாகாணங்களுக்கிடையிலான நீர்ப் பங்கீட்டு விவகாரம் வடகிழக்கு மாநிலத்துக்கான அதிகாரப் பகிர்வுக்கு அப்பால் மத்திய அரசின் அதிகாரப்பட்டியலில் உள்வாங்கப்படும்.

அந்த நிலையில் தெற்கு தொடக்கம் வடக்கு வரையாக இலங்கையின் சிங்கள பௌத்த மத்திய அரசின் ஆட்சி மாநிலங்களுக்குள்ளும் வியா பித்திருக்கும் என்றால் அதிகாரப் பகிர்வு அர்த்தம் உள்ள தாகுமா? அதற்கான முன்னோடித் திட்டமாக இரணை மடுவின் மனிதாபிமானத் திட்டம் அமைந்து விடுமா? என்கின்ற சந்தேக வினாக்கள் எம் சமூகத்தில் எழுகின்ற வேளை அரசியல்வாதிகளும் அறிவுஜீவிகளும் இந்தத் திட்டம் குறித்துப் பேசுவார்களா?

★

# இந்து மதமும் கலைகளும்

க.ரபிதா

இந்து மத வரலாற்றில், பண்பாட்டின் நிலைக்களங்களாக விளங்குபவை திருக்கோயில்கள். அத்தகைய திருக்கோயில்கள் தோற்றம் பெற்ற காலம் முதலே கலைகளும் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற கலைகள் இந்து மதத்தோடு இரண்டறக் கலந்து இந்து நாகரிக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு மனிதனுக்கு இரண்டு கண்களும் எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ அதுபோல இந்து நாகரிக வரலாற்றிலே " இந்துமதமும் கலைகளும் சிறப்புப் பெற்று விளங்குபவையாக மூதாதையர்களால் சொல்லப்பட்டன.

கலை என்பது சதா வளர்ந்து கொண்டு இருப்பது என்பது பொருள். பிறையானது நாள்தோறும் வளர்ந்து கொண்டிருப்பது போல், கலைகளும் மாந்தர்க்கு மன வளர்ச்சியைத் தந்து முடிவேயில்லாமல் என்றென்றும் வளர்ந்து வருவதாகும். கலைகள் இறைவனிடம் இருந்தே பிறந்தன. சான்றாக கூத்துக்கலை சிவபிரானால் உலகுக்கு வழங்கப்பட்டது என நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது. சிவன், தாண்டவ மூர்த்தி, நடராஜன், கூத்தன் என அழைக்கப்படுவது இதற்குச் சான்றாகும். ஏனெனில் இந்துமத தெய்வங்களினூடாகவே உலகுக்கு வழங்கப்பட்டது. கலைகள் எல்லாம் இறைவன் பிரசாதமெனக் கொள்ளப்படுவது உலகத்து அனு பூதிமான்களின் கருத்தாகும். சிவானுபவம் எங்கே பிறக்கிறதோ அங்கே தான் கலைகளும் பிறக்கின்றன.

கல்லைக் கருவியாகக் கொண்டு சிற்பத்தையும், வர்ணத்தைக் கருவியாகக் கொண்டு ஓவியத்தையும், ஓசையைக் கருவியாகக் கொண்டு இசையையும் உருவாக்கினர். இவ்வாறு ஒவ்வொரு கலையையும் வினைப்பாங்குடன் உருவாக்கினர். கலைகள் யாவும் தெய்வீகமானவை. அம்பிகைக்குரிய ஆயிரம் நாமங்களில் ஒன்று ''கலாவதி'' என்பதும் இன்னொன்றான ''சதுஸ்சஸ்டி கலாமயீ'' என்பதும் கலையையே குறித்து நிற்கின்றன.



கலைகள் 64 என்பதை 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் எண்ணம்மை' என்ற குமரகுருபரரின் பாடல் அடிகளும் 'எண் ணெண் கலையும் இசைந்து போக ' என்ற சிலப்பதிகார அடிகளும் ''எட்டெட்டருங் கலையும் ஆனாய் கண்டாய்'' என்ற அப்பரின் பாடலடிகளும் எடுத்தியம்புகின்றன. இத்தகைய கலைகளினூடாக வழி பாட்டுக்குரிய இறை வன் தலையாய கலை வடிவமாகவும், கலைப் பொருளாகவும், கலையின் தலை சிறந்த ஆசானாகவும் விளங்குகின்றான்.

மனித வாழ்விலே தெய்வம் என்பதோர் சித்தமுண்டாக கலைகள் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டன. இறைவனே வெவ்வேறு வடிவங்களிலே கலைகளின் வடிவாகவும் முடிவாகவும் கருதப்பட்டான். இறைவனை அடைவதற்கான சிறந்த வழிகளாக இசையும் நடனமும் கருதப் பட்டன. இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை விளக்குவதாக அமையும் நடராஜ வடிவம் கலைத் தத்துவத்தின் மகோன்னத நிலையை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு விக்கிரகங்கள் ஒவ்வொன்றும் தத்தமது கலைத்திறனை விளக்கி நிற்பதைக் காணலாம்.

கலையானது இந்து மதவரலாற்றில்எளிமை, தூய்மை, சமயப் பற்று, பண்பாடு என்பவற்றை விளக்கும் வகையில் ஆத்மிகக் கருத்தை உள்ளடக்கியதாக சிறப்புற்று விளங்குகின்றது. உலகம் போற்றும் உன்னத பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு இந்துமதமும் கலைகளும் தொன்று தொட்டே வளர்ந்து வந்துள்ளன. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஆன்றோர் வாக்கு. கோயில்களிலே கலைகள் மிகவுன்னதமாக வளர்க்கப்படுகின்றன.

சரஸ்வதியின் கையில் வீணையும், கிருஷ்ணரின் கையில் புல்லாங்குழலும், நந்தியின் கையில் மத்தளமும், சிவபெருமானின் கையில் உடுக்கும் இவ்வாறாக ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை விளக்கி நிற்கின்றன. ஆலயங்களிலே இசைக்கப்படும் புராணபடனம், கதாகாலேட்ஷேபம், இசைக்கச்சேரி என்பன கலையின் தத்துவத்தை விளக்குகின்றன. இனிமையான ஓசையிலிருந்து பிறந்தவை எல்லாம் இசையாகின. நாகரிகம் வளர வளர கலைகளும் வளர்ந்தன. எனவே நிலையில்லா இவ்வுலகினில் நிலை பெற்றிருக்கும் வகையில் ' இந்துமதமும் கலைகளும்' வளர்ச்சியடைந்து பரிணாமம் பெறுபவையாக விளங்குகின்றன. இத்தகைய 'இந்துமத மும் கலைகளும்' மனித வாழ் வில் இன்றியமையாதவையாகும். இவற்றைக் காலத்தால் அழியாது காப்பாற்றும் பொறுப்பு நம் இளம் சந்ததியினருக்கே உரியது. பேணிக் காப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்ஸ்டீன்

ஒரு சிறுவன் பார்ப்பவர்கள் எல்லாம் அவனை 'மண்டு' என்று தான் கூறுவார்கள். அப்படித்தான் அவனும் இருந்தான். அதுமட்டுமல்ல அவன் அதிகமாக வெட்கப்படுவான். மற்றச் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடுவதற்கே அவனுக்கு வெட்கம். அதனால் அவர்கள் வீட்டில் இருக்கின்ற கோழிக் குஞ்சுகளுடன் தான் அவன் விளையாடிக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் அவன் பஸ் ஒன்றில் ஏறிப் போயிருக்கிறான். பஸ் நடத்துனர் மீதிப் பணம் கொடுத்தார். வாங்கி எண்ணிப் பார்த்தான். பணம் குறைவது போன்று இருந்தது அவனுக்கு.

உடனே நடத்துனர் பணத்தை வாங்கி மறுபடியும் எண்ணிப் பார்க்கிறார். அது சரியாக இருந்தது. நடத்துநருக்கு எரிச்சல் வந்தது. ''பணம் சரியாகத் தானே இருக்கின்றது. உனக்குக் கணக்குத் தெரியாதா? உன்னுடன் பெரிய தொல்லையாகப் போய்விட்டது. என்று சிணுங்கிக் கொண்டார். சில்லறைக் காசை சரியாகக் கூட்டிப் பார்க்கத் தெரியாத அந்தச் சிறுவன் பெயர் என்ன தெரியுமா? அப்பேட் ஜன்ஸ்டீன்.

அந்தச் சிறுவன் வாழ்ந்து கனிவு மேதையாக ஆனார். பிற்காலத்தில் அவர் போட்ட கணக்கை உலகமே புரிந்து கொள்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டது.

அல்பேட் ஜன்ஸ்டீன் ஒரு புதிர். அவர் கண்டு பிடித்த தத்துவமும் ஒரு புதிர். இப்படித்தான் எல்லோரும் கூறுவார்கள்.

மனித அறிவுக்கு இதுவரைக்கும் எட்டாமல் இருந்த ஒரு பெரிய தத்துவம் அதை அவர் புரிந்து கொண்டார். அவர் புரிந்த கொண்ட அளவுக்கு மற்றவர்களையும் புரிய வைக்க அவரால் முடியவில்லை. அதனால் தான் அந்தத் தத்துவத்தைப் பற்றியே இதுவரைக்கு 900 புத்தகங்களுக்கு மேல் எழுதப்பட்டு வெளியாகியிருக்கின்றன.

எத்தனை புத்தகம் வெளி வந்திருக்கும் என்பது புரிகிறதே தவிர அதில் உள்ளதைப் புரிந்து கொண்டவர்கள் எத்தனை பேர் என்பது இதுவரை புரியவில்லை.

''திடப் பொருள்கள் எல்லாம் அழிந்துவிடும். ஆனால் அது போன்று காலமும் இடமும் அழியாது நிலைத்திருக்கும்''. இது பெரிய பெரிய விஞ்ஞானிகள் எல்லோரும் கண்டுபிடித்துச் சொன்னது. ஆனால் ஜன்ஸ்டீன் என்ன கூறுகிறார் தெரியுமா? ''திடப் பொருள்கள் எல்லாம் அழிந்து விடும் என்றால் காலமும் இடமும் அழிந்தே தீர வேண்டும். அதை நிரூபித்தும் காட்டினார்.

ஜன்ஸ்டீன் ஒரு முறை ரயிலில் போய்க் கொண்டிருக்கும் போது அவருக்கு பசி. வயிற்றைக் கிள்ளியது. ஏதாவது சாப்பிட்டால் நன்றான இருக்கும் என்று தோன்றியது. அதனால் ரயில்வே சிற்றுண்டிக் கடைக்குப் போய் ''என்ன இருக்கின்றது சாப்பிடுவதற்கு''? என்றார். அங்கே வேலை செய்து கொண்டிருந்த ஆள் எழுதியிருந்த பட்டியலை எடுத்து இவரிடம் கொடுத்திருக்கிறான். அதைப் படித்துப் பார்க்க சட்டைப் பையில் கண்ணாடியைத் தேடினார் கிடைக்கவில்லை எங்கேயோ தவற விட்டு விட்டார். பட்டியலை அந்த வேலை ஆளிடம் கொடுத்து ''நீயே படித்துக் கூறு'' என்றார்.

அதற்கு அந்த ஆள் ''நானும் உங்களைப் போன்றுதான் படிக்கத் தெரியாது, என்றிருக்கிறான். அவருக்கு வந்த சிரிப்பில் பசி கூட மறந்து போய்விட்டது.

பொதுவாக ஒரு விடயத்தில் ஆழ்ந்த சிந்தனை உள்ளவர்கள் மற்றைய விடயங்களில் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை.

ஜன்ஸ்டீன் குறித்து இன்னொரு கதையும் கூறுவார்கள். பொதுவாக எல்லோரும் குளிப்பதற்கு ஒரு சவர்க்காரம் சவரம் செய்வதற்கு ஒரு சவர்க்காரம் என்று வைத்துக் கொள்வது வழக்கம். ஆனால் ஜன்ஸ்டீன் இப்படித் தனித் தனியாக இரண்டு வைத்திருப்பார். அதைப்பற்றி மற்றவர்கள் ''ஏன் இப்படி? தனித்தனியாக இரண்டு சவர்க்காரங்கள் வைத்துக் கொள்ளவில்லை'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் அப்படி வைத்துக் கொண்டால் அது என்னை குழப்பிவிடும் என்றார்.

இவரது தத்துவம் உலகத்தையே குழப்பியிருக்கிறது. ஆனால் இவர் எங்கே குழம்பிப் போயிருக்கிறார் என்று பார்த்தீர்களா? இவ்வாறு பெரிய மேதைகள் எல்லோரும் ஞாபக மறதிக் காரர்களாக இருக்கலாம். ஆனால் ஞாபகமறதி இருப்பவர்கள் எல்லோரும் மேதைகள் என்று நினைத்துவிடக் கூடாது.

''என்னால் எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியவில்லை. கொஞ்ச நேரத்துக்குள் எல்லாம் மறந்து விடுகிறேன். நீங்கள் தான் ஏதாவது மருந்து கொடுத்து சரிப்படுத்த வேண்டும்'' என்றார் ஒருத்தர். ''உங்களுக்கு எத்தனை நாளாக இது இருக்கின்றது என்று கேட்டார்'' வைத்தியர். உடனே ''எது எத்தனை நாளாக இருக்கின்றது என்று கேட்கிறீர்கள்?'' என்றாராம்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# வெள்ளிவிழாவில் கால் பதிக்கும் சதாவதானி சி.க. உ.கூ.ச

(கடந்த வாரத் தொடர்ச்சி)

சதாவதானி சிக்கனக் கடனுதவி கூ.ச. 2009-2010 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் 4 இலட்சத்து 3ஆயிரத்து 262 ரூபா இலவசமாகப் பெறப்பட்டது. இதில் அடக்கப் பணம் கூட்டுறவு நிதிபோக மிதியாக உள்ள 2 இலட்சத்து 62 ஆயிரத்து 129 ரூபா பின்வரும் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பொது நலநிதி 10 வீதம் ரூபா 26,212.00, பங்குமாற்றுநிதி 5 வீதம் ரூபா 13,106.00, பங்குலாபம் 10வீதம் ரூபா 26,212.00, ஐயக்கடன் ஒதுக் கம் 5வீதம் ரூபா 13,106.00, கட்டடநிதி 20வீதம் ரூபா 52,424.00 குறித்த கணக்காய்வு அறிக்கையில் சங்க அமைப்புத் தொழிற்பாட்டுப் பதிவுச்சான்றிதழ், துணைவிதி, சங்கமுத்தி னரை என்பன உண்டு. ஆனால் நடைமுறை இல்லை எனவும், சங்க அங்கத்தவர் தொகை 368 பேர் இருந்த போதும் இந்த வருடத்தில் 7 பேர் விலகி உள்ளதால் மொத்த அங்கத்தவர் 361 என்றும், தவணை தப்பிய கடன்கள் இல்லை என்றும் கணக்காய் வாளர் திருமதி.தாட் சாயினி தெரிவித்துள்ளார்.



தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு தொடர்பான கருத்தரங்கை சங்கம் நடத்திய போது, சங்கத்தின் தலைவர் க.தங்கராசா அறிமுகவுரையை நிகழ்த்துகின்றார். அப்போதைய அதிபர் எஸ்.இராமஜெயம் மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையபோக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் அமர்ந்திருக்கின்றனர்.

**கர்ணன்**

சங்கத்தின் பணியாளர்களை நிரந்தரப்பணியாளர்களாக ஆளணி அங்கீகாரம் பெறப்பட்டு செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள், ஆவணங்கள் ஒழுங்காகவும் பதிவுகளை மேற்கொண்டு சிறந்த கணக்காய்வு முறையைக் கையாண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சங்கம் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு, சபை வங்கி சேமிப்புக் கணக்கு, கிராமிய வங்கி சேமிப்புக் கணக்கு, சிக்கனகடன் கூட்டு றவுச் சங்கங்களின் சமாச வங்கிக் கணக்கு ஆகிய 5 வங்கிகளில் நிதிகளை வைப்பிலிட்டு கையாண்டு வருகிறது.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வருடாந்த ஒன்று கூடல் இந்த ஆண்டு ஆரம்பத்தில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது கடந்த ஆண்டு வடபிராந்திய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்துக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களான அமரர்கள் மு.பொ.வீரவாகுவே மார்க்கண்டேயபிள்ளை மற்றும் க.தங்கராசா, க.வேலாயுதம் ஆகியோர்களுடன் ச.விசுவநாதன், சோ.கங்காதரன், அ.துரைசிங்கம், திருமதி பொ.இரத்தினசோதி, மு.தர்மலிங்கம், நலசோதிநாதன், பொ.திருச்செல்லம், செ.விக்கினேஸ்வரன், க.இராமச்சந்திரன், க.பாலகிருஷ்ண பிள்ளை ஆகியோர் மிக நீண்ட காலமாக செயற்குழுவில் ஏனைய அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் அங்கம் வகித்து இந்தச் சங்கத்தை மிக உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர் என்றால் மிகையாகாது.

கடந்த 24 வருட காலத்தில் 350 அங்கத்தவர்கள் ஆரம்பத்தில் ஆயிரம் ரூபா தொடக்கம் தற்போது ஒரு லட்சம் ரூபா வரை சங்கத்தில் கடன்களைப் பெற்றுதிருப்பிச் செலுத்தியுள்ளனர். இவர்களில் ஒரு சிலரைத் தவிர பல அங்கத்தவர்கள் பல முறை கடன்களைப் பெற்று தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர். அவ்வாறு பெற்றவர்களில் ஒரு சில அங்கத்தவர்கள் கடந்த 24 வருட காலத்தில் 7 தடவைகள் கடன்களைப் பெற்று திருப்பிச் செலுத்தியுள் ளார்கள். இது ஒரு விசேட கடன் செயற்பாடாகக் கணிக்கப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியில் 33 முதியோர்கள் 5 சமுக சேவையாளர்கள், 2 கலைஞர்கள் கௌரவிக் [illegible] பொ.இரத்தினசோதி, [illegible]ணியக் குருக்கள், மு.தர்மலிங்கம், ஆ.வேலும்மயிலும் உட்பட மறைவுக் குப் பின்னர் சட்டத்தரணி ந.தங்கராசா ஆகியோருக்கே சமூக சேவையாளர் விருதுகள் வழங்கப் பட்டன. இந்த விருதுகளை சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து அமரத்துவம் அடைந்த வே.மார்க்கண்டேய பிள்ளையின் நினைவாக அன்னாரின் குடும்பத்தின் அனுசரணையுடன் சங்கத்தால் வழங்கப் பட்டுவருகின்றது. கலைஞர் கௌரவிப்பில் பிரபல சிற்பாசாரியார் கலாபூசணம் கோ.வேலுப்பிள்ளை, பாரம்பரிய நாட்டுக் கூத்துக் கலைஞர் எஸ்.ஜெயவசிகரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சங்க அங்கத்தவர்களிடையே வீட்டுத் தோட்ட முயற்சியாக வடமராட்சி லயன்ஸ் கழகத்திடமிருந்து சங்கம் பெற்றுக் கொண்ட நல்லினத் தென்னங்கன்றுகள், தேசிக்காய் மரக்கன்றுகள் கடந்த வருடம் வழங்கப்பட்டன. மாணவர்கள் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் குறித்து அதன் படி செயற்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை மாணவர்களுக்கு சங்கத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறைப் பொலிஸாரைக் கொண்டு போக்குவரத்து ஒழுங்கு செயற்பாடுகள் செய்து காண்பிக்கப் பட்டதுடன், கருத்தரங்கும் கடந்த வருடம் நடத்தப்பட்டது.

சங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக கடந்த 25 ஆண்டுகளில் இரண்டு முறை மாவட்ட, மாகாண ரீதியாக இந்தச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கடந்த 2004 ஆம் ஆண்டு நடத்திய போட்டி யில் முதல் தடவையாக முதலிடம் பெற்று அதற்கான சான்றிதழைப் பெற்றுக் கொண் டது. வடபிராந்திய கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கடந்த ஆண்டு நடத்திய போட்டியில் இரண்டாவதுதடவையாக சிறந்த சங்கம் என தெரிவு செய்து சான்றிதழ்களையும் பரிசுகளையும் பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வருடாந்த ஒன்று கூடல் இந்த ஆண்டு ஆரம்பத்தில் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது கடந்த ஆண்டு வடபிராந்திய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்துக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது 25 ஆண்டில் வெள்ளிவிழா ஆண்டில் காலடி வைத்திருக்கும் இந்தச் சங்கம் ஓரிருமாதத்தில் வெள்ளிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அதனை ஒட்டி வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே சதுரங்கப் போட்டியை நடத்தியுள்ளது. வெள்ளி விழாவை ஒட்டி பல்வேறு ஆக்கங்களும் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப் படவுள்ளது. *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகள் இரண்டும் கூட்டமைப்புடன் செயற்பட முடியாதா?

## மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் கேள்வி

கிழக்கு மாகாணத்திலாவது இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஏன் செயற்பட முடியாது? இது குறித்து கலந்துரையாடல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கருத்தை பிரதேசவாதம் சார் கருத்தாக எவரும் கருதிக்கொள்ளக்கூடாது. இது தொடர்பான முடிவுகள் மிக விரைவில் அறிவிக்கப்படும். அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடவுள்ளேன் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணியின் உறுப்பினருமான இரா. துரைரெத்தினம் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தொடர்பாகவும் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள் குறித்தும் வினவியதற்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக எமது கட்சியின் செயலாளர் சிறிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது தொடர்பாகப் பல முயற்சிகளை எடுத்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். இதற்கு ஆட்சேபனை தெரிவித்தது.

குறிப்பாக, இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்க முடியாது எனக் கூறியிருந்தார். ஆனால், ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, சித்தார்த்தன் தலைமையிலான புளொட் ஆகிய இரண்டு கட்சிகளையும் உள்வாங்கினர். எமது கட்சி அதன்போது உள்வாங்கப்படவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக நான் முயற்சி எடுத்தபோதும் சிலர் அதனை உதாசீனம் செய்தனர். எதிர்காலத்தில் கட்சிகளுக்குள் முரண்பாடுகள் ஏற்படக்கூடாது என்பதற்காக நானும் பின்வாங்கினேன். கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் வவுனியாவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாடினேன்.

மீண்டும் கடந்த மாதம் மட்டக்களப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனைச் சந்தித்துப் பேசினேன். அதில் எதிர்காலத்தில் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகத் தமிழ் மக்களின் பலத்தை அதிகரிக்கமுடியும் என்ற நிலைப்பாட்டை எட்டினோம். இருந்தும் இறுதி முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதைத் தொடர்ந்து எமது கட்சி அமைப்பின் வெளிநாட்டு, உள்நாட்டு அமைப்பினிடம், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்று சேர்வது அல்லது இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். அணிகளும் ஒன்று சேர்வது தொடர்பாக முடிவெடுத்து செயற்படவேண்டும்.

இந்த இரண்டு விடயங்களுக்கும் காரணம் கிழக்கிலுள்ள தமிழர்களைப் பொறுத்த மட்டில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையுடன் ஓரணியில் செயற்படவேண்டும் என்ற ஆதங்கத்தில் இருக்கின்றமையேயாகும்.

இது தொடர்பாக கிழக்கில் உள்ள பல அமைப்புகளும் மக்களும் ஆலோசனை நடத்தி வருகின்றனர். இம் மக்கள் இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

அந்தவகையில் மக்களுக்காகத்தான் கட்சிகளே தவிர, கட்சிகளுக்காக மக்கள் இல்லை என்பது எனது கருத்தாகும். இத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இது தொடர்பான முடிவுகள் மிக விரைவில் அறிவிக்கப்படும். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடவுள்ளேன் - என்றார். (ச-31)



புத்தாண்டை முன்னிட்டு மகாவலி வலய விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் முகமாக அமைக்கப்பட்ட புத்தாண்டுச் சந்தை திறப்பு விழாவில் நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்துகொண்டு பார்வையிட்டார்.

### சீன நபர் திடீர் சாவு

கல்பிட்டி,ஏப்.11

கற்பிட்டி - நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பணிபுரிந்து வந்த சீன நாட்டு நபர் ஒருவர் திடீர் சுகயீன முற்று உயிரிழந்துள்ளார் என்று கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பணிபுரிந்து வந்த சண்ஹெய்லுய் (வயது-38) என்ற சீன நாட்டவரே நேற்று முன்தினம் காலை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகயீனமுற்று புத்தளம் வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் மரணமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரது மரணம் குறித்து கற்பிட்டி பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ச)

### வாழைச்சேனையில் கஞ்சாவுடன் இருவர் கைது

மட்டக்களப்பு,ஏப்.11

மட்டக்களப்பு - வாழைச்சேனை காசிம் வீதியில் கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் பயணித்த வாகனம் ஒன்றை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சோதனையிட்ட வாழைச்சேனை பொலிஸார் அதிலிருந்து 3 கிலோ 466 கிராம் கஞ்சாவை மீட்டதுடன் வாகனத்தில் பயணித்த இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். (ச)

### மணல் ஏற்றுபவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

எருவில்,ஏப்.11

மட்டக்களப்பு, மயிலவட்டவான் ஆற்றில் இருந்து ஆற்றுமண் ஏற்றுவதில் எதிர்நோக்கி வந்த அசௌகரிய நிலைமைகளை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தீர்த்து வைத்தார்.

இந்தப் பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்ற முதலமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருடனும் தொடர்பு கொண்டு மணல் ஏற்றுவதில் இருந்த அசௌகரியங்களை உடனடியாகத் தீர்த்து வைத்தார். (ச-31)

### இந்திய நபர் குறித்து பொலிஸார் விசாரணை

மட்டக்களப்பு,ஏப்.11

விசா இன்றி கிழக்கு மாகாணத்துக்குச் சென்று பல்வேறு துறைசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் 500 இற்கும் மேற்பட்ட இந்திய நபர்கள் தொடர்பில் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசா அனுமதிப்பத்திரமின்றி இலங்கையில் தங்கியோரில் சிலர் கிழக்கில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற அதே வேளை, மேலும் சிலர் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திய நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### மின்னல் தாக்கி இருவர் சாவு

கல்கமுவ,ஏப்.11

கல்கமுவ, கலேவெவ பகுதியிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த இருவர் மின்னல் தாக்கி மரணமடைந்தனர் மற்றுமொருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் கல்கமுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை கல்கமுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

உயர்தரத்தில் சித்தியடைந்தோர்

### கணிதம், விஞ்ஞானம் கற்கமுடியாத நிலை

திருகோணமலை,ஏப்.11

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஈச்சிலம்பற்று கல்விக் கோட்டத்திலுள்ள எந்த ஒரு தமிழ்ப் பாடசாலைகளிலும் ஜி.சீ.ஈ உயர்தர பிரிவில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்கக் கூடிய வசதிகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஈச்சிலம் பற்று கல்விக் கோட்டத்தில் பல பாடசாலைகள் காணப்படுகின்றன. அதில் ஸ்ரீ சண்பகா மகாவித்தியாலயம், இலங்கை துறைமுகத்துவாரம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கூடுதலான மாணவ, மாணவிகள் உயர்தரத்தில் உயிரியல், கணித பிரிவுகள் கற்க ஆர்வம் இருந்தும் கற்க முடியாத நிலையில் உள்ளனர் என்று பெற்றோர் கவலையுடன் தெரிவித்தனர். (ச-40)

### விவசாயிகளுக்கு கடன்

அக்கரைப்பற்று மாகாசக்தி சிக்கன கூட்டுறவுச் சங்கத்தினால், விவசாயத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 452 விவசாயிகளுக்கு மூன்று கோடியே 80 லட்சம் ரூபா விவசாயக் கடனாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

விவசாயிகளுக்கு மக்கள் வங்கியின் அக்கரைப் பற்று முகாமையாளர் ஏ.எம்.நசீர், மகாசக்தி சிக்கன கூட்டுறவுச் சங்கத் தலைவர் சோமசுந்தரம் ஆகியோர் கடன்களை வழங்கி வைத்தனர்.

### மக்களிடையே பூசலைத் ஏற்படுத்தவே சிலை உடைப்பு சம்பவம் அரங்கேற்றம்

#### முன்னாள் எம்.பி. தங்கேஸ்வரி தெரிவிப்பு

மட்டக்களப்பில் கடந்த வாரம் இடம்பெற்ற நான்கு வரலாற்றுப் புகழ்மிக்க பெரியார்களின் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவமானது தமிழ் மக்களின் இதயங்களைப் புண்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மக்களிடையே பூசலைத் தோற்றுவிக்கும் செயலாகவே அமைகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி தெரிவித்துள்ளார்.

சிலை உடைப்புச் சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எதிர்கால சந்ததிகளுக்கு, மாணவர்களுக்கு உதாரண புருஷர்களாகத் திகழ்ந்த இந்தப் பெரியார்களின் சிலைகள் இரவோடிரவாக உடைக்கப்பட்டமை கவலையான விடயமாகும்.

**சிலை உடைப்புச் சம்பவங்கள் இடம்பெறும்போது மட்டக்களப்பு மக்கள் குழப்பமடையாமல் இருக்கவேண்டும்.**

எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வு இடம்பெறாமல் இருக்கவேண்டும். இத்தகைய ஈனச் செயலைச் செய்தோரை சட்டம் தேடிப்பிடிக்கவேண்டும். அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இனங்களுக்குள்ளே குழப்பத்தை ஏற்படுத்தும் செயல்கள் நிறுத்தப்படவேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறும்போது மட்டக்களப்பு மக்கள் குழப்பமடையாமல் இருக்கவேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)

# அரசின் செயற்பாட்டை எதிர்கொள்ள மாணவர்களும் சக்தி பெற வேண்டும்

## தென்கிழக்குப் பல்கலைக்கழக ஸ்தாபகத் துணைவேந்தர் தெரிவிப்பு

எருவில், ஏப். 11

அரசின் செயற்பாட்டை எதிர்கொள்வதற்கு மாணவர்கள் சக்தி பெறவேண்டும் என்று தென்கிழக்குப் பல்கலைக் கழக ஸ்தாபகத் துணைவேந்தர் எம்.எல்.ஏ.காதர் தெரிவித்தார்.

கொம்டெக் கல்வி நிறுவனம் நடத்திய கணினி மற்றும் ஆங்கில பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களுக்குப் பகுத்தறிவும் ஆராய்ச்சியும் அவசியமாகக் கருதப்படுகிறது. அதனால்தான் ஈரான் உலகுக்கே முன்மாதிரியாகத் திகழ்கிறது.

இன்றைய சூழலில் நாமும் பலமுள்ளவர்களாக மாறவேண்டும். ஏனெனில், நமது வளங்கள் எதுவும் நமக்குச் சொந்தமில்லை என்று அரசு சொல்கிறது. அவ்வாறாயின், இன்று நம்மிடம் இருப்பது நாளை பறிபோகலாம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆகையால், அரசின் நடவடிக்கைகளை எதிர்கொண்டு நமது வளங்களைக்காப்பாற்றி உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கு மாணவர்கள் சக்தி பெறவேண்டும்.

இல்லையேல், இன்றைய இளைய சந்ததியினர் நாளை இந்த மண்ணில் வாழ முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படலாம். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இளம் சந்ததியினரை சக்தியூட்டி பலப்படுத்த வேண்டிய தேவை நமக்கு உள்ளது- என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

பங்குனி 30 வியாழக்கிழமை 12.04.2012
திதி: ஷஷ்டி பி.ப.12.13 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப 04.42 வரை
சுபநேரம்: 07.36-09.06 வரை
ராகு காலம்: 01.36-03.06 வரை

**மேடம்:** வருமானத்துக்கு வாய்ப்புக் கிடைத்த போதும், அதைத் தக்க வைத்துக் கொள்ள சற்று போராட்டமான சூழ்நிலை நிலவும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தொடர்புகளை, பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வீர்கள். வெளிவட்டாரப் பழக்க, வழக்கங்களில் செலவுகள் சற்று கூடுதலாக இருக்கும்.

**இடபம்:** தங்கள் எதிர்பார்ப்பு ஒன்று, நடந்தது மற்றொன்றாக இருக்கும். பணம் சம்பந்தப்பட்ட வகையில், இழுபறியும், அதனால் சில பாதிப்புகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வியாபாரத்தில், சில சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால், சில காரியங்களை எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** தெய்வ பணிகளுக்காகச் செலவுகள் இருக்கும். எதிர்பார்த்த பண வரவுகள், தாம தப்பட்ட போதும் கிடைக்கப் பெறுவீர்கள். சில பணிகளை எடுத்துக் கொண்டு முடிக்க முடியாமலும், அதே நேரத்தில், முடிக்க வேண்டும் என்கின்ற வேகத்தை கட்டுப்படுத்த முடியாமலும் அல்லல் படுவீர்கள். முதலில், மனதை ஒருநிலைப்படுத்திக் கொண்டு பின் செயற்படுங்கள்.

**கடகம்:** செலவுகளில் கவனம் தேவை. எதிர்பார்த்த வரவுகள்வரும். சில செலவுகளுக்காக, கடன்களை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலையே. வங்கி மற்றும் அரச வகையில் உள்ள தொடர்புகளை, மிக கவனமுடன் கொண்டு செல்லுங்கள். பணியாளர்கள் தேவையற்ற பேச்சுக்கள் மற்றும் விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**சிங்கம்:** சந்தோஷமோ, தொந்தரவோ எதுவும் தாங்கள் ஏற்படுத்திக் கொண்டதாக இருக்கும். நிதானித்துச் செயற்படுங்கள். கையில் இருக்கும் பணத்திற்கு, தகுந்த செலவுகளை மேற்கொள்வது நல்லது. குடும்ப சம்பந்தப்பட்ட வகையில், சிற்சில மனச்சங்கடங்கள் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**கன்னி:** மனதில் ஒன்றை நினைத்து, அதை வெளிக்காட்ட இயலாமல் செயற்படுவீர்கள், குடும்ப விவகாரங்களில் சற்று கூடுதல் நிதானம், விமர்சனங்களைத் தவிர்க்கும். பொதுக் காரியங்களில், தலையீடுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். முக்கியஸ்தர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் சற்று தாமதப்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் செலவுகளே.

**துலாம்:** வாக்குக் கொடுத்த விவகாரங்களைக் காப்பாற்றுவதற்காக, தீவிர முயற்சி மேற்கொள்வீர்கள். தொழிலில், சிற்சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். பெண்களால் சில ஆதாயங்களைப் பெறுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில், சில இடர்பாடுகள் ஏற்பட்டபோதும் பெரிய பாதிப்பு என்று எதுவும் இருக்காது.

**விருச்சிகம்:** நீங்கள் நினைத்ததே சரியென்றும், முடிவானதென்றும் கொள்வீர்கள். பெற்றோரின் உதவிகள் மிகுந்த பயன் தரும். வீட்டிலும், வெளியிடங்களிலும் என்னதான் நல்லவிதமாகச் செயற்பட்டாலும், நற்பெயர் என்பது கொஞ்சம் கஷ்டமே. முக்கியஸ்தர்களின் சந்திப்பின்போது பேச்சுகள் மிகத்தெளிவான வகையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்..

**தனுசு:** இன்று காரணமற்ற வெறுப்பும், சோர்வும் காணப்படும். தேவையற்ற கோபம் மற்றும் அலைச்சல்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். சந்திப்புகள் மன நிறைவை கூடுதலாக்கும். எதிர்கால சிந்தனைகள் சற்று அதிகம் இருக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வீண் அலைச்சலும், செலவுகளும் தான் ஏற்படும்.

**மகரம்:** இன்று மனநிறைவும், உற்சாகமும் கூடும். புதிய பொறுப்புகள் ஒன்று ஏற்படும். நிதி சம்பந்தப்பட்ட வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப் பெறும். வெளிவட்டார பழக்க வழக்கங்கள் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். வியாபாரத்தில் சற்று மந்தமான சூழ்நிலை என்றபோதும், பாதிப்பு ஏதும் இருக்காது.

**கும்பம்:** உங்கள் எண்ணங்கள் ஈடேறும். குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட வகையில், அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். குடும்ப விவகாரங்களில் கூடுதல் அக்கறை கொள்ளுங்கள். நிதி நிலையில் எதிர்பாராத பற்றாக்குறை ஏற்பட்டபோதும், சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள்.

**மீனம்:** உடல்நிலையையும் பொருள்படுத்தாது, பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். குடும்ப பொறுப்புகளில், சில விடயங்கள் அதிகமாக யோசிக்க வைத்தபோதும், அதைத் தவிர்க்க முடியாது என்பதனை நினைவில் கொள்ளுங்கள். புதிய அறிமுகங்களால், எதிர்பார்த்த நன்மை கிடைக்கப் பெறும். கடன்களின் நிலை கவலை தரும்; யோசித்துச் செயற்படுங்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | 6 | 2 | | |
| | 5 | | | | 8 | 1 | 6 | |
| | 7 | | 4 | | 1 | | | 9 |
| 7 | 4 | 8 | | | | | | |
| | 2 | 9 | 7 | | 5 | 8 | 4 | |
| | | | | | | 6 | 7 | 2 |
| 4 | | | 6 | | 7 | | 5 | |
| | 8 | 2 | 1 | | | | 9 | |
| | | 7 | 5 | | 9 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 7 | 8 | 9 | 6 | 3 | 4 | 2 |
| 2 | 9 | 8 | 7 | 3 | 4 | 6 | 1 | 5 |
| 3 | 6 | 4 | 5 | 1 | 2 | 9 | 7 | 8 |
| 4 | 8 | 9 | 2 | 5 | 7 | 1 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 1 | 4 | 8 | 7 | 2 | 9 |
| 1 | 7 | 2 | 3 | 6 | 9 | 5 | 8 | 4 |
| 7 | 4 | 5 | 6 | 8 | 3 | 2 | 9 | 1 |
| 9 | 3 | 6 | 4 | 2 | 1 | 8 | 5 | 7 |
| 8 | 2 | 1 | 9 | 7 | 5 | 4 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மரண அறிவித்தல்

# செல்லையா தெய்வேந்திரன்

**உரிமையாளர் Scotia Stores (UK)**



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், பரந்தன், டென்மார்க், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தெய்வேந்திரன் (27-03-2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற செல்லையா மற்றும் கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் கமலசரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், லோகறஞ்சினியின் அன்புக் கணவரும், டினோசன், திவானா, டிலான், அபிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராசா (கனடா), ஞானாம்பிகை (இலங்கை), இராமச்சந்திரன் (இலங்கை), சிறிதரன்(இலங்கை), கௌதமி (இலங்கை), காலஞ்சென்ற ஸ்ரீறஞ்சினி மற்றும் ராஜேந்திரன் (லண்டன்), மகேஸ்வரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மராஜா(இலங்கை), ஞானசுப்பிரமணியம் (இலங்கை), நீதிறஞ்சன் (இலங்கை), துளசிறஞ்சன்(இந்தியா), வனசறஞ்சன்(பிரான்ஸ்), குமுதறஞ்சன்(இலங்கை), கிருபாறஞ்சன்(பிரான்ஸ்), நாகலட்சுமி(கனடா), தேவராணி (இலங்கை), காலஞ்சென்ற றஜனி மற்றும் ஞானகலா(லண்டன்), ஜெயவதனி(சுவிஸ்), பதுமறஞ்சினி(இலங்கை), தயாறஞ்சினி(இலங்கை), தனறஞ்சினி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோணேஸ்வரன் (கனடா), லிங்கேஸ்வரன் (கனடா), கௌரி (கனடா), கணேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் சுதாஜினி, சிவாஜினி, பிரியதர்சினி, விமலன் (மலேசியா), நித்தியா, சமீரா, சுஜமீரா, நிலாஜெனன், மாதவன், கஜவரன், ரகுவரன் ஆகியோரின் சிறியதந்தையும், லேகாஜினி, வனிதாஜினி, காலஞ்சென்ற பிரதாபன் மற்றும் தர்சிகா (லண்டன்), தாருகா (லண்டன்), துளசிகா (சுவிஸ்), துர்சிகா (சுவிஸ்), துவாரகி (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் தயா, காலஞ்சென்ற ஞானராஜா (லண்டன்) மற்றும் உமா, வாணி (கனடா), மாலினி, கிரிதரன் (டென் மார்க்), கிரியா, கிரிசாந்தன் (லண்டன்), கிரிசாளன் (பெல்ஜியம்), கிரிசயன், கிரிபவன், சிந்து (கொழும்பு), குமரன், ஜெனனி, சஸ்மிதா (பிரான்ஸ்), சௌமிதா (பிரான்ஸ்), ஜெனோசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2012) புதன்கிழமை லண்டன் நேரப்படி நண்பகல் 12 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

தகவல்:
சி.[illegible]
'ஞானம் ஸ்ரோர்ஸ்',
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்

(1663) (2-9-6)

## நீங்கா நினைவலைகள்

**33 ஆம் நாள் நினைவு** — **6 ஆம் ஆண்டு நினைவு**





மண்ணில் 28 ★ 08 ★ 1934 — விண்ணில் 10 ★ 03 ★ 2012

### ஐயாத்துரை சிங்கராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

திதி: மாசி தேய்பிறைத் திருதியை

மண்ணில் 28 ★ 11 ★ 1938 — விண்ணில் 18 ★ 06 ★ 2006

### கனகம்மா சிங்கராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)

திதி: வைகாசி தேய்பிறை சஷ்டி

கடந்த (10.03.2012) அன்று அந்திசாய்ந்த ஐயாத்துரை சிங்கராசா எங்கள் குடும்ப பரோபகார ஒளிவிளக்கு அன்னாரின் 33 ஆம் நாள் நினைவு இன்று (11.04.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஏகோதிட்ட வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறும்.

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இந்த மண்ணில் எம் ஊனுடல் உள்ளவரை தங்கள் பரோபகாரத்தை மறக்கலுமாமோ! திருவாலங்காடன் அடியினை இணைந்த தங்கள் தெய்வீகப் பரோபகார அலை இம்மையும் மறுமையும் தோன்றாத்துணை புரியத் தங்களை என்றென்றும் பிரார்த்தித்து ஆராதிக்கின்றோம்.

சாந்தி.... சாந்தி... சாந்தி...

மணிமன்றம்
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(16597) (45.6.7)

சகோதரர்கள், மருமகன்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பது காட்டாட்சி என்றால் பொலிஸ், நீதிமன்றம் எதற்கு?

## மனோ கணேசன் கேள்வி



கொழும்பு,ஏப்.11

நாட்டில் நடப்பது காட்டாட்சி என்றால் நாட்டுக்குள்ளே பொலிஸ், நீதிமன்றம், நாடாளுமன்றம் ஆகியவை எதற்கு? என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

முற்போக்கு சோஷலிசக் கட்சியின் தலைவர்களான குமார் குணரத்தினம் கடத்தப்பட்டது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற அனைத்துக்கட்சி ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறும் கடத்தல்கள் சட்டம் இயற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றங்களில் தீர்ப்புகள் வழங்கும் நீதிபதிகளையும், அதே சட்டத்தை நடைமுறைப்படுத்த கடமைப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளையும் கோமாளிகளாக்கியுள்ளது.

இந்தக் கடத்தல்களுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். இன்று கடத்துவதற்கும், கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதற்கும் அதிகாரம் கொண்ட ஒரே சக்தி அரசு மட்டுமே ஆகும். ஆயுத பலம் அரசுக்கு மாத்திரமே இருக்கின்றது. அதில் தப்பு இல்லை. ஆனால் அந்த ஆயுத பலம் மக்களை காப்பாற்றுவதற்காக பயன்பட வேண்டும். இந்த அரசு அதை செய்யவில்லை. தமது சொந்த அரசியல் தேவைகளுக்காக அரசு ஆயுத பலத்தை பயன்படுத்துகிறது. தற்போது நடைபெற்றுள்ள கடத்தல்களுக்கு அரசு பதில் கூற வேண்டும்.

கடந்த எழுபது நாள்களில் 35 கடத்தல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அதாவது இரண்டு நாள்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் நடந்துள்ளன.

கடந்த போரின் போது கொழும்பில் நாளொன்றுக்கு 10 கடத்தல் சம்பவங்கள் கூட நடந்தன. போர் முடிவடைந்ததும் கடத்தல்கள் குறைந்தன. இன்று மீண்டும் கடத்தல், காணாமல் போதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடத்தலுக்குப் பயந்து கொழும்பு வருவதற்கு மக்கள் பயப்படும் சூழல் இன்று உருவாகி வருகிறது.

முற்போக்கு சோஷலிசக் கட்சியுடன் எமக்கு பல கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆனால் இந்த மனித உரிமை விடயத்தில் நாம் அனைவரும் ஒன்றுபடுகிறோம். எதிர்க்கட்சி செயல்பாட்டாளர்களை கடத்தி அழிப்பதற்கு இந்த அரசுக்கு நாம் இடம் தர முடியாது- என்றார்.

# கொழும்பு - மாத்தறை அதிவேக ரயில் சேவை

கொழும்பு,ஏப்.11

கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை முதல் விசேட ரயில் சேவையை நடத்தவுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான அதிவேக ரயில் சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட உள்ளது. இந்தநிலையில் பண்டிகையை முன்னிட்டு இந்த விசேட சேவை நடத்தப்படுவதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ. ஆர். ரத்னாயக்க தெரிவித்தார்.

கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான ரயில் பாதை மணிக்கு நூறு கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யும் வகையில் மூன்று கட்டங்களாக நிர்மாணிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

மாத்தறையில் இருந்து காலி வரை முதலாம் கட்டமாகவும் காலியில் இருந்து அளுத்கம வரை இரண்டாம் கட்டமாகவும் அளுத்கமையில் இருந்து களுத்துறை வரை மூன்றாம் கட்டமாகவும் ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நேர அட்டவணைப்படி ரயில் சேவை இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டார்.

# மக்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

தவறு இழைத்தவர்கள் அதிலிருந்து தப்பிக்க முடியாது.



கொழும்பு,ஏப்.11

மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவரை அழைத்துச் சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குமார் குணரத்தினம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்டமை கீழ்த்தரமான செயல். தவறு இழைத்தவர்கள் அதிலிருந்து தப்பிக்க முடியாது. அவர்களுக்கு எதிர்காலத்திலேனும் தண்டனை கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களைப் பாதுகாப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை

## பூரண வைத்திய சேவை ஒன்றிணைந்த அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.11

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கவுள்ளதாக பூரண வைத்திய சேவை ஒன்றிணைந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு உள்ளிட்ட மூன்று பிரதான கோரிக்கைகளுக்கு பேச்சு மூலம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை எதிர்பார்ப்பதாக சபையின் பிரதான செயலாளர் சமன் ஜயசேகர தெரிவித்தார்.

**கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் நாடு முழுவதும் உள்ள 560 வைத்திய சாலைகளில் பணிபுரியும் பூரண வைத்திய சேவை ஒன்றிணைந்த அதிகார சபையினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர்.**

ஒரு வாரத்தில் தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் நாடு முழுவதும் உள்ள 560 வைத்தியசாலைகளில் பணிபுரியும் பூரண வைத்திய சேவை ஒன்றிணைந்த அதிகார சபையினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர் என்று அவர் எச்சரித்துள்ளார்.

தமது பிரச்சினை குறித்து சுகாதார அமைச்சு, பொருளாதார அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகளிடம் கடந்த காலங்களில் அறிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

பிரச்சினை தொடர்பில் அண்மையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தும் தீர்வு கிடைக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நுகர்வோர் முறைப்பாட்டுக்கு உடன் நடவடிக்கை

கொழும்பு,ஏப்.11

பண்டிகைக் காலத்தில் பொருள்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாத வகையில் நாடளாவிய ரீதியில் ஒழுங்கான விநியோகம் முன்னெடுக்கப்படும். வர்த்தகர்கள் பொருள்களுக்கு விலை அதிகரிப்பை மேற்கொள்வதாக நுகர்வோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளூர் வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார்.

எதைக் காரணம் காட்டியும் காய்கறிகள்- பழங்கள் உள்ளிட்ட எந்தவொரு அத்தியாவசிய உணவுப் பொருளினதும் விலை அதிகரிப்புக்கு இடமளிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்துக்கு என மக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களும் கடந்த பெப்ரவரி மாதம் முதலே நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள கூட்டுறவு நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

# முதலைகள் சரணாலயம் அமைப்பதற்குத் திட்டம்

கொழும்பு,ஏப்.11

நில்வள கங்கையில் முதலைகளின் தொல்லையைத் தடுக்க சேற்று நிலத்தை உருவாக்கி முதலைகள் சரணாலயம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென கிரலகெலே பகுதியில் 50 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நில்வள கங்கையில் முதலைகளால் ஏற்பட்ட மரணங்களைத் தடுக்கும் வகையில் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனையின் கீழ் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த முதலைகள் சரணாலயத்தை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஅமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கென 12 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக அவர் கூறினார்.

# தமிழர்கள் பாதிக்கப்பட்டால் நடவடிக்கை எதுவுமில்லை

## பிரபா கணேசன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.11

கொட்டாஞ்சேனை பொலிஸ் பகுதிக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில நாள்களுக்கு முன்பு கொட்டாஞ்சேனை கோயிலுக்கு அண்மையில் வங்கியிலிருந்து 10 லட்ச ரூபா பணம் எடுத்து வந்த முதியவரை தாக்கி கொள்ளையிடப்பட்டுள்ளது. அதே போல் கடந்த வெள்ளிக்கிழமை விவேகானந்தா மேட்டில் ஆலயத்துக்குச் சென்று திரும்பிய பெண்ணின் தாலிக்கொடி அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான பல சம்பவங்கள் கொட்டாஞ்சேனை பொலிஸ் பகுதியில் இடம்பெற்று வருகின்றன. தமிழ் மக்களிடமே இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இது சம்பந்தமாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சேனக்க ரத்வத்தயிடம் தெரிவித்துள்ளேன்.

இந்தக் கொள்ளையர்களைக் கண்டுபிடிப்பதற்கு விசேட பொலிஸ் படை அமைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

எனவே இந்தச் சம்பவங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

# உள்நாட்டில் அதிகளவு ரின்மீன் உற்பத்தி

கொழும்பு,ஏப்.11

இலங்கைக்குத் தேவையான ரின்மீன்களில் அரைப் பங்கையாவது இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் உள்நாட்டில் தயாரிக்க முடியும் என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

காலியில் அமைக்கப்பட்டுள்ள ரின்மீன் தொழிற்சாலையில் தினமும் 10,000 ரின் மீன்களாக உள்ள உற்பத்தி படிப்படியாக 20 ஆயிரமாக அதிகரிக்கப்படும் என்று கூறினார்.

பேலியகொடையிலும் புத்தளம் மாவட்டத்தின் முந்தலமவிலும் உள்ள இரண்டு தொழிற்சாலைகளிலும் இந்த வருடம் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தொழிற்சாலைகள் மூலம் தினமும் 60,000 ரின்மீன்களை தயாரிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும் இலங்கைக்கான கொரியா தூதர் [illegible]மிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் சமகால அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் நலனில் இலங்கை அசமந்தம்

## ஜெயலலிதா கண்டனம்



புதுடில்லி, ஏப்.11

இலங்கையின் வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போரால் இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு சென்ற இலங்கை அகதிகள் தொடர்பில் இலங்கை அரசு அக்கறை யின்றிச் செயற்படுவதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கண்டனம் தெரிவித்தார் என்று இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இதுகுறித்து மேற்படி ஊடகங்கள் தெரிவித்ததாவது:

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இந்தி யாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். இலங்கை அரசு இதுதொடர்பில் கவனம் செலுத்தாமை தமிழ் மக்கள் மீதுள்ள அதிருப்தியை புலப்படுத்துகின்றது.

இந்தியாவின் தமிழக முகாம்களில் தங்கியுள்ள 23 ஆயிரம் இலங்கையர்கள் மீண்டும் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். எனினும் இலங்கை அரசு அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

இதுதொடர்பில் இலங்கை அரசியல் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளேன் என்று ஜெயலலிதா தெரிவித்தார் என்று அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

## தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி,ஏப்.11

காரைநகரில் இயங்கி வரும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் தொழிற் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி நெறிக்கு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாத காலத்துக்கு நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கு தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் (NVQ4) வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பங்களை பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை காரைநகர் எனும் முகவரிக்கு எதிர் வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப் பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (வ-100)

## யாழ். மாவட்டத்தில் விரைவில் இணையவழி வைத்தியசேவை



வலி.வடக்கு, ஏப்.10

யாழ்.மாவட்டத்தில் பொது மக்களிடையே வைத்திய சேவையை நல்ல முறையில் முன்னெடுக்கும் முகமாக இணையத்தளம் மூலமான சேவையை நடத்துவதற்கான முன் முயற்சிகளை யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களமும் உளநல மருத்துவப் பிரிவும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

இதற்கான பயிற்சி வகுப்புகள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மருத்துவ ஊழியர்களில் இருந்து தெரிவு செய்யப் பட்ட பத்து ஊழியாகள் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டுள்ளார்கள். இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை தாதிய மேற்பார்வையாளர் எஸ்.இராஜேந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்தநிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி எஸ். ஜெயக்குமரன் உளநல வைத்திய நிபுணர் எஸ்.சிவயோகன் ஆகியோர் கலந்து கொண்டு உரிய வகுப்புகளை நெறிப்படுத்தினார்கள்.

இந்த நடவடிக்கை தென் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் புகைத்தல், மதுபானம், போதைப் பொருள் மற்றும் குறிப்பிட்ட மருத்துவம் சம்பந்தமான விவரங்களை மையப்படுத்திய சேவை இடம்பெறுகின்றது. எனினும் வடக்கு, கிழக்கில் இத்தகைய இணையவழி வைத்திய சேவைகள் இடம் பெறாத நிலையில் முதல் தடவையாக இத்தகைய பயிற்சியை வழங்கி இணைய வழி வைத்திய சேவை மூலம் யாழ். குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரிய மருத்துவ ஆலோசனைகளை நோயாளர்கள் பெற முடியும். (வ-86)

## 93ஆவது சுதேசிகள் திருநாள் அரியாலையில் நிகழ்வுகள்

கொழும்புத்துறை, ஏப்.11

அரியாலையில் 93ஆவது சுதேசிகள் திருநாள் நிகழ்வுகள் இன்று தொடக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை மூன்று தினங்கள் கோலாகலமாக நடைபெறவுள்ளது. இதில் கலாசார விழா, விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

இன்று இரவு 7 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விஸ்வநாதன் அரங்கில் இ.சடகோபன் தலைமையில் நடைபெறும்கலாசார விழாவில் பிரமத விருந்தினராக எந்திரி வே.இரகுநாதன் கலந்து கொள்வார்.

நாட்டுப் பாடல், கிராமிய சம்பாசணை, பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள், வீடும் தொலைக்காட்சியும் தாளலயம், பூதத் தம்பி இசைநாடகம் என்பன இடம்பெறும்.

நாளை காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கான வீதியோட்டம், ஆண்கள், பெண்களுக்கான சைக்கிளோட்டம் என்பன அரியாலை கனகரத்தினம் சந்தியில் ஆரம்பமாகும். இன்று இரவு 7 மணிக்கு வடமாகாண ரீதியில் நடத்தப் பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி மின்னொளியில் அரியாலை அருணோதயா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

புதுவருடப் பிறப்பன்று பி.ப. 1.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரையும் சிறப்பு விருந்தினராக முன்னாள் அகில இலங்கை விளையாட்டு வீராங்கனை திருமதி பிரபாவதி கமலநாதனும் கலந்து கொள்வர்.

அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் இரவு 7 மணிக்கு நடைபெறும் கலை நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் கலந்து கொள்வர். (வ-135)

## மாணவர்களிடையே விவசாயப் போட்டிகள்

பருத்தித்துறை,ஏப்.11

பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் விவசாயப் பண்ணைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மஹிந்த சிந்தனையின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் தேசிய விவசாய வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள பத்தாயிரம் பாடசாலைகளில் வினைத்திறன் மிக்க பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும், விவசாய பொருளாதார நடவடிக்கையில் மாணவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பாடசாலைகளுக்கிடையே ''மாணவ சக்தியுடன் பொன்னான விளைச்சல்'' என்ற தொனிப் பொருளில் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டி வலயமட்டம், மாகாண மட்டம், தேசியமட்டங்களில் நடத்தப்படவுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. (ம-190)

### மணமகள் தேவை

இந்தியாவில் பிரபல தொழிலதிபராகவுள்ள லக்கினத் தில் 8 புள்ளி, 3சுற்று, 46பாவம் கொண்ட அழகிய உயர்குடி மணமகனுக்கு பெற்றோர் 35 வயதுக்குட் பட்ட அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 075 0700185

### காணி விற்பனைக்கு

வவுனியா, மதவு வைத்த குளத்தில் தண்ணீர் வசதியுடைய வீட்டுடன் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0774107900, 0750401024

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 திருவோணம், 7 இல் செவ்வாய் 771/4 கிரக பாவமுடைய பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:-0752432112


COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No. 113, ... Tel.: 021-222 4403

நெல்லியடி M.M.V. வீதி ... Tel. : 021-226 2470

சாவகச்சேரி No. 1... Tel. : 021-227 0243

சுன்னாகம் KKS வீதி, ... NSB ... Tel. :021-224 1970


## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா தேவதாஸ் (சறோ)



கரம்பன் தெற்கினைப், பிறப்பிடமாகவும், சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா தேவதாஸ் (08.04.2012) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - லூட்ஸ்மேரிப் பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் ம.யோ.அரசரட்ணம் - ஞானப்பு அரசரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஜோசப் தேவதாஸின் (சந்திரன் - ஓய்வு பெற்ற ஆய்வு கூட உதவியாளர் - யாழ் மத்திய கல்லூரி) அன்புமனைவியும் T.டனியலா துஸ்யந்தி, A.J கீதாஞ்சலி ஆகியோரின் அருமைத்தாயும் அன்ரன் ஜெயராஜ் இன் அன்புமாமியும் கிறிஸ்ரிகாவின் அருமைப் பேர்த்தியும் M.F. சேவியர், டேய்சி அன்னமலர், Dr.ம.யேசுதாசன், M. கொன்சால்வே (பாலன்), மரியராஜேஸ்வரி (ராஜி), தோமஸ்றெஜி, அமலதாஸ், மனோகரன், காலஞ்சென்ற மேரிபற்றிமா, சறோ, றோகினி, சாந்தி,கிறிஸ்ரி, லிசி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் (11.04.2012) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் இடம் பெற்று பின்னர் பூதவுடல் கரம்பன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

43, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

தகவல்:
M.J.தேவதாஸ் (கணவர்)
கீதாஞ்சலி அன்ரன் ஜெயராஜ் (மகள்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
25★12★1937

மறைவு
12★03★2012



### அமரர் பொன்னம்பலம் இராசையா (இராசலிங்கம்)

(ஓய்வுபெற்ற உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)

கடந்த (12.03.2012) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.04.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

உடுவில் கிழக்கு,
கற்பக பிள்ளையார் கோயிலடி,
உடுவில். (16662) (45-6-7)

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 ★ 03 ★ 1941

மறைவு 24 ★ 03 ★ 2011

### அமரர் முத்துச்சாமி சிற்றம்பலம்

திதி : சஷ்டி (11.04.2012)

அப்பா எங்கள் ஆசை நிறைந்த அப்பா
உங்கள் கடமைகள் சரிவரச் செய்தீர் - இன்று
உங்கள் பிரிவை ஆற்றாது ஏங்கித் தவிக்கின்றோம்
காலத்தின் கட்டளைக்காக - நீங்கள்
கடவுள் அடிசேர்ந்தீரோ - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி


புத்தூர் மேற்கு, புத்தூர்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பண்டக் கொள்வனவில் அவதானமாக செயற்படுங்கள்

## பண்டிகை காலத்தை முன்னிட்டு சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வேண்டுகோள்



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

**பண்டிகைக் காலம் தொடங்கியுள்ளதால் இலங்கை முழுவதிலும் உணவுப் பண்டங்களின் தரத்தை சோதனையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன**

பண்டிகை காலத்தில் கொள்வனவு செய்யப்படும் உணவுப் பண்டங்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் நுகர்வோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பண்டிகை காலம் தொடங்கியுள்ளதால் இலங்கை முழுவதிலும் உணவுப் பண்டங்களின் தரத்தை சோதனையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அண்மையில் இடம் பெற்ற சுற்றி வளைப்புக்களின்போது பாவனைக்குப் பொருத்தமற்ற காலாவதியான பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. எனவே உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்யும் போது காலாவதியாகும் தினம் மற்றும் உற்பத்தி செய்யப்படும் தினம், தரச்சான்றிதழ் போன்றன தொடர்பாக அவதானம் செலுத்தும்படி அந்தச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந)

# விசா இன்றி வ க்கு, கிழக்கில் 500 க்கும் அதிக இந்தியர்கள்

விசா இன்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வந்து பல்வேறு துறைசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் 500 க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தொடர்பில் அந்த மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்திய நபர்கள் மூவர் வவுனியா மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களிலிருந்து கைது செய்யப்பட்டனர். இதையடுத்தே மேற்படி தகவல் வெளியாகியுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். உல்லாசப் பயண விசாவில் வரும் பெரும் எண்ணிக்கையான இந்தியர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வர்த்தகத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். விசா காலாவதியான பின்னரும் தங்கியிருக்கின்றனர் என்று நீண்டகாலமாகவே பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# கையுறைக் கொள்வனவு நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்

சத்திர சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தும் கையுறைக் கொள்வனவில் நிதி மோசடி இடம் பெற்றுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை நிதியமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில், வைத்தியசாலைகள் மட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சத்திர சிகிச்சைக் கையுறைகளின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளையும் நிதியமைச்சு முன்னெடுத்துள்ளது.

சத்திர சிகிச்சைக் கையுறைகளை அரசு வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்குரிய டெண்டரைப் பொறுப்பெடுத்த நிறுவனம் இதனை உரிய கால வேளையில் வழங்குவதற்குத் தவறியுள்ளதால் தேவைப்படும் சத்திர சிகிச்சை கையுறைகளைப் பிரதேச மட்டத்திலேயே கொள்வனவு செய்து கொள்ளுமாறு அரச வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் கையுறைக் கொள்வனவில் நிதி மோசடி இடம் பெற்றிருப்பதாகச் சுகாதார அமைச்சுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு, நிதியமைச்சிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ந)

# தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

நெடுந்தீவு மேற்கு, நெழுவினி சித்திவிநாயகருக்குப் புதிதாகக் கட்டப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

(வ-7)

# கோழி, முட்டை இறக்குமதி புத்தாண்டு காலத்தில் நிறுத்தம்

புத்தாண்டு காலத்தில் கோழி மற்றும் முட்டை வகைகளை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லையென அரசு அறிவித்துள்ளது.

கோழிப்பண்ணையாளர்கள் பண்டிகை காலத்தில் விலைகளை அதிகரிப்பதில்லை என்பதற்கு இணக்கம் தெரிவித்தமையினால் வெளிநாடுகளிலிருந்து கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை இறக்குமதி செய்து விலை கட்டுப்பாட்டைப் பேண வேண்டிய தேவை ஏற்படவில்லையென கால் நடை வளர்ப்பு மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கோழி இறைச்சி மற்றும் பண்ணைப் பொருள்களைக் குறைந்த விலையில் நுகர்வோர் பெற்றுக் கொள்ள கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று இந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குமார டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நுகர்வோருக்கு நிவாரண விலையில் மீன்களை விற்பனை செய்வதற்குக் கடற்றொழில் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

பிரதான நகரங்களிலுள்ள கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் மூலம் இவ்வாறு மீன்கள் நிவாரண விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன.

அத்துடன் இலங்கையில் தயாரிக்கப்படும் ரின் மீன்களும் இந்த விற்பனை நிலையங்களின் ஊடாக விற்பனை செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களுக்கு 50 ஆயிரம் ரின் மீன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந)


## கரைதுறைப்பற்று பிரதேச சபை முல்லைத்தீவு

## பொதுச்சந்தை, கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2012

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் செம்மலை உபஅலுவலக அதிகார எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை, கடைகள் 2012 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு / வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 11.04.2012 தொடக்கம் 24.04.2012 பிற்பகல் 03.00 மணி வரை.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி : 25.04.2012 முற்பகல் 10.00 மணி வரை.
கேள்வி திறக்கப்படும் திகதி : 25.04.2012 முற்பகல் 11.00 மணிக்கு

01. கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக் கூடியவாறு இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச , கிராமசேவையாளரின் வதிவிடச்சான்றிதழ், கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேச சபை தலைமையலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்தினுள் பெற்றுக் கொள்ளவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றத்தினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
05. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
07. பொதுச்சந்தை குத்தகைக்கு பெறுவதற்கு தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியினையும் கடை வாடகைக்கு பெறுவதற்கு தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கடையின் வருடாந்த வாடகையில் 1/3 பகுதியினையும் பாதுகாப்பு பிணையாக 27.04.2012 க்கு முன்னர் செலுத்தி பிரதேசசபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
08. பொதுச்சந்தை, கடைகள் குத்தகைக்கு/ வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும்.
09. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை பிரதேசசபை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

பொதுச்சந்தைக்கான கேள்வி அட்டவணை

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | செம்மலை பொதுச்சந்தை | 5000.00 | 1000.00 | 20000.00 |

சந்தைக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | ஆகக்குறைந்த மாத வாடகை |
|---|---|---|---|---|
| 01 | செம்மலை பொதுச்சந்தை கடை இல- 01 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 02 | செம்மலை பொதுச்சந்தை கடை இல- 02 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 03 | செம்மலை பொதுச்சந்தை கடை இல- 03 | 1000.00 | 500.00 | 2000.00 |
| 04 | செம்மலை பொதுச்சந்தை கடை இல- 04 | 1000.00 | 500.00 | 2000.00 |

கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.
11.04.2012

க.மோகனராஜகுமார்
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை.

(C755)(2-7-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

என்றும் அன்பும் பண்பும் பாசமும் வாழ்வும் தந்த
எம் இனிய தெய்வமே
எம்மை விட்டு நீர் சென்றாலும்
எம் மனதை விட்டு நீர் விலகவில்லையே
நாம் உங்களைத் தெய்வமாகப் பெற்றதற்கு
நாம் என்ன தவம் செய்தோமோ!

அரவணைப்பும் பாசமும் அன்பும் தந்த அப்பாவே!
உங்களின் சிரிப்பும், கதையும்
இன்றும் எங்கள் மனதில் காண்கின்றோம்
நீங்கள் சென்று முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
நீங்களே எங்களுக்கு என்றும் உலகம்
எப்போதும் எம் இதயக் கோயிலில்
உங்களை நாம் இருத்திப் பூசிப்போம்.

கடந்த (13.03.2012) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (12.04.2012) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நடைபெறும் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)



அமரர்
**செல்லப்பா சுப்பிரமணியம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

-குடும்பத்தினர்.

இல.33, மாகியப்புல வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.11.1928 | 13.03.2012 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு தாதியக் கல்லூரிகளுக்கு மேலும் 450 மாணவர்கள் இணைக்கப்படுவர்

வடக்கு மற்றும் கிழக்கு மகாணங்களிலுள்ள தாதியப்பயிற்சிக் கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மாணவர்கள் 250 பேருக்கு மேலதிகமாக மேலும் 450 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னார் நேர்முகத் தேர்வுகளுக்குத் தோற்றியுள்ள விண்ணப்பதாரிகள் தரப்பிலிருந்து இந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு நிலவும் கடும் பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டு அமைச்சு இந்தத் தீர்மானத்தை மேற் கொண்டுள்ளது.

மேலும் அம்பாறை, மட்டக் களப்பு , வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தாதிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு தற்போது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மாணவர்கள் 250 பேருக்கு மேலதிகமாகவே இந்த 450 பேர் பயிற்சிகளுக்கு உள்வாங்கப்படவுள்ளனர். இதற்கான வசதி வாய்ப்புக்கள் கல்லூரிகளில் நிலவுவதாக அவற்றின் அதிகாரிகளால் சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சு மேலதிக விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓராம் ஆண்டு நினைவலை

அமரர்
சோமசுந்தரம் விஜயரட்ணம்
(ரத்தினா)



பிறப்பு 06 ★ 05 ★ 1979
இறப்பு 22 ★ 04 ★ 2011

குடும்ப ஒளிவிளக்கே - எம்
வாழ்விற்கு வழிகாட்டிய தெய்வமே
மனதில் வருத்தம் ஆறலையே
ஆண்டு ஒன்று உருண்டோடிவிட்டது இன்னும்
கண்களில் கண்ணீர் ஓயவில்லையே - எமக்கு
எத்தனை உறவுகள் இருந்தாலும்
ஈடாகுமா ? உங்கள் அன்புக்கு - நாம்
மூன்று முத்துக்களானோமே
தேம்புகின்றோம் ஐயகோ ஐயகோ - நாங்கள்
என்னதான் பாவம் செய்தோமே
இறைவா, இறைவா, இறைவா
எங்கள் அப்பா ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக

இரத்தினா ஸ்ரோர்ஸ்
உப்புக்கிணற்றடி, நவிண்டில்
077 9499272

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி முத்தையா (நயினாதீவு)



நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கண்மணி முத்தையா நேற்றுமுன் தினம் (09.04.2012) திங்கட் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் (C.W.E ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு - அபிராமி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னம்மா, நல்லையா, நாகேசு, சிவக்கொழுந்து, பொன்னம்மா மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பையா, சின்னத்துரை, இராசரெத்தினம், இராசமணி, சண்முகம் மற்றும் பொன்னையா, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுப்பிரமணியம் - பகவதி, முத்தையா - ஞானேஸ்வரி, கோபாலபிள்ளை - புஷ்பராணி தம்பதியர்களின் சம்மந்தியும், தனப்பிரபாலன், சியாமளாதேவி, விமலாதேவி, வனஜா ஆகியோரின் அன்புத் தாயும், மீனாம்பிகை, மகாலிங்கம், காங்கேசன், சிறீபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியும், மணிவண்ணன், ஜனனி, முகுந்தன், கோகுலதாசன், வேணுகானன், சுதர்சன், சதீசன், விந்துஜா, மேனகா,வினோஜன், ஜெயகௌரி, அனுஷா, சாவித்திரி, பீலிக்ஸ், பிரதீபன், சிவதாரிணி, விஜிதா ஆகியோரின் பாட்டியும், தஷானி, நிலா, கணன், அபிகா, சஞ்சய், நியானா, நிந்துஜன், மாவின், லெவின், மீரா, அனுஷா, அகிலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2012) புதன்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நயினாதீவு சல்லிப்பரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

புதுவருடத்தை முன்னிட்டு.......
SPORTS WORLD
FOR QUALITY SPORTS GOODS
யாழ்.நகரில் , பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான Jersey, T.Shirt என்பவற்றை தயாரித்து வழங்குவதில் முன்னணி வகிப்பவர்கள்
ஸ்போட்ஸ் வேள்ட்
Cricket, Foot ball; Jersey, Bottom
Discount Sale 15%
மென்பந்துதுடுப்பு (Sofball bat) 600/= 450/= (13.04.12 வரை)
AB circle
உடற் பயிற்சி உபகரணங்கள்
Discount Sale 10%
Orbitrek
213,1/3 Kasthuriyar Road, Jaffna.
(Near Rajah Theater) Tel: 0773604830
2000 ரூபாவுக்கு மேல் பொருள்கள் வாங்குவோருக்கு Cap/ Purse இலவசம்

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
அதிரடி விலையில்!!!
pavilion g6 — core i5 2.4GHZ, 4GB DRR3, 500 GB, DVD/RW+DL, WI-FI/CR/BT, 15.6"LED, DOS — 71500/=
Hp 630 — core i3 2.2GHZ, 2GB DRR3, 320 GB, DVD/RW+DL, WI-FI/CR/BT, 15.6"LED, DOS — 64500/=
Toshiba C640 — core P6200 2.13GHz, 2GB DRR3, 320 GB, DVD/RW+DL, WI-FI/CR/BT, 14.1"LED, DOS — 53250/=
Intel i3 3.0GHZ, biostar H612, 2GB DDR3, 500 GB, DVD R/W, 19"LED MONITOR, ATX Casing, Key Borad, Mouse USB, M/M Speaker, Web cam — 57500/= — com 01
Hp probook 4530s — CORE I3 2.2GHz, 4GB DRR3, 500 GB, DVD/RW+DL, WI-FI/CR/BT, 15.6"LED, WIN 7 H/P — 74500/=
Hp 430 — CORE I3 2.4GHz, 2GB DRR3, 500 GB, DVD/RW+DL, WI-FI/CR/BT, 14.1"LED, DOS — 63000/=
Toshiba mini — ATOM N455 1.6GHz, 2GB DRR3, 300 GB, DVD/RW+DL, WI-FI/CR/BT, 14.1"LED, DOS — 41500/=
Intel D/C 3.0GHz, biostar G41, 2GB DDR3, 300 GB, 19"LED MONITOR, DVD R/W, ATX Casing, Key Borad, Mouse USB, M/M Speaker, web cam — 45650/= — com03
Intel ATOM D425, 2GB DDR3, 300 GB, 19"LED MONITOR, ATX Casing, Key Borad, Mouse USB, M/M Speaker, web cam — 39750/= — com02
free:panda antivirus 2012
SDS COMPUTER SERVICE
NO.42/1, College RD
oppsite of j/hidu college
Our service Sales ,Repair, Maintenance & ect
Hotline:0777874705
Tell:021 5100105,222 4500

**கடை வாடகைக்குண்டு**
இல.08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வின்சர் சந்தி அருகில்) அமைந்த 35''x 19'' சதுரஅடி கொண்ட மாபிள் பதித்த கடை வாடகைக் குண்டு.
தொடர்பு : 077 1937495

**நாஹா மருத்துவ நிலையம்**
அதிகளவு உடல்வேதனையைத்தரும் வாதம், முட்டு மூச்சுக்கஷ்ரத்தை ஏற்படுத்தும் வயிறு வீக்கம், அல்சர், தீராதபுண்கள், குழந்தையில்லா கர்ப்பப்பை நோய்க்கான சாதனைபுரியும் மருந் தியல்
தினமும் : 8.30 - 2 p.m. T.P : 077 3212740
வங்கி முன் லேன்,
சத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மாவிட்டபுரம்

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்.பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தருக்கு 3 அறைகளுடன் கூடிய வீடு, கொக்குவில், கோண்டாவில் மற்றும் கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 077 9590061

**தவறிவிட்டது**
யாழ்ப்பாணத்துக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் அன்ரன் கோபிராஜ் சீனிப்பந்தல் இளவாலையைச் சேர்ந்தவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.
0774837995, 0775717324

**மணமகள் தேவை**
Netherland Citizen யாழ்.இந்து 1981 உத்தரம் நட்சத்திரம் உயரம் 5.7 Msc.Computer Engineer ல/ராகு, ல/செ. 7 இல் கேது (பாவம் 38)
தொடர்பு:- ksanush@hotmail.com
0774153487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளாலி புனித தோமையார் ஆலய வருடாந்த திருவிழா 15.04.2012

17 ஆண்டுகளுக்குப் பின்பு கிளாலி புனித. தோமையார் ஆலய திருவிழா இம்முறை அதே சொந்த ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14 ஆம் திகதி சனி மாலை நற்கருணை விழா வும் 15 ஆம் திகதி ஞாயிறு காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

புனிதரின் ஆசீர்பெற அனைவரையும்
அழைக்கின்றோம்

பங்குத்தந்தை, பங்குமக்கள்
கிளாலி

(16598)(9-7-8)

## தவறிவிட்டது

இணுவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் வகிந்தன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (863623162V) 01.04.2012 அன்று இணுவில் சந்திக்கும் பாலாவோடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

தொடர்புகளுக்கு - 0771381453

## அலுவலக சுத்திகரிப்பாளர் தேவை

காப்புறுதி நிறுவனம் யாழ்ப்பாணக்கிளை ஒன்றுக்கு 25-35 வயதுக்கு உட்பட்ட பெண் ஊழியர் ஒருவர் தேவை. சம்பளம் மாதாந்தம் 10,000/=

தொடர்பு : 077 3744215

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

எமது சங்கத்திலுள்ள வெற்றுச் சாக்கு, பை என்பன கேள்விப் பத்திரம்மூலம் விற்பனை செய்யப் படவுள்ளன. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் அலுவலக நேரத் தில் வெற்றுப் பொருள்களைப் பார்வையிட்டு கேள்விப்பத்திரங்களை 25.04.2012 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

10.04.2012

பொதுமுகாமையாளர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

# அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை - நல்லூர்
### உப அலுவலகம்
### ஆதனப் பெயர் மாற்றம்
### ஆதன இலக்கம் - 136 பகுதி, இராமலிங்கம் வீதி, வட்டாரம் - 08

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 08, இராமலிங்கம் வீதியில் உள்ள 136 எனும் இலக்க ஆதனம் இராசையா குத்தகைக்காரர் - நடராசா எனும் பெயரிலேயே எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இவ் ஆதனத்தின் முன்னைய ஆவணங்கள் 1987 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக தொலைந்துவிட்டதென்றும் யோகரட்ணம் கைம்பெண் புஸ்பராணி என்பவர் உறுதி இலக்கம் 12168/08.03.2012 மூலம் வெளிப்படுத்தி 1 பரப்பும் 16.9 குளியையும் உடைய ஆதனத்தை யோகரட்ணம் யோககேந்திரகுமார் என்பவரிற்கு நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளார். தற்போது யோகரட்ணம் யோகேந்திரகுமார் தனது பெயரிற்கு ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் மேற்கொள்ள விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோகரட்ணம் யோகேந்திரகுமார் என்பவரிற்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ப. வசந்தகுமார்,
தலைவர், நல்லூர் பிரதேச சபை
11.04.2012

# மரணஅறிவித்தல்

## ஞானசேகரம் சரஸ்வதி

பளையைப்பிறப்பிடமாகவும் புலோலியைவசிப்பிடமாகவும் கொண்ட ஞானசேகரம் சரஸ்வதி (10.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஞானசேகரம் அவர்களின் அன்பு மனைவியும் கண்மணி, தங்கம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கருணேந்திரன் மற்றும் சாந்தநாயகி, சாரதாதேவி, சந்திராதேவி, சறோஜாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, அரசரத்தினம், றஞ்சனாதேவி மற்றும் சோமசுந்தரம், சற்குணம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரகாஸ், பிரதீபன், பிரபுறாஜ், மதிவதனி, மதிறூபன், மதிறூபி, புருசோத்மன், கஞ்சுகன், வினோஜா, தீபிகா, சோபிகா, கிரிசிகா, கீர்த்திகா, அஜந்தன், பிரவீனா ஆகியோரின் பேர்த்தியும் தனபாலசிங்கம், ஜெயபாலன், ஜெகதீபன் ஆகியோரின் பேர்த்தியும் அபிஷாருதன், தர்மிளன், சங்கவி, சஸ்மிதா, லோஜஜன், பிறிக்காந், கரிகாலன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.04.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல்3 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"புற்றளை",*
*புலோலி தெற்கு, புலோலி.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை கந்தசாமி

### (உரிமையாளர்- வித்தியா ரெக்ஸ், சாவகச்சேரி)

சாவகச்சேரி, மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று முன்தினம் (09.04.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும்,பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவநேசன் (லண்டன்), சிவகுமாரன் (லண்டன்), சகிலா (பிரான்ஸ்), வித்தியா (நெதர்லாந்), பிரதிபா, நித்தியா (ஆசிரியர் - ப/ஊவா, ஹைலன்ஸ் த.ம.வித்., பண்டாரவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சினி (லண்டன்), அஜந்தி (லண்டன்), வசந்தகுமாரன் (பிரான்ஸ்), சசிகுமாரன் (நெதர்லாந்), கிருபாகரன் (டயலொக் நிறுவனம், சாவகச்சேரி கிளை), கவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சிவகாமசுந்தரி, செல்லம்மா (நெதர்லாந்), பொன்னுச்சாமி, விஸ்வலிங்கம், காலஞ்சென்ற வல்லிபுரநாதன் மற்றும் குமாரசாமி (நெதர்லாந்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிக்ஷனா, கீர்தீஸ், நதீஷா, அபூர்வா, நிருஜா, வர்ஜா, அஸ்வின், தஸ்வின், கவின், தபேஸ், நிகேஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை, வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களா வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

(14631) (2-9-6)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் (வ.து)

### பார ஊர்திகள் விற்பனைக்கான

# கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் கீழ்வரும் விவரப்படியான 02 (இரண்டு) பார ஊர்திகள் விற்பனை செய்யப்பட உள்ளன. இவற்றினை கொள்வனவு செய்ய விரும்புவோர் கூறுவிலையின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது கூறுவிலைகளை 25.04.2012ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கூறுவிலை கோரல் - பார ஊர்தி விற்பனை'' என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பார ஊர்தி இலக்கம் மாதிரி

★ **24/4556 இசுசு**

★ **24/9878 பெல்ஸ்**

குறிப்பு :

01. பார ஊர்தியின் செயற்படு தன்மையினை காரியாலய நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.
02. நேரடியாக ஒப்படைக்கப்படும் கூறுவிலைகள் தலைமைக் காரியாலயத்திலுள்ள மூடிய பெட்டியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
03. கூறுவிலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
04. மேற்படி விளம்பரமானது 01.11.2011ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் 25.11.2011ஆம் திகதி திறக்கப்பட்டு இவை மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக உள்ளமையால் அவை நிராகரிக்கப்பட்டு மீளவிளம்பரம் செய்யப்படுகிறது என்பதனை அறியத்தருகின்றோம்.

10.04.2012 — பொது முகாமையாளர்.

# கடற்றொழில் திணைக்களத்துக்கு ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஏப்.11

வடக்கு மாகாணத்திலுள்ள கடற்தொழில் திணைக்களங்களில் ஆளணிவெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளதாகத் தெரியவருகிறது. இதன் காரணமாக திணைக்களங்களின் வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையில் அதிகாரிகள் திண்டாடுவதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக கடற்றொழில் பரிசோதகர்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இவ்வாறான நிலையில் கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் மூன்றை, ஒரு அதிகாரியே மேற்பார்வை செய்யும் நிலைமை காணப்படுகிறது.

யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு 17 கடற்றொழில் பரிசோதகர்கள் தேவையான நிலையில் 7 பரிசோதகர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர். இதன் காரணமாக மூன்று பரிசோதகர் பிரிவுகளை ஒரு அதிகாரியால் மேற்பார்வை செய்யும் நிலை யாழ் மாவட்டத்தில் உள்ளதாக திணைக்கள உதவி பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களில் உள்ள கடற்றொழில் திணைக்களங்களிலும் இவ்வாறான ஆளணி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இதன் காரணமாக திணைக்களங்கள் எரிபொருள் மானியத்துக்கான பதிவு தொடக்கம் அனைத்துத் திணைக்கள சேவைகளும் உரிய நேரத்தில் நிறைவேற்றமுடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திணைக்கள ஆளனி வளங்களை பூர்த்தி செய்வதுக்கு கடற்றொழில் அமைச்சு முன்வர வேண்டும் என அதிகாரிகள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது. (03)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2012.04.16 - 2012.04.24 பி.ப. 2 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி: 2012.04.25 நண்பகல் 12 மணிவரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி: 2012.04.25 பி.ப. 2 மணிக்கு

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இடம் : தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| இல | வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|---|
| 1. | தொழிலாளர் விடுதிக்கான மின் இணைப்பு வேலைகள் | 7500.00 | 561.20 | M9/C10 மின் பொருத்து வேலைக்கான சான்றிதழ் உள்ளோர் |

மேற்குறிப்பிட்ட வேலைக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட 'இக்ராட்' தரத்துக்கு பதிவு செய்யப்படுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணத்துடன் மேலதிகமாக 2% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி ''தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும் அதன் பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் உரிய காலத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திரு. தி. பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

*2012.04.11*

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை யோகநாதன்

*(சின்னமணி)*

கடந்த (26.03.2012) திங்கட்கிழமை பிரான்சில் இறைபதமெய்திய எமது அன்புச் சகோதரனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

லாட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி தில்லைப்பிள்ளை தம்பிமுத்து



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைப்பிள்ளை தம்பிமுத்து (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சத்துருசிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் தம்பிமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), கந்தையா, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, தையல்நாயகி ஆகியோரின் மைத்துனியும் நடராசா (ஜேர்மனி), தங்கராணி, அரியராணி (ஜேர்மனி), நவரட்ணராஜா (ஜேர்மனி), நேசராணி ஆகியோரின் அன்புத் தாயும் கிருஸ்ணானந்ததேவி (ஜேர்மனி), நவரட்ணராஜா, விவேகானந்தன் (ஜேர்மனி), யசோதா (ஜேர்மனி), தனபாலசிங்கம் (சாவகச்சேரி பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியும் சிறிசசிகரன் (ஜேர்மனி), கௌரிதாசன் - பிரியதர்சினி (ஜேர்மனி), சிவானந்தன் - கௌரிதாசினி (சுவிஸ்), காலஞ்சென்ற கௌரிமாலா - கௌதீபன் (பிரான்ஸ்), கௌதமன் (காமா) - கோமதி, செந்தூரன் (ஜேர்மனி), ஜீவந்தி (ஜேர்மனி), மயூரன் (ஜேர்மனி), தர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வினித்ரா (ஜேர்மனி), சுசிபா (ஜேர்மனி), சாரங்கன் (சுவிஸ்), சாருசன் (சுவிஸ்), வினோஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2012) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி காஞ்சனா கிருஸ்ணதாசன்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காஞ்சனா கிருஸ்ணதாசன் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகநாதன் - மகேஸ்வரிதேவி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருஸ்ணதாச னின் அன்பு மனைவியும் தபேசன், கிரிறாஜ், தரணிகா ஆகியோரின் அன்புத் தாயும் யோகேஸ்வரன் (பிரான்ஸ்), யோகரஞ்சிதம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான ரஞ்சினி, ரஜனிகாந் ஆகியோரின் சகோதரியும் கலைஞானபூசனி, இராஜரட்ணம் அகியோரின் அன்புமைத்துனியும் பரமேஸ்வரன் (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), மகாலிங்கசிவம் (சுவிஸ்), மகேந்திரன் (யாழ்), கோபாலப்பிள்ளை பராசக்தி (கொழும்பு), காலஞ்சென்ற பிறைசூடி மற்றும் பரமரத்தினம் (வவுனிக்குளம்), திருநாவுக்கரசு, யோகேஸ்வரி (கனடா), சிவகுருநாதன், பவானி (கனடா) ஆகியோரின் மருமகளும் பாலசுந்தரம் மேனகராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் சரஸ்வதி (கொழும்பு) பாக்கியநாதன் இந்துராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும் வாசுகி, வடிவேலு, விவேகானந்தன் அகியோரின் மைத்தனியும் பற்குணராசா, சசிகலா, ரத்தினமலா, ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2012) புதன்கிழமை மு.ப 10.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

புளியங்கூடல் தெற்கு,
புளியங்கூடல்.

தகவல்:
கிருஸ்ணதாசன் - கணவர்
யோகரஞ்சிதம் - சகோதரி
பொ.மகேந்திரன் - மாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு புகுந்து கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். கொட்டடியில் உள்ள வீடொன்றினுள் ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் 7 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அந்த வீட்டில் முதல்நாள் மரவேலையில் ஈடுபட்டவர்கள் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கொட்டடி சீனிவாசகம் வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த சங்கிலி, காப்புகள், தோடுகள், பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இறுதியாக வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்தபொழுது அவர் விழித்துக்கொண்டு கூச்சலிட கொள்ளையர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

கொள்ளையர்கள் இருவரையும் வீட்டுக்காரர் துரத்திச் சென்றபோது தமது பாதணிகளையும் தொப்பி ஒன்றையும் தவற விட்டுத் தப்பிச் சென்று விட்டனர்.

மின்னொளியில் திருடன் ஒருவனை இனங்கண்டுகொண்ட வயோதிபப் பெண் முதல்நாள் தமது வீட்டில் மரவேலை செய்த ஒருவர் மீது சந்தேகம் இருப்பதாகப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அந்தத் தகவலை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் இருவரும் கொட்டடியை அண்மித்துள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4)


## நெஞ்சை நெருடும் நினைவலைகள்

தோற்றம் 25 ★ 12 ★ 1949

மறைவு 15 ★ 03 ★ 2012



அமரர் இராசரத்தினம் அரசநாயகம்
(பயில்வான்)

ஒரு மாத காலமாகியும் உங்கள்
பசுமையான நினைவுகள் எம்
நெஞ்சை விட்டு அகலவில்லை
நெஞ்சம் ஆறுதில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

வளாக வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

சகோதர குடும்பத்தினர்.

(16596) (4ப-0-1)



## டுபாயில் உடனடி வேலைவாய்ப்பு
## UNITED ARAB EMIRATES (UAE)

டுபாயில் உள்ள பிரபல கம்பனிக்கு கீழ் உள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றனர். **இரண்டு வாரங்களில் பயணம்**

| | | | |
|---|---|---|---|
| CLEANERS | MALE | 100 Nos. | 800 + 200 AED |
| CLEANERS | FEMALE | 20 Nos. | 800 + 200 AED |
| SECURITY GUARD | | 50 Nos. | 2000 + 770 AED |

SLBFE Charges : 72,552.00 LKR

Terms & Conditions

இலவச தங்குமிட வசதி, போக்குவரத்து, ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கும் சென்றுவர விமான டிக்கெட்டுக்கள், வைத்திய உதவிகள், காப்புறுதி ஆகியவை UAE கம்பனிச் சட்டத்திற்கமைய கம்பனியால் வழங்கப்படும், வேலைநேரம் - 8 மணித்தியாலம் + 3hrs OT

நேர்முகப் பரீட்சைகள் 2012 ஏப்ரல்
16, 17, 18, 19, 20, 21ம் திகதிகளில் நடைபெறும்

நேர்முக பரீட்சைக்கு வரும்போது உங்களின் பாஸ்போட் மற்றும் 08 பாஸ்போட் அளவு புகைப்பட பிரதிகள் (White Background) தவறாமல் கொண்டுவரவும்.

AL/Advt/2491/20,21/12

AL - AZAB Travels (Pvt) Ltd
No. 67, 1st Floor, Pradeepa Mawatha, Colombo 10.
(Opposite to the Maligawatte Police Station)
Tele : 071 988 5454 / 011 266 9995
E-mail : alazabtravels@gmail.com

L.L.No. 2491

JEBZ


# வடமராட்சியில் இலவச தொடுகைச் சிகிச்சை முகாம்

மும்பையைச் சேர்ந்த பிரபல தொடுகைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சசிகாந்த் சேத் வடமராட்சியில் இலவச தொடுகைச் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவுள்ளார்.

டாக்டர் சசிகாந்த் சேத்திடம் இலவச தொடுகைச் சிகிச்சை பெற விரும்புவோர் எஸ். ரவீந்திரன், கிராம சேவக பிள்ளையார் கோயில் வீதி, தும்பளை, பருத்தித்துறை என்ற முகவரியிலோ அல்லது, 0777114332, 0777276090 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பை ஏற்படுத்தி சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


## அறிவித்தல்
### நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம்

### ஆதனப் பெயர்மாற்றம்

ஆதன இலக்கம் 06, சைவப்பாடசாலை ஒழுங்கை, வட்டாரம் - 08

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் - 08, சைவப்பாடசாலை ஒழுங்கையில் உள்ள 06 ஆம் இலக்க ஆதனம் தட்சணாமூர்த்தி நாகேஸ்வரி என்பவரின் பெயரிலேயே எமது ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனமானது 1961.03.29 ஆம் திகதிய 6635 ஆம் இலக்க உறுதி மூலம் தெட்சணாமூர்த்தி நாகேஸ்வரி என்பவருக்குச் சீதனமாகக் கிடைக்கப் பெற்றதாகும். குறித்த தட்சணாமூர்த்தி நகேஸ்வரி மற்றும் இவர்களது மகள் விஸ்ணுபாலா என்போர் அடியற்று இறக்க த.நாகேஸ்வரியின் ஒரே சகோதரனான கனகலிங்கம் என்பவருக்கு வந்தடைந்ததென்றும் அவர் 03 பரப்பும் 3.5 குளியையும் உடைய இவ்வாதனத்தை 1991.07.01 ஆம் திகதிய 3836 ஆம் இலக்க உறுதி மூலம் அவரின் மனைவியான கமலாதேவி என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் உறுதி இலக்கம் 953/01.02.2005 மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வாதனத்தை கனகலிங்கம் கைம்பெண் கமலாதேவி 03.09.2011 ஆம் திகதிய 2876 ஆம் இலக்க உறுதி மூலம் தனது சகோதரியான கனகநாயகம் பெண் ஜெயதேவிக்கு நன்கொடையாக வழங்கி ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்கள்.

இந்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கனகநாயகம் பெண் ஜெயதேவி என்பவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ப.வசந்தகுமார் தலைவர், நல்லூர் பிரதேச சபை. 11.04.2012



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
**தம்பிராசா விக்னேஸ்வரன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, அச்செழு.
ஆசிரியர் கழகம்

(c/767) (45.6.7)


## அரசாங்க அறிவித்தல்
### யாழ்.மாவட்டச் செயலகம்

காகிதாதிகள், எழுதுபொருள்கள்,
ஏனையவை கொள்வனவு செய்வதற்கான
**கேள்வி விலை கோரல் - 2012**

மாவட்டச் செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காகக் காகிதாதிகள், எழுதுபொருள்கள், ஏனைய பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இச் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்திற் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்பத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைத் தலைவர், மாவட்ட செயலகப் பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2012 ஆம் ஆண்டுக்கான காகிதாதிகள் வழங்கலுக்கான கூறுவிலைகள்" எனக் குறிப்பிட்டு 27.04.2012 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்குத் திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம். விண்ணப்பப் படிவங்களை அலுவலக நாள்களில்அலுவலக நேரத்தில் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலரும்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(ஜி/754) (2-7-6)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பஸ் நடத்துநர் மீது இராணுவம்

# மீண்டும் தாக்குதல்

*முல்லைத்தீவு, ஏப். 11*

***முல்லைத்தீவில் இருந்து கொக்கிளாய் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் நடத்துநருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தால் நடத்துநரை இராணுவத்தினர் தாக்கினர் என்று பயணிகள் தெரிவித்தனர்.***

முல்லைத்தீவு கச்சேரியடியில் இருந்து சீருடையுடன் ஏறிய 5 இராணுவத்தினரை ரிக்கெட் பெறுமாறு நடத்துநர் கேட்டுள்ளார். அதற்கு மறுத்த இராணுவத்தினர் தம்மால் ரிக்கெட் பெற முடியாது; பெறவேண்டிய அவசியமும் இல்லை எனக் கூறியுள்ளனர். எனினும் தமக்கு கிடைக்கப்பெற்ற உத்தரவின்படி பஸ்ஸில் பயணிக்கும் அனைவரும் ரிக்கெட் பெற வேண்டியது அவசியம் என நடத்துநர் வலியுறுத்த ஒருவாறு ரிக்கெட்டை பெற்ற இராணுவத்தினர் உன்னை 14 ஆம் கட்டைப் பகுதியில் பார்த்துக்கொள்கிறோம் என மிரட்டி உள்ளனர்.

அது போலவே 13 ஆம் கட்டைப் பகுதியில் தாம் இறங்கப் போவதாக தெரிவித்த இராணுவத்தினர் நடத்துநரை கீழே இழுத்து கன்னத்தில் அறைந்துள்ளனர். அதன் பின்னர் அருகில் இருந்த காட்டுக்குள் சென்று மறைந்து விட்டனர்.

அருகில் இருந்த இராணுவ காவலரணில் தகவல் கொடுக்கப்பட்டது. அதையடுத்து அங்கு வந்த இராணுவத்தினர் காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தி 5 இராணுவத்தினரையும் பிடித்து வந்தனர். பின்னர் நடத்துநரையும் சாரதியையும் சில பொது மக்களையும் அழைத்து இவர்கள்தான் நடத்துநரை தாக்கினரா எனக் கேட்டனர் அவர்களுக்கு தாம் தகுந்த தண்டனை வழங்குவார்கள் எனவும் தெரிவித்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தால் குறித்த பஸ்ஸில் பயணித்த 50 இற்கு மேற்பட்ட பயணிகள் 2 மணி நேரம் நடுவழியில் காத்திருக்க வேண்டி நேரிட்டது.

கடந்த மாதம் இதேயிடத்தில் கொக்கிளாய் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸின் சாரதி ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். இதனால் 60 இற்கு மேற்பட்ட பயணிகள் பசியுடன் நீண்ட நேரம் காத்திருந்த அவலச் சம்பவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (10-426)

## உடைக்கப்பட்ட சிலை பேர்டன் பவல் அல்ல



*மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை உடைத்து சேதமாக்கப்பட்டது சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேர்டன் பவலின் உருவச்சிலை இல்லை என்று சாரணர் இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் நிர்வாக பிரிவுக்கான உதவி மாவட்ட ஆணையாளர் ஏ.குணரெட்ணம் தெரிவித்தார்.*

*இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:*

*மட்டக்களப்பு நகரில் சாரணர் தந்தை பேர்டன் பவலின் உருவச்சிலை சேதமாக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் எமக்கு கவலையளிப்பதாக உள்ளது. இந்த சிலை பேடன் பவலின் உருவச்சிலைஇல்லை.*

*குறித்த சிலை மட்டக்களப்பு மாவட்டத்தில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 80ஆவது ஆண்டு நிறைவை அடையாளப்படுத்தி மட்டக்களப்பு நகரில் சீருடை அணிந்த சாரண மாணவரின் உருவச் சிலையாகும். குறித்த சாரணர் மாணவரின் உருவச்சிலை 1990 ஆம் ஆண்டு அப்போது மாவட்ட சாரணர் இயக்கத்தின் தலைவராக பதவி வகித்த ஓய்வுபெற்ற அரச அதிபர் ஏ.கே.பத்மநாதனினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.*

*மட்டக்களப்பு நகரில் சிலைகள் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியான செய்திகளில் சாரணர் இயக்கத்தின் தந்தை பேர்டன் பவலின் உருவச் சிலையும் சேதமாக்கப்பட்டதாக கூறப்பட்டமை கவலையளிக்கின்றது.*

*மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லாரி மற்றும் மெதடிஸ்த்த கல்லூரி சாரணர் மாணவர்களினால் குறித்த சிலை நிறுவப்பட்டது. இந்தச்சிலை உடைப்பு சம்பவம் இடம்பெற்ற போது இலங்கையில் சாரணர் இயக்கம் ஆரம்பக்கப்பட்டு நூற்றாண்டு நிகழ்வும் 29ஆவது ஆசிய பசுபிக் ஜம்போரியம் தம்புள்ள நகரில் நடைபெற்றக்கொண்டிருந்தது.*

*இந்தநிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த போது சாரணர் இயக்க அடையாளச் சின்னம் சேதப்படுத்தப்பட்டமை சர்வதேச ரீதியிலும் சாரணர்களை அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)*

## மன்னாரில் வீதி விபத்து அதிகரிப்பு

# கண்காணிப்பு நடவடிக்கையில் போக்குவரத்துப் பொலிஸார்

மன்னார்,ஏப்.11

மன்னாரில் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வாகன விபத்துக்களைத் தொடர்ந்து வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கடும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு சகல இடங்களிலும் தமது சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மோட்டார் சைக்கிள் உட்பட சகல வாகனங்களையும் செலுத்துவோர் கட்டுப்பாட்டுடன் தமது வாகனங்களைச் செலுத்துகின்றனர். மன்னார் மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளதோடு தென்பகுதி வாகனங்களும் மன்னாருக்கு வந்து செல்கின்றன.

இதனால் மன்னாரில் வாகனங்கள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் நாளாந்தம் விபத்துக்களும், வாகன நெரிசல்களும் ஏற்படுகின்றன. இந்த நிலையில் மன்னாரில் என்றும் இல்லாதவாறு தற்போது வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் அதிகளவில் சேவையில் ஈடுபட்டுள்ளதோடு சகல இடங்களிலும் வாகனங்களின் அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன. சட்டத்துக்குப் புறம்பான வகையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள்மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் தற்போது மன்னாரில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்துவோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளதோடு இடைஞ்சல்கள் இன்றிப் போக்குவரத்துக்கள் இடம் பெறுகின்றன. (க-12)

## புதுவருட ஒன்றுகூடல் இது....



*சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான புது வருட ஒன்றுகூடல் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பலர் கலந்துகொண்டனர்.*

## அயல் வீட்டாருடன் தகாத வார்த்தை ரூ.2,500 அபராதம்

யாழ்ப்பாணம், ஏப்.11

அயல் வீட்டுக்காரப் பெண்ணைத் தகாத வார்த்தைகளால் பேசி இம்சைப் படுத்திய நபருக்கு யாழ்.நீதிமன்றம்2ஆயிரத்து 500 ரூபா அபராதமும் ஒருவார கட்டாய சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.நகர்ப் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர்கள் இருவருக்கிடையே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது பாதிக்கப்பட்ட பெண் சட்டத்தரணி ஊடாக மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் சந்தேக நபர் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலையானார்

விசாரணையின் போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது.

## மன்னாரில் சுனாமி ஒத்திகை

மன்னார், ஏப்.11

மன்னாரில் சுனாமி ஒத்திகை இடம்பெற்றுள்ளது.

ஆழிப்பேரலை (சுனாமி) பேரிடர் ஏற்படும் பட்சத்தில் பொது மக்கள் செயல்படும் விதம் தொடர்பாக அவர்களுக்குப் பயிற்சி வழங்கும் நோக்கில் கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரிப்புக் கிராமத்தில் சுனாமி ஒத்திகை ஒன்று இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில், இயற்கை இடர்கள் இடம் பெறும் அபாயம் உள்ள பல கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு அங்கு இடர் முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அரிப்புக் கிராமத்தில் இடர் முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப் பட்டுப் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன.

இந்த வகையில் அரிப்பு வாழ் மக்களை, இயற்கை இடர்கள் தொடர்பில் விழிப்பு நிலையில் வைத்திருக்கும் பொருட்டுக் கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் அந்தப் பயிற்சிகள் இடம் பெற்றுள்ளன.

இதற்கான அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அமைச்சின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி முகம்மது றியாஸ் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# முல்லையில் அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றம்

## இரு தினங்களில் படகுகளுடன் வந்திறங்கின 40 குடும்பங்கள்

முல்லைத்தீவு, ஏப் 11

முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் தென்பகுதி மீனவர்களை நிரந்தரமாகக் குடியமர்த்தும் நடவடிக்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மீனவர்களும் மக்களும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை என்ற மீனவக் கிராமத்தில் கடந்த இரு தினங்களில் மட்டும் அரச வாகனங்களில் 48 படகுகளுடன் 40 மீனவக் குடும்பங்கள் அழைத்து வரப்பட்டுள்ளன. அவர்களுக்கு அந்தக் கிராமத்தில் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கும் செயற்பாடுகளும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. இதனால் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த கிராமத்தில் தொடர்ந்தும் வாழ முடியாத நிலை உருவாகி விடுமோ என்று இந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த கிராமத்தில் இருந்து போரினால் இடம் பெயர்ந்து சென்ற மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையிலும் கூட அவர்களுக்கு இன்னமும் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. ஆனால் தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட சிங்கள மீனவர்களுக்கு அவசர அவசரமாக நிரந்தர வீடுகளை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு, கொக்கிளாய் ஆகிய மீனவக் கிராமங்களில் நீண்ட காலத்துக்கு முன்னர் தென்பகுதி மீனவர்கள் தற்காலிகமாக வாடி அமைத்து தொழில் புரிந்ததாகக் கூறப்படுகிறது.

தற்போதும் அவ்வாறு தற்காலிகமாக இங்கு வந்து தொழில்புரிவது சம்பந்தமாக தமக்கு எதிர்ப்போ மனத்தாங்கலோ இல்லையென்றும் ஆனால் நிரந்தரமாக இங்கே குடியிருப்பதன் மூலம் தமதுவாழ்வாதாரத்தை சிதைக்கும் முயற்சி நடைபெறுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இந்தச்செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு முல்லைத்தீவு மீனவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

இத்தகைய சிங்கள மீனவர்களின் குடியேற்ற முயற்சி தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவருவேன் . நாடாளுமன்றத்திலும் இந்தப் பிரச்சினையை எழுப்புவேன் - என்றார்.

இதேவேளை, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய கருத்து தெரிவிக்கையில்:

''முல்லைத்தீவு கடற்படுகையில் ஏப்ரல் முதல் ஒக்ரோபர் மாதங்கள் வரையில் மீன் பிடிப்பதற்காக தற்காலிகமாக தெற்கிலிருந்து பெருமளவிலான மீனவர்கள் முல்லைத்தீவுக்கு சென்றுள்ளனர். எனினும் அவர்களை நிரந்தரமாக குடியேற்றும் முயற்சிகள் நடைபெறுவதி பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

மீன்பிடித் திணைக்களத்தின் முறையான அனுமதிப் பத்திரத்துடன் வரும் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது பற்றி மாத்திரமே நான் அறிந்துள்ளேன்'' - என்றார். (ங-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வேகங்கொண்ட வீராங்கனைகள்

## அரை மரதனில் புதுக்குளம் மாணவி முதலிடம்

வவுனியா,ஏப்.11

வடமாகாணப் பாடசாலைகளுக்கு கிடையிலான அரை மரதனோட்டப் போட்டியில் வவுனியா மாவட்ட மாணவிகள் முன்னிலை பெற்றுள்ளனர்.

வடமாகாணப் பாடசாலை மாணவருக்கிடையிலான அரை மரதனோட்டம் கடந்த சனிக்கிழமை வவுனியாவில் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.சத்திய பாலன் தலைமையில் இடம் பெற்றது.

ஈரப்பெரியகுளம்சந்தியில் வைத்து வவுனியா தெற்கு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆரம்பித்த போட்டி ஓமந்தை மத்திய கல்லூரி முன்றிலில் நிறைவடைந்தது

இதில் புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி ஆர். சாளினி ஒரு மணித்தியாலங்கள் 42 நிமிடங்கள் 25 செக்கன்களில் ஓடி முடித்து முதலாம் இடத்தினையும், யாழ்ப்பாணம், எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தைச் சேர்ந்த மரியகொறற்றி ஒரு மணித்தியாலமும் 45 நிமி டங்களும் 54 செக்கன்களில் ஓடிமுடித்து இரண்டாம் இடத்தினையும் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலத்தைச் சேர்ந்த கே.மேகவா ஒருமணி 50 நிமிடங்கள் 5 செக்கன்களில் ஓடி மூன் றாம் இடத்தையும் பெற்றனர்.

அடுத்த நான்காமிடம் தொடக்கம் பத்தாமிடம் வரை பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு.

எம் -ஜெயந்தினி கிளி / இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை கே.ரஞ்சிதா (வ/புளியங்குளம் இந்துக் கல்லூரி வி.திரிலா (கிளி/ அக்கராயன் மகாவித்தி யாலயமும் ரி.தர்சிகா(வ/ சின்னடம் பளம்பாரதி வித்தியாலயம் ) எஸ் லோஜினி ) புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி )

ஆர். டயானி வவு/ புதுக்குளம் மகாவித்தியாலயம், கே.இலக்ஷனா (கிளி) முக்கொம்பன் அ.த.க பாட சாலை.

இந்தப் போட்டியில் முதல் பத்து இடஙகளைப் பெற்ற போட்டியாளர்கள் தேசிய மரதனோட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (86,400,433)

## திருகோணமலை கிரிக்கெட்: வென்ற அணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

திருகோணமலை மாவட்ட 12 பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண் பெண் இருபாலருக்குமான கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டுக் கழகங்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

ஆண்கள் பிரிவு

பட்டணமும் சூழலும் பிரதேச செயல அணி முதலாமிடம்

கிண்ணியா பிரதேச செயலக அணி இரண்டாமிடம்

பெண்கள் பிரிவு

சேருவில் பிரதேச செயலக அணி முதலாமிடம்

கந்தளாய் பிரதேச செயலக அணி இரண்டாமிடம்.(ங-23)

## முல்லைத்தீவு உதைபந்து: வென்றது தினேஸ் வி.க.

யாழ்ப்பாணம்,ஏப்.11

முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரவுக்கு உட்பட்ட இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் முறிகண்டி தினேஸ் இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி சம்பியன் ஆனது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மாங்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் முறிகண்டி தினேஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து ஒட்டிசுட்டான் ஈஸ்வரன் இளைஞர் விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

போட்டியில் ஆரம்பத்தில் இருந்தே தினேஸ் அணியின் கையே ஓங்கியிருந்தது. மிக லாவகமாக எதிரணியின்ருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு பந்தை கோல்க்கம்பத்துக்குள் அனுப்புவதிலேயே தினேஸ் அணியினர் குறியாக இருந்த னர். ஒட்டிசுட்டான் ஈஸ் வரன் அணி தற்காப்பு ஆட் டம் ஆடியபோதும் தினேஸ் அணியின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை.

இறுதியில் முறிகண்டி தினேஸ் இளைஞர் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## தம்போ சதுரங்க விழா

2 ஆவது தம்போ சர்வதேச சதுரங்க விழா எதிர் வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை அம்பலங்கொடை தர்ம அசோகா கல்லூரியின் தோமஸ் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து பங்குபற்றும் போட்டியாளர்களின் முதல் 5 விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் போட்டியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி போட்டி தொடர்பான விவரங்களை அறிய விரும்பும் போட்டியாளர்கள் யாழ்.மாவட்ட சம்மேளனத்தின் செயலாளர் க.ஆதவனுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (23)



வலிகாமம் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட தொடரின் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அணியினர் அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுநருடன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காரைநகர் கோட்ட மெய்வன்மை முடிவுகள்

கரைநகர் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் முடிவுகள் வருமாறு

**11 வயது ஆண்கள்**

**75 மீற்றர் ஓட்டம்.**

அ.அரவிந்தன் முதலாம் இடம் - சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.

எஸ்.ராகுலன் இரண்டாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.

எஸ்.செந்தூரன் மூன்றாம் இடம்- அ.மி.த.க.பா

**ஆண்கள் 100 மீற்றர்**

எஸ்.ராகுலன் முதலாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.

ஏ.சுரேஸ் இரண்டாம் இடம்- அ.மி.த.க.பா

ரவீந்திரன் மூன்றாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.

**நீளம் பாய்தல்**

கே.விதுசன் முதலாம் இடம்-சுப்பிரமணியம் வித்தியாலயம்

எஸ்.சரண்ராஜ் இரண்டாம் இடம்- அ.மி.த.க.பா

ந.கிருசாந்தன் மூன்றாம் இடம்-மெய்கண்டான் வித்தியாலயம்

**உயரம் பாய்தல்**

எஸ்.ராகுலன் முதலாம் இடம் சுந்தரமூர்த்தி வித் தியாலயம்.

யு.ரொமிராஜ் இரண்டாம் இடம்- ஊரி அ.மி.த.க.பா

ஏ.சுரேஸ் மூன்றாம் இடம்-மூன்றாம் இடம்

**11 வயது பெண்கள்**

**75 மீற்றர் ஓட்டம்**

ம.கயல்விழி முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

தெ.ஜென்சிகா இரண்டாம் இடம்-சுப்பிரமணியம் வித்தியாலயம்

கி.கஸ்தூரி மூன்றாம் இடம்- வயாவில் சை.வி

**100 மீற்றர் ஓட்டம்**

ம.கயல்விழி முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

சௌ.சஜிதா- இரண்டாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தியாலயம்

எஸ்.சரண்ஜா இரண்டாம் இடம்-ஊரி அ.மி.த.க.பாடசாலை

**நீளம் பாய்தல்**

எஸ்.மேரிவிதுஸா-முதலாமிடம்- ஊரி அ.மி.த .க.பா

எஸ்.சரண்ஜா இரண்டாம் இடம்-ஊரி அ.மி.த .க.பா

ந.தமிழ்செல்வி மூன்றாம் இடம்-மெய்கண்டான் வித்தியாலயம்.

க.நிதர்சனா மூன்றாம் இடம்-மெய்கண்டான் வித்தியாலயம்

**உயரம் பாய்தல்**

தே.ஜென்சிகா முதலாம் இடம்- சுப்பிரமணியம் வித்தியாலயம்

கு.கிருசாந்தினி இரண்டாம் இடம்-வயாவில் சை.வி.

சௌ.சயிதா மூன்றாம் இடம்-சுப்பிரமணியம் வித்தியாலயம்

**13 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

**ஆண்கள் 100 மீற்றர்**

வ.நிதர்சன் முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

கு. சயந்தன் இரண்டாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி

எம்.துசாகரன் மூன்றாம் இடம்- கலாநிதி ஆதியா கராஜா

**ஆண்கள் 200 மீற்றர்**

கு.சயந்தன் முதலாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி

சௌ.ராஜ்குமார் இரண்டாம் இடம்-வயாவில் சை.வி.

தே.கோகுலரமணன் மூன்றாம் இடம்-கலாநிதி ஆ.தியாகராஜா ம.வி.

**நீளம் பாய்தல்**

ம.யதுசன் முதலாம் இடம்-கலாநிதி ஆ தியாகராஜா

க.நிமலரூபன் இரண்டாம் இடம்-கலாநிதி ஆதியா கராஜா

வி.நிதர்சன் மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

**உயரம் பாய்தல்**

எஸ்.கௌதமன் முதலாம் இடம்-கலாநிதி ஆ.தியாகராஜா

வி.நிதுர்சன் இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

உ.றஜீவன் மூன்றாம் இடம் -கலாநிதி ஆ.தியாகராஜா

**4X100 அஞ்சல் ஓட்டம்**

முதலாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி

இரண்டாம் இடம்- கலாநிதி ஆ. தியாகராஜா

மூன்றாம் இடம்- வயாவில் சை.வி

**13 வயதுப் பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ்.யுவோதினி முதலாம் இடம்-கலாநிதி ஆ. தியாகராஜா

ப.யாழினி இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

பு.தர்மினி மூன்றாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி

**200 மீற்றர் ஓட்டம்**

சௌ.நிரோஜாமலர் முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

ஐ.டனுஜா இரண்டாம் இடம்-கலாநிதி ஆ. தியாகராஜா

உ.உசாந்தினி மூன்றாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தியாலயம்

**நீளம் பாய்தல்**

ப.யாழினி முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

சி.நிலாணி இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

ஆ.மேரிடொறின் மூன்றாம் இடம்-கலாநிதி ஆ. தியாகராஜா

**உயரம் பாய்தல்**

தே.வேணுப்பிரியா முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

மு.சாந்தினி இரண்டாம் இடம்-வயாவில் சை.வி

தெ.கம்சிகா மூன்றாம் இடம்-கலாநிதி ஆ.தியாகராஜா

**4X100 அஞ்சல் ஓட்டம்**

முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

இரண்டாம் இடம்- கலாநிதி ஆ.தியாகராஜா

மூன்றாம் இடம்-வயாவில் சை.வி.

(தொடரும்)

# கரீபியன்கள் அசத்தல்; கங்காருகள் திணறல்



சந்தர்போலின் சதத்தின் உதவியுடன் 400 ஓட்டங்களைக் கடந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி, சமியின் பந்து வீச்சின் உதவியுடன் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றது. நேற்றைய நாளில் சிறப்பாக பந்து வீசிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆஸ்திரேலிய அணியின் முன்வரிசையின் 5 இலக்குகளை சரித்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து ஆஸ்திரேலிய அணி விளையாடி வருகின்றது. முதலாவது ஆட்டம் பார்படோஸில் கடந்த சனிக் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சந்தர்போலின் சதத்துடன் 9 இலக்குகளை இழந்து 449 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் சந்தர்போல் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களையும், பிரத்வெயிட் 57, கிரிக் எட்வேட்ஸ் 61, டரன் பிரவோ 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் டேவிட் வோணர், ரியன் ஹரிஸ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.



அதன் பின்னர் ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. நேற்று முன்தினம் ஆட்டத்தை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி ஆட்டநேர நிறைவு வரையில் வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது. நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் 9.5 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்கு நஷ்டமின்றி 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எட்கோவன் 13, டேவிட் வோணர் 27 ஓட்டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த ஆஸ்திரேலிய அணிக்கு மேற்கிந்தியத்தீவுகளின் பந்து வீச்சாளர்கள் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தனர். நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமாகி மேலதிகமாக 6 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் எட்கோவன் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியாவின் இலக்குச் சரிவு தொடங்கியது. மறுமுனையில் வேகமாக துடுப்பெடுத்தாடிய வோணர் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

வொட்ஸன் நிலைத்து நின்றாட, வோணரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய பொண்டிங் 4 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டாகி' வெளியேறினார். அதன் பின்னர் அணித்தலைவர் கிளார்க்குடன், வொட்ஸன் சிறப்பாக இணைந்து துடுப்பெடுத்தாடிய போதும் இருவரிடையேயும் 49 ஓட்டங்கள் மாத்திரமே இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் வொட்ஸன் 39 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஆஸி அணி 133 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாற்றத்தை எதிர்கொண்டது. மைக்கல் கிளார்க், மைக்கல் ஹஸி ஐந்தாவது இலக்குக்காக சிறந்த முறையில் இணைப்பாட்டத்தை கட்டியெழுப்பி ஓட்டங்களைக் குவித்தனர். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் கிளார்க் 22 ஆவது டெஸ்ட் அரைச்சதம் கடந்தார். சிறப்பான இணைப்பார்ட்டம் பகிரப்பட்டு அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது. அதன் பின்னர் கிளார்க் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மைக் ஹஸி மறுமுனையில் நின்று துடுப்பெடுத்தாட அவருக்கு அறிமுக வீரர் மத்தியூ வேட் சிறப்பான ஒத்துழைப்பைக் கொடுத்தார்.

நேற்றைய ஆட்ட நேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 95 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் மைக் ஹஸி 47, வேட் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் சமி 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (5)

## தலைமை தற்காலிகம்தான்!



இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய நிரந்தர அணித்தலைவர் கிடைக்கும் வரையிலேயே நான் பதவி வகிப்பேன். இளைய வீரர் ஒருவரை அதற்காக வளர்த்தெடுத்த பின்னர் எனது அணித்தலைமைப் பதவியைக் கொடுத்துவிட்டு ஒதுங்கிவிடுவேன்.

இவ்வாறு இலங்கை அணியின் தற்போதைய தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார். இலங்கை அணியின் தலைவராகப் பதவி வகித்த திலகரட்ன டில்ஷான் தொடர் தோல்விகளை அடுத்து அந்தப் பதவியிலிருந்து விலகியதை அடுத்து ஏற்பட்ட இடைவெளிக்கு மஹேல ஜெயவர்தன அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

12 மாதகாலத்திற்கு அணியை வழிநடத்திச் செல்லும் கடமை எனக்குத் தரப்பட்டுள்ளது. அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதை பார்க்க வேண்டியுள்ளது. இயலுமான வரையில் இளம் வீரர் ஒருவரைத் தலைவராக வளர்த்து அவரிடம் எவ்வளவு விரைவாக அணித்தலைமையைக் கையளிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அணித்தலைமைப் பொறுப்பைக் கையளிக்க விரும்புகின்றேன். இலங்கை கிரிக்கெட்டும் இந்த வழியையே பின்பற்ற வேண்டும் - என்றார். (5)

## கொல்கத்தாவுக்கு முதல் வெற்றி



5 ஆவது ஐ.பி.எல். தொடரின் 10 ஆவது போட்டியில் தன்னுடைய முதல் வெற்றியை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பெற்றுக்கொண்டது.

பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. சொந்த மைதானத்தில் விளையாடுவதால் வெற்றி வாய்ப்பு பெங்களூருக்கே அதிகம் என்று கணிக்கப்பட்டிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய றோயல் சலஞ்சர்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. காம்பீரும் கலிஸும் கொல்கத்தா சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் இறங்கினர். கலிஸ் - காம்பீர் இணை முதல் இலக்குக்காக 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கலிஸ் 22 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த பிஸ்லா காம்பீரோடு ஜோடி சேர்ந்து றோயல் சலஞ்சர்ஸின் பந்துகளை பறக்க வைத்தார். இருவரும் அதிரடியில் இறங்க கொல்கத்தாவின் ஓட்ட எண்ணிக்கை எகிறியது. பிஸ்லா46 ஓட்டங்களுடன் வெளியேறினார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யூஸுப் பதான் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிலந்து அதிர்ச்சி கொடுத்தார். காம்பீர் 64 ஓட்டங்களுடன் சகிர்கானிடம் வீழ்ந்தார்..அதன் பின் வந்தவர்கள் வருவதும் போவதுமாக அணி வகுப்பு செய்து கொண்டிருக்க கொல்கத்தா அணி கடைசிப் பந்துப் பரிமாற்றங்களில் எதிர்பார்த்த ஓட்டங்களை அடைய முடியவில்லை. 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து கொல்கத்தா அணி 165 ஓட்டங்களை எடுத்தது. சகிர்கானும், வினய் குமாரும், முரளிதரனும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான புஜாரா, கெய்ல் இருவரையும் அப்புறப்படுத்தினார் கலிஸ். அதன் பின் வந்தவர்களை பாலாஜியும் சகிப் அல் ஹசனும் பதம் பார்க்க பெங்களூர் திணறியது. ஹோக்லி 6, டி வில்லியர்ஸ் 10, திவாரி 18, அகர்வால் 5, வெற்றோரி 20, வினய் குமார் 25, பட்டேல் 10, சஹீர்கான் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்றனர். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி வெறும் 123 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 42 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. அந்த அணி சார்பில் 4 இலக்குகளை சாய்த்த லக்ஷ்மிபதி பாலாஜி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ந)



## சானியாவுக்கு சறுக்கல்



சர்வதேச ரெனிஸ் தரவரிசையில் இந்தியாவின் சானியா மிர்சா பின்னடைவைச் சந்தித்துள்ளார். சர்வதேச ரெனிஸ் தரவரிசைக்கான பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா 182 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இவர் அண்மையில் நடைபெற்ற மியாமி ஓபன் ரெனிஸ் போட்டியில் பிரதான சுற்றுக்கு முன்னேறவில்லை. இதையடுத்து தரவரிசையில் பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

இரட்டையர் பிரிவில் இரு இடங்கள் பின்தங்கி 9 ஆவது இடத்துக்கு சென்றுள்ளார். மியாமி ரெனிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா, ரஷ்யாவின் வெஸ்னினா இணை முதல் சுற்றிலேயே தோல்வியடைந்ததே இந்த பின்னடைவுக்குக் காரணம்.

சமீபகாலமாக ரெனிஸ் போட்டிகளில் பங்கேற்காத இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், 12 இடங்கள் பின்னடைவு ஏற்பட்டு 197 இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஆடவர் இரட்டையர் தரவரிசையில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் 7 ஆவது இடத்திலும், ரோஹன் போபண்ணா 8 ஆவது இடத்திலும், மகேஷ் பூபதி 15 ஆவது இடத்திலும் தொடர்ந்து தங்கள் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருது முரளிக்கு கிடைத்திருக்க வேண்டும்

ஐ.பி.எல்லின் ஐந்தாவது ஆட்டத்தில் அசத்திய முரளிதரனுக்குத்தான் ஆட்டநாயகன் விருது கிடைத்திருக்க வேண்டும். எனக்கு அந்த விருது பொருத்தமானது இல்லை என்று ஆட்டநாயகன் விருது பெற்ற பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் வீரர் டீ.வில்லியர்ஸ் தெரிவித்தார்.

பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிக்கும், டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்குமிடையில் கடந்த சனிக்கிழமை ஐ.பி.எல்லின் ஐந்தாவது ஆட்டம் இடம்பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி டீ.வில்லியர்ஸின் அதிரடியுடன் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது. வில்லியர்ஸ் 42 பந்துகளில் 64 ஓட்டங்களை விளாசியிருந்தார்.





பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய டெல்லி அணியின் முக்கியமான இலக்குகளை பொருத்தமான தருணத்தில் முத்தையா முரளிதரன் வீழ்த்தினார். நான்கு பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று இலக்குகளை முரளி கைப்பற்றியிருந்தார்.

இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகன் விருது டீ.வில்லியர்ஸுக்கு வழங்கப்பட்டது. இந்த விருது தொடர்பில் டீ.வில்லியர்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், உண்மையில் இந்த ஆட்டத்துக்குரிய ஆட்டநாயகன் விருது முரளிக்குத்தான் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எங்களால் நிர்ணயிக்கப்பட்ட ஓட்ட எண்ணிக்கையினை டெல்லி அணியால் பெற்றிருக்க முடியும். எங்களது சிறப்பான பந்து வீச்சு, களத்தடுப்பு என்பவற்றினால்தான் கட்டுப்படுத்தினோம். பந்து வீச்சில் முரளியின் பங்கேற்பு முக்கியமானது. எனவே முரளிக்கே ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும் - என்றார். (5)

## ஆயிரம் அபராதம்

சேவாக் தலைமையிலான டெல்லி டேர்டெவில்ஸ் அணி வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், மைதானத்துக்கு வருவது என்று அனைத்திலும் நேரம் தவறாமையை கடைப்பிடிக்க வேண்டும் என்று நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. அவ்வாறு நேரத்துக்கு வருகை தராத வீரர்களுக்கு ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல் தொடர் இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் சேவாக் தலைமையில் டெல்லி டெயாடெவில்ஸ் அணி 2 ஆட்டங்களில் பங்கேற்றிருந்தது. இதில் முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றும் அடுத்த ஆட்டத்தில் தோல்வியை தழுவியுமிருந்தது. இதனைத் தொடர்ந்து நிர்வாகத்தினரால் அதிரடியாகச் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அணி வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பது முதல் மைதானத்திற்கு செல்வது, சாப்பாடு நேரம், பயிற்சி என்று அனைத்திலும் நேரம் தவறாமையை கடைப்பிடிக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளது.

அவ்வாறு நேரத்திற்கு வருகை தராத வீரர்களுக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கவும் முடிவு செய்துள்ளது. (5)


**இறுக்கமானது - பிரித்தானியா Student Visa சட்டம்**
**வேலைவாய்ப்பென்ற பேச்சுக்கே இடமில்லை**

எனவே,
ஆஸ்திரேலியா சென்று கல்வி கற்போமா?
பின்வரும் மேலதிக வசதிகள் எமது ஆலோசனையுடன் உங்களுக்கு வழங்கத் தயாராக உள்ளோம்.
விமான நிலையத்தில் சென்று இறங்கியவுடன் அழைத்துச் செல்லல்.
குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதி.
பகுதி நேரத் தொழில் வாய்ப்புகளுக்கான ஆலோசனை.

ஆலோசனைகளுக்கு:
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9016
(சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாள்கள் உட்பட எல்லா நாள்களும் திறந்திருக்கும்.)
புதுவருட தினத்தன்று ஆலோசனை பெறுபவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

கிளைகள்:
23 1/3, மகேஸ்வரி லேன், கொழும்பு-06. 0112366925
115- இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 0212285544
மெல்போர்ண் - ஆஸ்திரேலியா Land Line: 0661390437100



**காணி விற்பனைக்கு**

இரண்டாம் குறுக்குத்தெரு (2nd Cross Street) யாழ்ப்பாணத்தில் 1¼ பரப்புக் காணி உடனடி விற்பனைக் குண்டு.
தொடர்பு- 0774842464, 0770785444



**ASAP கற்கைநெறி**

★USAID நிறுவனத்தின் அனுசரணையில் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும் கணினி மற்றும் ஆங்கில பயிற்சி நெறி தென்மராட்சி / வடமராட்சி மாணவர்களுக்காக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

★ விண்ணப்பதாரி பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவராகவும், 24 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்தினை**
Gateway Chavakachcheri / Gateway Nelliyady
கிளைகளில் 18 ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

**மேலதிக தகவல்களுக்கு**




**Gateway**
Centre for ICT Education

New Market Building, Chavakachcheri. 021 227 0323, 021 567 0266
Luxmi Theatre Lane, Nelliyadi. 021 226 2395, 021 567 7606

ADB EKSP USAID FROM THE AMERICAN PEOPLE ASAP Accelerated Skills Acquisition Program



**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 23,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499



**CHEMISTRY CENTRE**
33. அரலி வீதி, (ஓட்டுமடம் சந்தி அருகில்)

வெப்ப இரசாயனம்
Tue 5.15 - 6.15
Fri 3.00 - 4.00
ஆரம்பம் 10/4
Tue 5.15

Group Class முறையில் ஆரம்பமாகும் அலகுகள்
INORGANIC
ஆரம்பம் 11/4
புதன் 4.00 p.m.
ORGANIC
ஆரம்பம் 12/4
வியா. 3-4 p.m.
Physical
ஆரம்பம் 13/4
வெள்ளி 4-5 p.m.
General
ஆரம்பம் 13/4
6.00 p.m.
By : அன்பு


## 8ஆம் நாள் நிகழ்வும் நன்றி நவிலலும்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 17 | | 04 |
| ★ | | ★ |
| 11 | | 04 |
| ★ | | ★ |
| 1938 | | 2012 |



**அமரர் அருணாசலம் கனகையா**
(7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு)

கடந்த 04.04.2012 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப விளக்கின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து, நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் 11.04.2012 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும் 8ஆம் நாள் நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அந்தோனியார் கோயிலடி,
அளம்பில், முல்லைத்தீவு.
குடும்பத்தினர்.


**தூதரகப் பரீட்சைகளுக்கான**
German - Deutsch, Netherland - Dutch, French, Italian
வகுப்புகள் நடைபெறுகின்றன.
**Vivekananda Academy**
221 1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0774842464, 021 2220393, 021 3216928



**வெளிவந்துவிட்டது**
"விஞ்ஞான வினாடிவினா புதிர்கள்"
(தரம் 6 - 11)
"சிறுகுறிப்புகளும் மாதிரி வினா விடையும்"(தரம் 10,11)
அனைத்து புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
ஆசிரியர்- ஜெ. ஜெயகிறிஸ்ரோ
(மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)
தொடர்பு- 0772269851



சித்திரைப் புத்தாண்டு முதல்....
**உதயன் இணைய வானொலி**
உலகெங்கும் பரந்து வாழும் எம் தமிழ் உறவுகளை தாயகத்துடன் இணைக்க...
தொடர்புகளுக்கு: radio@uthayan.com 0215672222





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உலகத்தவர்க்கு நீ
தொண்டனாகில்
உலகத்தவர்
உனக்குத் தொண்டர்
ஆவார்கள்.
-பேரறிஞர்

# புதன் பொய்கை A

உதயன் 11 ஏப்ரல் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# முரண்பாடுகளை முகாமை செய்தல்




■ நடேசு தயாளன்

நாளாந்த வாழ்வில் முரண்பாடென்பது ஒரு பாங்காகவே வளர்ச்சியடைந்துள்ளது. எமது திறனானது இதனை எவ்வாறு கையாளுதல் என்பதிலேயே தங்கியுள்ளது. தத்துவமானது முரண்பாடு இயக்கத்துக்குச் சாத்தியமானது எனக் குறிப்பிடுகின்ற நிலையில் முரண்பாடானது குறுங்கால நீண்ட கால செயலொழுங்காகவுள்ளதும் நோக்கத்தக்கது.

முரண்பாடு என்பது போராட்டம், வேறுபட்ட தேவைகள், நம்பிக்கைகள், பெறுமானங்கள் உள்ளோரிடையேயான போட்டி எனலாம். முரண்பாடானது நிறுவனங்களின் தரமான பெறுபேற்றுக்கும், பங்குதாரரது எதிர்பார்க்கைக்கும் இடையூறுகளை உண்டு பண்ணுவதாக இருக்கும். இதன் காரணமாகவே முரண்பாட்டு முகாமையானது முக்கியத்துவமுடையதாயுள்ளது.

பெரும்பாலான முரண்பாடுகளின் அடிப்படைத் தோற்றுவாய் பொருத்தமற்ற தொடர்பாடற் கோலம் நிலவுவதிலேயே உள்ளது. எல்லா முரண்பாடுகளும் தீர்க்கப்பட வேண்டியதான அவசியமுடையதல்ல. எனினும் முரண்பாடுகளை எவ்வாறு வெற்றி கொள்ளுதல் என்பது தொடர்பான முகாமைத்துவச் சிந்தனை இன்றைய சூழலில் இன்றியமையாததாகும். இம் முரண்பாட்டு முகாமையினூடாக திறன்களை விருத்தி செய்தல் சுய விழிப்புணர்வூட்டல், முரண்பாடு தீர்த்தலுக்கான தொடர்பாடற் கோலம், முரண்பாடுகளை வெற்றி கொள்வதற்கான கட்டமைப்பு என்பனவும் அவசியமானதாகவுள்ளன.

பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் வேறுபட்ட எண்ணங்கள், இலக்குகள், பெறுமானங்கள், நம்பிக்கைகள் மற்றும் தேவைகள் உடையவர்களாயுள்ளார்கள். இத்தகைய வேறுபாட்டு நிலைகள் முரண்பாடுகள் நோக்கிய நகர்வினைத் தூண்டுவதாயுள்ளது. இந்த நிலையில் இம் முரண்பாட்டு நிலைகள் தொடர்பில் முகாமை செய்யக் கூடிய நிலையினையும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுதல் அவசியமாகும்.

முரண்பாடு தொடர்பில் பொதுவான நிலையில் நோக்கின் பதவிநிலை உத்தியோகத்தருக்கும் முகாமையாளருக்குமிடையிலான முரண்பாடானது மிகவும் மென்மையான முறையிலேயே இடம்பெறும். பதவிநிலை உத்தியோகத்தர்களானவர்களுக்கிடையே முரண்பாடு மிகவும் மென்மையான முறையிலேயே இடம்பெறும். பதவிநிலை உத்தியோகத்தர்களானவர்கள் தமது முரண்பாட்டு நிலை தொடர்பான உணர்வுகளை, தமக்கு நேரடியாகப் பொறுப்புக் கூறவுள்ள நிலையிலுள்ள முகாமையாளருக்கு வெளிப்படையாகக் குறிப்பிடுவதில்லை. எனினும் தமது மன உணர்வுகளின் அதிர்வலைகளை தமது சகபாடிகள் உறவினர்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிலைமையுமுள்ளது. வேலைச் சூழலில் முரண்பாடுகளை எதிர் கொள்ளும் போது, அம் முரண்பாடுகளின் அடிப்படை மூலத்தினை இனங்காணுதல் அவசியமாகும்.

பொதுவாக முரண்பாட்டுச் சூழலுக்கான மூலங்களாகப் பின்வருவனவுள்ளன.

1.ஆரோக்கியமற்ற தொடர்பாடற் கோலம்

2.இருவர் அதற்கு மேற்பட்டோருக்கிடையேயான எதிர்ப் புணர்வு

3.தொழிலாளருக்கும் முகாமையாளருக்குமிடையிலான எதிர்ப் புணர்வு.

4. குறைவான தொழில் அங்கீகாரமும் தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்புக் குறைவும்

5.முகாமைத்துவத்திடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற குறைவான ஆதரவு

6.நிறுவனச் செயலொழுங்கில் ஏற்படுகின்ற மாற்றங்கள்

7. குறைவான தகவல்கள் குறைவான வளங்கள்

மேற்கூறிய காரணங்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் பங்காற்றுவதாயுள்ளன. முகாமையாளரானவர் இந்த நிலைமைகளில் இருந்து விடுபடுவதற்கான செயற்திட்டங்கள் தொடர்பில் சிந்திப்பது அவசியமானதாயுள்ளது.

ஆரோக்கியமற்ற தொடர்பாடற் கோலமானது நிறுவனத்திலேற்படும் மாற்றங்களை அறிந்து கொள்ள முடியாத நிலையினைத் தோற்றுவிப்பதோடு, மேலிருந்து கீழான கீழிருந்து மேலான தொடர்புகளையும் ஏற்படுத்துவதில் தடைகளை உண்டு பண்ணுவதாயிருக்கும். ஒரு செயலொழுங்கில் பங்கு கொள்வோரிடையே உருவாகும் வேறுபட்ட சிந்தனைகள், பெறுமானங்கள், நம்பிக்கைகள், தேவைகள் என்பன முரண்பாட்டுக்கு வழியேற்படுத்தும் காரணிகளாகவுள்ளன.

கரிசனையுடன் கேட்டல், வாய்மூலத் தொடர்பாடல், நபர்களுக்கிடையேயான தொடர்பாடற் கோலம், ஒருவரை ஒருவர் அங்கீகரித்தல் குழுச் செயற்பாடுகள் என்பவற்றினை மேற் கொள்ள வெற்றிகரமான அணி அங்கத்துவம் வேண்டப்படுவதாயுள்ளது. முரண்பாட்டு முகாமைத்துவத்தினைக் கற்பதன் மூலம் தனிப்பட்ட ரீதியிலும், வாண்மை ரீதியிலும் நன்மையினை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முரண்பாட்டுத் தீர்வுக்கான பதிலிறுப்பானது பின்வரும் முறைகளைக் கையாள வேண்டியதாயுள்ளது.

* போட்டியிடல்
* தவிர்த்தல்
* பொருந்துதல்
* விட்டுக் கொடுத்தல்
* உதவுதல்

இரண்டு அளவிடைகளின் அடிப்படையில் மேற் கூறப்பட்ட விடயங்களைச் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும். அவை யாவன கூட்டுச் சேர்தல், இசைந்து போதல் என்பவையாகவே அமைந்திருக்கும். இவ்விரண்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாறுபாடான பெறுமானங்களைத் தோற்றுவிப்பதாகவும் இருக்கும். ஒரு சந்தர்ப்பத்தில் சரியாகவும் இன்னோர் சந்தர்ப்பத்தில் பிழையாகவும் அமைய முடியும்.

முரண்பாடு முகாமை தொடர்பான பின்வரும் விடயங்கள் நோக்கத்தக்கன. தோமஸ் கில்மென் என்பவரது முரண்பாட்டுத் தீர்வுக் கருவியாக்கம் ஆனது மிகப் பரந்தளவில் முரண்பாட்டுச் செயற்பாட்டினை ஒழுங்கமைப்பதில் பங்காற்றுவதாயுள்ளது. இச் செயன்முறையினூடாக முரண்பாட்டுக்கான தீர்வு விரைவாக எட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முரண்பாட்டு தொடர்பான போட்டியிடல் மனப்பாங்கானது, உறுதியாக நிற்றலோடு குறைந்தளவு சேர்ந்தியங்கும் தன்மையினை வெளிப்படுத்துவதாகவும் இருக்கும். போட்டியிடும் மனப்பாங்கானது பொருத்தமான சந்தர்ப்ப நிலைகளில் விரைவான நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பிரபலியமற்ற முடிவுகளை மேற் கொள்ள முனையும் போதும் கூட, முக்கியத்துவமுடைய பிரச்சினைகளைக் கையாளும் போதும், அல்லது சுய விருப்பிலான எதிர்பார்ப்பினை வெளிப்படுத்தும் போதும் இத்தகைய வழிமுறைகள் அவசியமாகும்.

போட்டியிடும் திறனின் போது விவாதித்தல் பகுத்தறிதல் விடயத்தில் செல்வாக்குச் செலுத்துதல், கருத்துக்களையும் உணர்வுகளையும் ஏறுவரிசைப்படுத்துதல், சுயநிலைப்பாட்டில் செயற்படல், தனது நிலையில் தெளிவாக இருத்தல் என்பன அவசியமான திறன்களாயுள்ளன.

முரண்பாட்டு முகாமையில் தவிர்த்தல் நிலையினை நோக்குவோமானால் முரண்பாடு தொடர்பில் உறுதியாக நிற்கும் நிலை குறைவாகவும், சேர்ந்தியங்கும் நிலை அதிகமாகவும் அமைந்து காணப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பய உணர்வு காரணமாக பிரச்சினைகளைத் தவிர்க்கும் மனோநிலை மேலோங்கியுள்ளமையும், முரண்பாட்டு முகாமைத்துவத் திறன் குறைவாயுள்ளமையும், தன்நிலை தொடர்பான நம்பிக்கையீன நிலையும் இதற்குக் காரணங்களாயுள்ளன. முரண்பாடு தவிர்த்தல் நிலையானது, முக்கியத்துவமற்றதாகவும் பதற்ற நிலையினைக் குறைக்கவும் சில சந்தர்ப்பத்தில் வேண்டியதாயுள்ள போதும் குறித்த நபரானவர் குறைந்த பதவி நிலையிலுள்ள போதும் இது பொருத்தமுடையதாகவும் ' அமையும்.

"முரண்பாடு என்பது போராட்டம், வேறுபட்ட தேவைகள், நம்பிக்கைகள், பெறுமானங்கள் உள்ளோரிடையேயான போட்டி எனலாம். முரண்பாடானது நிறுவனங்களின் தரமான பெறுபேற்றுக்கும் பங்குதாரரது எதிர்பார்க்கைக்கும் இடையூறுகளை உண்டு பண்ணுவதாக இருக்கும். இதன் காரணமாகவே முரண்பாட்டு முகாமையானது முக்கியத்துவமுடையதாயுள்ளது. பெரும்பாலான முரண்பாடுகளின் அடிப்படைத் தோற்றுவாய் பொருத்தமற்ற தொடர்பாடற் கோலம் நிலவுவதிலேயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்குப் பிடிக்க புதிய குடை



மழையிலிருந்து தப்பிக்க குடை பிடிப்பதுதான் வழமை. ஆனால் பிரிட்டனில் வாழ்பவர்களுக்கு கையால் குடை பிடிப்பது கஷ்டமாக இருந்திருக்கிறது. அதனால் அவர்கள் கையில் பிடிக்கத் தேவையில்லாத குடையை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். மழை, வெயிலில் இருந்து பாதுகாக்க தோளில் பொருத்தப்பட்ட வித்தியாசமான ஒரு குடையை அணிந்திருக்கிறாங்கள் பிரிட்டன் மக்கள்.

# நாய்களுக்கும் உடை....!



செல்லப்பிராணிகளாக நாய்களை வளர்ப்பதில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறு பெண்கள் செல்லப்பிராணியாக வளர்க்கும் நாய்களுக்கு வித்தியாசம் வித்தியாசமாக உடைகளை அணிவித்தும் அழகு பார்க்கின்றனர்.

# விளம்பரத்துக்குத் தடை



சிகரெட் பக்கெட்டுகளை அதிகளவு விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், வரிசையாக அடுக்கி வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு விளம்பரப்படுத்துவதன் மூலம் அவை இளைஞர்களை சுண்டி இழுத்து புகைக்கும் ஆவலை தூண்டுகிறது.


எனவே இளைஞர்கள் அவற்றை வாங்கி புகைப்பதால், புற்றுநோய், காசநோய் உட்பட பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர்.

இதை தடுக்க லண்டனில் உள்ள கடைகளில் சிகரெட் பக்கெட்டுகளை அடுக்கி வைத்து விளம்பரப்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையை பலர் வரவேற்றுள்ள போதிலும், சிலர் எதிர்ப்பு தெரிவித்து இருக்கின்றனர்.

இது தனி மனித சுதந்திரத்துக்கு எதிரானது என்றும் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

# மரத்தில் அமைக்கப்பட்ட உல்லாச விடுதி




மனிதன் தான் பாதுகாப்பாக வசிப்பதற்காக உருவாக்கிய வீடுகள் மண் வீட்டிலிருந்து கல் வீடு வரையான வளர்ச்சி அடைந்தன.

எனினும் அத்துடன் நின்றுவிடாத மனிதன் இன்று புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி விதவிதமான வடிவங்களில் வீடுகளை உருவாக்கி வருகின்றான்.

வினோதமான முறையில் மரங்களின் உச்சியில் கட்டப்பட்ட ஆடம்பரமான உல்லாச விடுதியைக் காணலாம்.

# ஆயுள் கண்ட காலணி



உலகின் மிகவும் பழசான காலணி அர்மீனியாவில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதற்கு வயது 5,500 ஆண்டுகள். அதாவது எகிப்தின் முதல் பிரமிட்டை விட 1,000 ஆண்டு முன்பே தயாரிக்கப்பட்டது.

மாட்டுத் தோலில் இந்தக் காலணி செய்யப்பட்டது. [illegible] பாதத்திற்கும் பொருந்தும் வகையில் மூதாதையர் உருவாக்கியது.

“உலகின் மிக பழைய காலணியைக் கண்டுபிடித்து விட்டோம். அது ஆணுடையதா, பெண்ணுடையதா என்பதுதான் தெரியவில்லை’’ என்கிறார் அயர்லாந்தின் கார்க் பல்கலை கழக விஞ்ஞானி ராண்பண்யாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (41)

### திருமணம்

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக நம் முன்னோர்கள் கூறி வருகின்றனர். இருமனங்கள் இணையும் விழா திருமணம் ஆகும். ஒரு மனிதன் குடும்ப வாழ்க்கையில் வெற்றி பெறுவதும், தோல்வி அடைவதும் அவரது திருமண நாளைப் பொறுத்தே அமையும்.


திருமண நாளானது திருமணம் செய்து கொள்கின்ற தம்பதிகள் இருவருக்கும் அதிர்ஷ்ட நாளாக அமைந்தால் வாழ்க்கையில் அவர்கள் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு முயற்சியும் அவர்களுக்கு வெற்றிமேல் வெற்றி தரும். தொழிலில் முன்னேற்றம், விருத்தி, செல்வச் செழிப்பு, வியாபார மேன்மை, குடும்ப நலம், சொத்து சேர்க்கை, பதவி, புகழ், கௌரவம் அனைத்தும் வந்து சேரும்.

குடும்ப வாழ்க்கையில் அரங்கேறும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூல காரணம் திருமண நாளே ஆகும். முறையற்ற முகூர்த்த நாள்களில் திருமணம் செய்து கொண்டு ஒரே நாளில் விதவையான எத்தனையோ பெண்கள் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கி வாழ்ந்து வருகின்றனர். அதுபோல மனைவியை இழந்த கணவனையும் காண முடிகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் திருமணத் திகதியை எண்களின் இயற்கை கூறும் முகூர்த்த விதிப்படி ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும்.

சரியான திருமண நாளாக இருந்தால் இது போன்ற தீய சம்பவங்கள் நடக்க வாய்ப்பேயில்லை. நல்ல நாள் என்றும், முகூர்த்த நாள் என்றும் கலண்டரில் பொதுவாகப் போடப்பட்டுள்ள நாள்கள் கண்டிப்பாக எல்லோருக்கும் பொருந்தாது. யாரோ சிலருக்குப் பொருந்தக் கூடிய நாள்களை அனைவரும் தேர்ந்தெடுத்து அல்லல் படுகின்றனர். ஜாதகப்படி பொருத்தம் இல்லை என்று கூறப்பட்டவர்களும் எண்களின் இயற்கை விதிப்படி முகூர்த்த நாளில் திருமணம் செய்து கொண்டு வளமாக வாழ்கின்றனர்.

குடும்பப் பிரச்சினைகள், செல்வம் சீரழிதல், குழந்தைப் பாக்கியம் இல்லாது போதல், விவாகரத்து, கருத்து வேறுபாடுகள், தினந்தினம் வாய்த் தகராறு, மன வேதனை, கணவன் நடத்தையில் மனைவிக்கும் மனைவியின் நடத்தையில் கணவனுக்கும் சந்தேகம் ஏற்படுதல், தாம்பத்தியக் கோளாறுகள் போன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் திருமண நாளே காரணமாகும்.

உயிரும், உடலுமாகக் காதலித்த பல நபர்கள் கல்யாணத்திற்குப் பிறகு ஒருவரை ஒருவர் வெறுக்கத் தொடங்குவது, தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவது போன்ற சம்பவங்கள் திருமண நாளின்



பலனேயாகும்.

### திருமணப் பொருத்தம் பார்த்தல்

திருமணம் என்பது அன்று முதல் இன்று வரை பல்வேறு முறைகளாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மதத்தவர்களும், இனத்தவர்களும் வெவ்வேறான பழக்கவழக்கங்களை மேற்கொண்டு திருமணங்களை நடத்துகின்றனர். இதன் அடிப்படை என்னவென்றால் வளமான சந்ததிகளை உருவாக்குவதே ஆகும். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நியதிகளுடன் திருமணங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

பண்டைய திருமணங்களுக்கும், இன்றைய திருமணங்களுக்கும் பல மாற்றங்கள் உருவாகி விட்டன. மனிதன் நாகரிகத்தை மேம்படுத்தி மனித இனத்தை நல்வழிப்படுத்தி சிறப்பாக வாழவேண்டி திருமண பந்தங்கள், சடங்கு முறைகள் உருவாக்கப்பட்டன. உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறான மக்கள், தங்களுடைய பாரம்பரிய முறைப்படி திருமணங்கள் செய்து கொள்கின்றனர். நமது நாட்டில் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டுள்ள முகூர்த்த தினங்களையும் இராசிப் பொருத்தங்களையும் பார்த்து திருமணங்கள் செய்வது வாடிக்கையாக இருந்து வருகின்றது.

அதில் குறிப்பிட்டுள்ள பொதுவான முகூர்த்த தினங்கள் சிலருக்குப் பொருந்தி அமைந்துவிடும். அவர்கள் வாழ்க்கையில் திருமணத்திற்குப் பின் முன்னேற்றத்துடன் வாழ்ந்து வளமான வாரிசுகளைப் பெற்று வசதியான வாழ்க்கை வாழுகின்றனர். பஞ்சாங்கம் பார்த்து பொருத்தம் பார்த்து நல்ல நேரத்தில் (யாரும் பஞ்சாங்கம் கூறும் இராகுகாலம் மற்றும் எமகண்டங்களில் திருமணம் செய்வதில்லை) நல்ல முகூர்த்த நாள்களில் தான் திருமணம் செய்து வைக்கின்றனர். பல திருமணங்கள் தோல்வியிலும், பல வம்பு வழக்குகளிலும் ஆபத்துகளிலும், பிரிவினைகளிலும் முடிந்து விடுகின்றன என்பதை இன்றைய கால கட்டத்தில் நன்றாகக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

திருமணம் என்பது உலகளாவிய அனைத்து இடங்களிலும் வெவ்வேறான முறைகளில் நடைபெறுகின்றது. பண்டைய பொருத்தம் பார்ப்பதில் எந்த முறை தனக்கு சரியெனப்படுகிறதோ அந்தந்த முறையையே கையாண்டு வருகின்றனர். பண்டைய காலம் முதல் இன்று வரை நிச்சயித்த திருமணங்களும் மறுமலர்ச்சித் திருமணங்களும் நடந்து வருகின்றன. திருமணத்தின் பொருளே வளமான மனிதகுல வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

ஆணும், பெண்ணும் திருமணம் என்னும் பந்தத்தில் தங்களுடைய இரு மனங்களையும் ஒன்று சேர்த்துக் கருத்தொருமித்து காதலர்களாக வளமான தம்பதிகளாக வசதியாக வாழ்ந்து வளமிக்க வாரிசுகளை உருவாக்கி நாட்டிற்கும், வீட்டிற்கும், மனித குல வளர்ச்சிக்கும் பங்காற்றுவதேயாகும்.

வளமான தாம்பத்தியம், எவ்வாறு திருமணம் செய்கிறோம் என்பதில் அல்ல, எந்தநாளில் செய்கிறோம் என்பதைப் பொறுத்தே திருமணம் அமையும். திருமணம் புரியும் தம்பதியர்கள், தங்கள் இருவருக்கும் ஏற்ற முகூர்த்த நாளில் திருமணம் செய்யுங்கள்.

(தொடரும்)

## மாணவிகள் எங்கு செல்கிறார்கள்?

பெரும்பாலான தனியார் பேருந்துகளில், மூச்சு விடுவதற்கு கூட வழியின்றி பயணிகளை நெருக்கமாக ஏற்றிக் கொண்டு செல்கின்றன. ஒவ்வொரு தரிப்பிடமும் வரும்போது பயணிகள் இறங்கமாட்டார்களா என்று எண்ணும் அளவிற்கு நெருக்கம் இருக்கும்.

அதிலும் வேலை முடிந்து செல்லும் நேரத்தில் வருகின்ற தனியார் பேருந்துகள் மிக நெருக்கத்துடன் வரும். அந்த வகையில் கடந்த வாரமும் ஒரு பேருந்து யாழிலிருந்து மாலை 5.30 மணிக்குப் புறப்பட்டது. பேருந்து சரியும் அளவிற்கு பயணிகள். இந்த நெருக்கத்திலும் நடத்துனர் பயணிகளை ஏற்றிக் கொண்டேயிருந்தார். ஓர் இடத்தில் நான்கு இளம் பெண்கள். அவர்கள் கல்வி கற்பவர்கள் என்பதை அவர்களது கையிலிருந்த கொப்பிகள் காட்டிக் கொடுத்தன.

இந்த நெருக்கத்திலும் நடத்துனர் அவர்களை ஏற்றினார். பாவம் தூர இடத்துக்குச் செல்ல வேண்டியவர்கள் தானே. படித்துக் களைத்திருப்பார்கள் என்று நடத்துனர் ஏற்றியிருக்கக் கூடும் (?). சனக் கூட்டம் மெல்லக் குறைந்ததும் அவர்கள் நால்வரும் கதைப்பதைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

**ஏன்...**
**எதற்கு...**
**எப்படி?**

"நாளைக்கு நான் உனக்கு கோல் பண்ணிறன். எத்தின மணிக்கு பள்ளிக் கூடத்துக்கு வாறதெண்டு", என்றார் ஒருவர் அதற்கு மற்றவர் "8.15 முதல் பெல் அடிக்குமடி, நாளை பள்ளிக்கூடத்துக்கு பிறேயரை கட் பண்ணி பிந்திப் போவம். போன் பண்ணேக்க பாத்து எடு, அண்ணாட்ட போன் இருக்கும்." என்றார்.

மூன்றாமவரோ "கட் அடிச்சிட்டு பிந்திப் போவமடி. மறக்காம கோல் பண்ணு, எல்லோரும் ஒரே நேரம் பிந்திப் போவம்" என்றார். அந்த நால்வரில் ஒருவரது இறங்குமிடம் வந்ததும் அவர் கீழே இறங்கி நின்று, "மறக்காம கோல் பண்ணு சொதப்பாத" என்று சொல்லி விட்டுச் செல்கின்றார்.

கான்போனும் நமது பெண்களும் எப்படியிருக்கிறார்கள் என்பதற்கு இது நல்ல உதாரணம். பிள்ளைகள் பாடசாலைக்குப் போகிறார்கள் என்று பெற்றோர் வீட்டில் நம்பியிருக்க, பிள்ளைகள் பிறேயரை கட் பண்ணி எங்கு செல்கிறார்கள்?

இது அவர்கள் வீட்டிற்குத் தெரியாமல் செய்யும் சிறு சம்பவம் தான். இது தான் ஆனாலும் பெற்றோர் விழிப்பாக இருக்க வேண்டும்.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயனே உனது நாளிதழில்
உணர்ச்சியின் புலம்பலாய்
செந்தூரியின்
''கொன்றவனையும்
கொண்டாடும் தமிழன்''
வாசகங்கள் வாசித்தேன்.
ஈனத் தமிழனின் எளிய செயல்கண்டு
என்போல் தமிழர்கள்
விம்மிய விம்மல்களின்
வடிகாலாய் உனது வாசகம் கண்டோம்.
ஜெனிவாவில் எம்மவரின் விடிவுக்காய்
என்னென்னவோ நடக்கிறது.
எம்மவரோ சிந்திய
ரத்தம் காய முன்னர்
தம்நிலை மறந்து தடுமாறுகின்றனர்
தமது சாகசம் காட்டவும் தண்டியதும்
தமிழரிடம் தானாம். பாவத்தின் பயனோ!
எத்தனை காலம் எம்மவர்
இப்படியே வாழ்வர்?
ஆனாலும் எனக்கோர் ஆதங்கம்
எத்தனை பேர்தான் உனது
சிந்தனைத் துளிகளைச்
சிந்தித்துப் பார்ப்பர்.
உள்ளக்குமுறல்களை
உள்ளுக்குள்ளடக்கி
ஊமை விழிகளில் கண்ணீர் வடித்து
காலத்தின் பதிலுக்காய்
காத்திருக்கின்றோம்.

கோதை
கொக்குவில்

* * *

உதயனை மாத்திரம் நம்பியுள்ள எங்களுக்கு உதயனில் ஒரு குறைபாடுள்ளதாக நாங்கள் நினைக்கிறோம்.

மின்சாரம் தடைப்படும் நாள்கள் எவ்வெப்போது என்பதை அறிய முடியவில்லை. ஆகவே சில காலத்துக்கு முன் செய்ததுபோல் மக்கள் நன்மை கருதி மின் தடைப்படும் நாள்களை அறிந்து பத்திரிகையில் பிரசுரிப்பீர்களா?

மு.இரத்தினம்
அல்வாய்.

* * *

பிரபாகரன் நாமம் இன்னும் 3,000 ஆண்டுகள் வாழும் என நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

உண்மைதான். தமிழ் மக்களின் விடுதலைக்காக துப்பாக்கி ஏந்திப் போராடிய மாவீரன் பிரபாகரன். தமிழ் மக்களின் உரிமை இன்னும் கிடைக்காத நிலையில் சிங்கள அரசு கொடுக்க மறுக்கும் நிலையில் பிரபாகரன் நாமம் அழியாது.

எவராலும் அழிக்க முடியாது. சிறுபான்மை இனமாக மக்களை ஒடுக்கி வைத்திருக்க அரசு முனைகிறது. கேட்கக் கூட நாதியற்ற இனமாக தமிழ் மக்களை இன்னும் அரசு ஒடுக்கி வருகிறது. இப்படிப்பட்ட செய்திகளை பிரசுரிக்கும் உதயனுக்கு வாழ்த்துக்கள். துணிவுடன் வெளியிடுவதற்கு பாராட்டுக்கள்.

இ.குமாரசாமி
துன்னாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டில் புதிதாக நாங்கள் பிறப்போம்

உயிரோடு வேர் கிழித்து நரம்புக்குள் மட்டும் ஈரம் கசியும் உணர்வு எவராலும் அறியப்படாத, எந்தக் கனவுலகிலும் இல்லாத வீரராக இருந்தோம். தமிழர் எல்லைகளில் எதிரி முகாம், வெடிக்கும் சத்தத்தில் அன்று அடையாளப்பட்டு இருந்தோம். இடி மின்னலில் வரும் மழையைப் போல் ஒளிக்கீற்றுக்களின் உள்ளே காணாமல் போனாலும் வானமாக இருந்தோம். போர் நடந்த காலப்பகுதி ஒவ்வொரு ஆண்டும் வரும் சித்திரைப் புத்தாண்டில் புதிதாகப் பிறப்போம்.

நீண்ட தூரம் இலக்கு நோக்கி நடந்த கால்கள் ஒரு போதும் களைத்ததில்லை. தூய சிந்தனையில் விடுதலைப் பரவசத்தில் பழந்தமிழ் குடித்து வாழ்ந்தோம். வீர வெறி எங்களோடு ஒட்டியதும் இல்லை; கோழைத்தனம் எங்கள் பக்கம் நெருங்கியதும் இல்லை.

எதிரியின் குண்டு மழையில் வெடித்துச் சிதறிய துண்டங்களாக இரத்தம் உறைந்த நிலத்தில் கிடந்து மூச்சுத்திணறிய போதும், காற்று நிரம்பாமல் சுவாசம் துடித்த போதும் எழும்பி நின்றோம். அடிவேரைச் சாய்க்கும் எமது முடிவை நினைக்கையில் ஆழ உலுக்கி அதிர்வில் இருந்து எழும்பும் எதிரிக்கும் நடுக்கம் ஏற்படும்.

எங்கிருந்து வருவோம் எப்படி வருவோம் எவருக்கும் தெரியாது. வெடியோசையின் அதிர்வில் நடந்து முடிந்துவிட்ட வெற்றிச் செய்திவரும். ஆழக்கடலில் மீள முடியாமல் சென்று வரும் போதும் உயிர்க்கொல்லிகள் வழி மறித்து.....வழி மறித்து காவு கொண்ட எங்களை விட, கடலுக்கும் திமிருண்டு. ஓட ஓட துரத்தி வெடிக்கையில் கூடுதலான ஆனந்தம் கொந்தளிப்பில் வெளிக்காட்டி எம்மையும் மீறிவிடும் எத்தனை பேர்கள் வரிசையாக வந்துகொண்டிருக்க இனியும் எத்தனை நாள்கள் எதிரி எங்கள் மண்ணில் இருக்கப்போகின்றான் என்று நினைப்போம்.

ஆக்கிரமிப்பில் எமது நிலம் மீள முடியாமல் போய்விடாது என்று மூச்சிருக்கும் அடி நரம்பில் கொதிப்புத் தெரியும். நீண்ட பரப்பில் கடல் தரை இரு பாகமும் உணரும் இந்த ஒரு வழிப் பாதையில் நாங்கள் ஒன்றாக நடந்தோம். தமிழர் இரத்தம் குடித்துக் குடித்து நாக்கின் உணர்வு செத்த எதிரியிடம் பேச முடியாது. போர்க்கள வெற்றியில் தான் எதிரி எங்களுடன் பேச வந்தான்.

குறிக்கோள் அதனுள் தெளிவுபடுகின்ற முடிவு, முயற்சி வீண் போகாத செயற்பாடுகள் எல்லோரையும் அன்று அடையாளப்படுத்தத் தவறியதில்லை. தமிழ் மண்ணையும் அன்னையையும் கூடுதலாக நேசித்ததால், வீரத்தை கைப்பிடித்து நின்றோம். சொறியவும், உராயவும் தட்டிப் பார்க்கவும் முடிகிற எதிரியால் தான் அன்று ஓடவும் முடிந்தது. பொறுமையும், கடமையுணர்வும் உள்ள எங்களால் தான் விரட்டவும் முடிந்தது.

நிலங்களுக்கு கூட பிரிகின்ற சோகம் அன்றில்லை. வீட்டுக் கதவு தொடக்கம் யன்னல் வரை அடைபடுகின்ற தனிப்பட்ட வாழ்வும் அன்றில்லை. இயற்கையுடன் ஒட்டி வாழ்கின்ற மனசும், கனவுகள் இல்லாத இதயங்களும் குடி கொண்டிருந்த அன்றைய ஊரில் வெறும் கையுடன் தான் செல்வோம்.

வானம் பார்த்தும் பிரமிப்பில்லாமல், தூரம் பார்த்தும் களைத்துவிடாமல் அயராது உழைத்தோம். ஆனால் இன்று உலக நாடுகளுடன் போராடி தோல்வி கண்ட நிலையில் வீரமில்லா ஊரில் கோழைகளால் தொல்லை. திணிப்பின் செயற்பாடு தன்னை இழக்கின்ற முடிவு வீணான முயற்சியாக எவரையும் அடையாளப்படுத்த முடியவில்லை. கூலிப் படைக்கு தமிழ் மண்ணோடு உறவு கிடையாது தேசத்துரோகிக்கு தாயின் உறவு முறை தெரியாது. போர்த்திவிட்டு குளிர் காயவும் எச்சில் சோற்றில் காவு கொள்ளவும் முடிகிறபோது சூடு இல்லாமல் வாழ்கிறோம். தணிந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்குத் தாவிப் பாயவும் முடிகிற போது தான் கோழைத்தனம் எமக்குள் உயிர்பெறுகிறது. வரும் சித்திரைப்புத்தாண்டில் அமைதி கேள்விக்குறியாகி மீண்டும் அடிமைகளாகி பேச்சிழந்து போயுள்ளது.

எதிரியின் சப்பாத்துக் கால்களுக்குள் எமது ஈழ மண் மிதிபட்டு நழுவி எத்தனித்து விடுபட முயற்சிக்கும் ஒவ்வொரு நாளும் மீட்கப்படாமல் வாசித்துக்கொண்டிருக்கிறது. விட்டோடி மீளக்குடியமர்ந்த ஊர் மாறி விட்டது. எமது இடமுமல்ல வீடுமல்ல உள் பூச்சோடு சோகங்களை அள்ளிக் கொண்டு புதைந்து நிற்கிறது. தமிழ் பதிவுகளை அழித்தும் கட்டியும் உருவகமில்லாமல் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். போராட்ட காலங்கள் கூடுதலான பதிவுகள் மீளக்குடியமர்வு சோகமான அமர்வுகள் இதற்குள் துளிர்விடத்துடிக்கும் மொட்டுக்களின் வாழ்வு பழைய மரபு தொன்மைக்குள் சுழலவும் தெரியாமல் வெளியே வரவும் தெரியாமல் தவிக்கின்றோம். இதற்குள் கூனிக்குறுகி அவமானப்பட்டு நிற்கிறோம். எமது வாழ்விடங்களும் தெருக்களும் எதிரியின் கால் தடங்கள் பட்டு நிறையவே மாறியிருக்கின்றன.

களவுகளும், கொலைகளும், வன்புணர்வுகளும் பல ஆயிரம் படைகளின் கட்டுப்பாட்டில் அரங்கேறுகிறது.

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு சிங்கள வியாபாரிகள் தமிழர் தாயகப் பகுதியில் படையெடுத்துள்ளனர். பணத்தினை சிக்கனமின்றி செலவிடும் இனமாக தமிழினம் இருப்பதால் தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகள் சிங்கள மக்கள் இருக்கும் இடங்களில் வியாபாரம் செய்வதில் அதிக அக்கறை காட்டாது தமிழர் தாயகப் பகுதிகளுக்கு வந்து குவிகின்றனர். இதனால் தாயக வியாபாரிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் .

> **பிறக்கின்ற சித்திரை வருடப்பிறப்பு மேலும் தமிழர்களை அடிமைகளாக்கப் போகிறது. கூனிக்குறுகி சிங்கள அரசுக்கு சேவை செய்கிற அதிகாரிகளாக தமிழ் சமூகம் மாறி வருகிறது.**

நல்லூர் கோயில் முன்பாக திருவிழாக் காலங்களில் கடைகள் போடுவது போல சாதாரண நாள்களில் கடைகளைப் போட்டுள்ளனர் சிங்கள வியாபாரிகள். அந்தப் பகுதியில் தமிழ் வியாபாரிகள் கடைகள் போட்டால் மாநகரசபை வந்து தடுத்து விடும். சிங்கள வியாபாரிகள் கடைகள் போட்டால் கண்டும் காணாமல் இருக்கிறது.

சித்திரை வருடப் பிறப்பு என்பது சாலி வாகனன் என்ற வட நாட்டு அரசனால் பின்னாளில் நிலை நாட்டப்பட்டது. இந்த அரசனுக்கு முன்னர் பல்லாயிரம் ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் தமிழ் மக்கள் வாழ்ந்தனர். அதன் பின் சித்திரை வருடப்பிறப்பை வரவேற்று தமிழினத்தின் பழைமையையும், பண்பையும், சிறப்பையும், செல்வாக்கையும் சிதைத்து வந்துள்ளமை பெரும் வெட்கத்திற்கு இடமானதாக இருக்கின்றது. இன்றும் தொடர்கிறது. தனித்துவமான மொழியைப் பேசுகின்ற, தனித்துவமான பண்பாட்டைக் கொண்டுள்ள, தனித்துவமான கலைகளைக்கொண்டுள்ள, தமக்கென பாரம்பரிய மண்ணைக்கொண்டுள்ள மக்கள் ஒரு தேசிய இனமாகும். தமிழர் ஒரு தேசிய இனம். அடிமைக்காலம் உருவாக்கிய சித்திரை வருடப் பிறப்பு இன்றும் தொடர்வதால் அடிமைகள் வாழ்வில் இருந்து விடுபடவில்லை. சிங்களவரின் அடிமைகளாக தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

பிறக்கின்ற சித்திரை வருடப்பிறப்பு மேலும் தமிழர்களை அடிமைகளாக்கப் போகிறது. கூனிக்குறுகி சிங்கள அரசுக்கு சேவை செய்கிற அதிகாரிகளாகத் தமிழ் சமூகம் மாறி வருகிறது. ■ பித்தன்

# மெல்லத் தமிழ் இனி சாகுமோ?

முன்னரெல்லாம் க.பொ.த. (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள் வந்து விட்டால் இரண்டு விரல்களை மடக்கி வைத்துக்கொண்டு "உனக்கு என்ன றிசல்ட்?" என்று கேட்பார்கள். மடக்கி வைக்கப்பட்ட இரண்டு விரல்களும் சமய பாடத்தையும், தமிழ் பாடத்தையும் குறிக்கும். அந்தளவுக்கு, சமயம், தமிழ் என்பவற்றில் எல்லா மாணவர்களும் பாஸ்பண்ணி இருப்பார்கள் என்ற நம்பிக்கை. அதனாலேயே இரண்டு விரல்களை மடக்கிக்கொண்டு ஏனைய பாடங்களில் பெற்ற பெறுபேறுகளை எண்ணி அந்த மாணவன் உயர் தரத்துக்கு போவானா? இல்லையா? என்பதை 'பெரிசுகள்' தமக்குள் அளவிட்டுக் கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை தலைகீழாகி விட்டது.

இந்த முறை க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் வந்தபோது எனக்குத் தெரிந்த ஒரு மாணவனை சந்திக்க நேர்ந்தது. வழமையாக எல்லோரும் கேட்பதைப் போல "என்ன றிசல்ட்?" என்று கேட்டேன். அதற்கு அவன் "7 பாடம் பாஸ்" என்று ஒற்றைச் சொல்லை உதிர்த்து விட்டு எதையோ பறிகொடுத்ததைப் போல தலையைக் குனிந்து கொண்டான். அவன் உயர்தரத்துக்கு தகுதி பெற்றிருந்தும் (6 பாடங்களில் பாஸ் பண்ணினால் உயர்தரத்துக்குப் போகலாம் என்பது மட்டுமே எனக்குத் தெரிந்த வாய்ப்பாடு) ஏன் தலையைக் குனிகிறான் என்று எனக்குப் புரியவில்லை. சில வேளைகளில் எல்லாப் பாடங்களிலும் "ஏ" எடுக்க முடியவில்லை என்ற கவலையாக இருக்கலாமோ என்றும் யோசித்தேன்.

"பரவாயில்லை. நீ ஏ.எல். எக்ஸாமில நல்ல றிசல்ட் எடு." என்று சாரப்பட அவனுக்கு பத்து நிமிடங்களுக்கு மேலாக இலவச தத்துவ மழை பொழிந்தேன். அதில் நனைந்து நொந்த அவன் ஒரு மாதிரி என்னைப் பார்த்தான்.

"நான் ஏ.எல். படிக்க முடியாது" என்றான். நான் ஏன் என்பது போல நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பின்வருமாறு கேட்டேன்.

"ஏனப்பு, மற்ஸ் பெயிலோ?"

"மற்ஸ் பெயில் எண்டால் அடுத்த முறை எடுத்துத் தாறன் எண்டு சொல்லிப்போட்டு ஏ.எல் படிக்கலாம். இங்கிலிஸ் பாடத்தில கூட நான் பாஸ். ஆனால் நான் தமிழ் பாடத்தில பெயிலாகிட்டன்." என்று சர்வசாதாரணமாகச் சொன்னான். எனக்கு அவன் சொன்னதைக் கேட்டதும் தலை சுற்றியது. வழமையாக மாணவர்களுக்கு சோதனையான பாடம் என்றால். அது ஆங்கிலம்தான். எப்படியேனும் பாஸ் மார்க் வாங்கி விட்டால் போதும் என்று நினைப்பார்களே தவிர 'ஏ' எடுக்க வேண்டும் என்று அனேக மாணவர்கள் ஆங்கில பாடத்தில் முயற்சிப்பதில்லை. அந்தளவு தூரத்துக்கு அவர்களுக்கும் ஆங்கிலத்துக்கும் எட்டாப் பொருத்தம். வகுப்பறைகளில் கூட ஆங்கில ஆசிரியர்களை ஏதோ வேண்டாத விருந் தாளிகளைப் போலவே மாணவர்கள் பார்ப்பதுண்டு. ஆங்கில ஆசிரியர்களும் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இறங்கி கற்பிக்காமல், 'றீடிங்', 'டிக்டேஸன்' என்று உழுத்துப்போன முறைகளையே தொடர்ந்தும் பின் பற்றுவதால் மாணவர்களுக்கு ஆங்கிலம் எப்போதும் வேப்பங்காயாகவே இருக்கிறது. அதனால் ஆங்கில ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஒரு பெரிய பள்ளம் எப்போதும் நிரந்தரமாகி விட்டது.

**கோணல் கோலங்கள்**

தமிழ் ஆசிரியர்களின் நிலை அப்படியல்ல. அவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே எப்போதும் ஒரு நெருக்கமான உறவு தொடர்ந்து கொண்டே இருக்கும். தாய்மொழி என்பதால் இலக்கணத்தைத் தவிர ஏனைய விடயங்கள் மாணவர்களுக்கு இலகுவில் புரிந்துவிடும். அதனால் வகுப்பில் உள்ள கடை நிலை மாணவன் கூட அதிக புள்ளிகளை பெறும் பாடமாக தமிழ் மொழியே இருப்பதுண்டு.

ஆனால் இந்த முறை க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகளில் தமிழ் மொழியில் பல மாணவர்கள் மிகக் குறைவான புள்ளிகளையே பெற்றிருக்கிறார்கள். யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பகுதிகளில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஏறக்குறைய 10 வீத மாணவர்கள் தமிழ் பாடத்தில் சித்திபெற தவறி இருக்கிறார்கள் என்ற அதிர்ச்சிகரமான தகவலை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேவேளை ஆங்கில பாடத்தில் சித்தி உயர்வு வீதத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

**ஓடுகாலி**

ஒரு வகையில் ஆங்கிலத்துறையில் தமிழ் மாணவர்கள் வளர்ச்சி காண முனைவது மகிழ்வை ஏற்படுத்தினாலும் மறுபுறத்தில் தாய் மொழியை கோட்டை விடுவது தமிழ் மொழி மீது இளைய தலைமுறைக்கு இருக்கும் அக்கறையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. இதனையே இந்த முறை வெளிவந்த சாதாரண தர பெறுபேறுகளும் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ் மொழிப் பாட பெறுபேற்று வீழ்ச்சிக்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றது. வினாத்தாள் வழமையை விடவும் கடினம், வேண்டும் என்றே புள்ளியைக் குறைத்து விட்டார்கள், மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியாத வகையில் இருண்மையான வினாக்கள் இடம்பெற்றமை என்று பல காரணங்கள் அடுக்கப்படுகின்றன. இவையெல்லாம் 'ஏ' பெறுபேற்றை வேண்டுமானால் தடுக்க முடியுமே தவிர சித்தி பெறுவதை தடுத்த காரணங்களாகக் கொள்ள முடியாது.

வெளிநாட்டு மோகம், பண்பாட்டு கலப்பு, நாகரிக உள்நுழைவு, செல்போன் பாவனை, கணினி மாயை என்பன எல்லாம் தமிழ் மொழி ஒரு செல்லாக் காசு என்றும், ஆங்கிலமே பொருளாதார ஏற்றத்துக்கும் உயர்வுக்கும் உகந்தது என்றும் ஒரு பிரமையை ஏற்படுத்தி இருக்கின்றன. இதனால் மாணவர்களும் தமிழ் மொழி மீது அக்கறை காட்டுவது குறைந்து வருகின்றது என்று வேதனைப்பட்டார் ஒரு தமிழ் ஆசான். அவரது வேதனை சரி போலவே இருக்கிறது. பாரதி பாடியது போல 'மெல்லத் தமிழ் இனிச் சாகுமோ?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவரங்களின் அறிவு!



பேராசிரியர் ஸ்டீபனோ மங்குசா இன்று உலகிலுள்ள தாவரங்களுக்கான ஒரே சோதனைச்சாலையை நடத்தி வருபவர்!

தாவரங்களுக்கான ப்ளாண்ட் நியூரோ பயாலஜி எனப்படும் தாவர மூளை அறிவியல் துறையில் உள்ள இந்தப் பன்னாட்டுச் சோதனைச்சாலை இத்தாலியில் ப்ளோரென்ஸ் நகருக்கு அருகில் ஏழு மைல் தொலைவில் உள்ளது. மங்குசாவும் அவரது ஒன்பது சகாக்களும் தாவரங்களைப் பற்றிய பல மர்மங்களை விடுவிக்கும் ஆராய்ச்சியில் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். உடலியல், தாவர மூளை உயிரியல்,சுற்றுப்புறச்சூழல் இயல் ஆகிய மூன்று துறைகளையும் கலந்து செய்யும் அபூர்வமான ஆய்வு இவர்களுடையது.

பிரச்சினைகளைத் தீர்ப்பது தான் அறிவு என்று அறிவிற்கான இலக்கணம் வரையறுக்கப்படுமானால் தாவரங்கள் நமக்குக் கற்பிக்க ஏராளமானவற்றைத் தங்கள் வசம் கொண்டுள்ளன என்கிறார் மங்குசா!

மூளை என்ற ஒரு அங்கம் இல்லாமலேயே அவை ஸ்மார்ட்டாக அற்புதமாக உணர்கின்றன! எப்படி வளர்வது, எப்படி சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொள்வது,எப்படி முன்னேறுவ்து என்பதையெல்லாம் இவைகள் காண்பிப்பது அலாதி ஆச்சரியத்தை நமக்குத் தருகின்றன என்று மேலும் அவர் கூறுகிறார்!

அறிவு என்பது மூளையினால் மட்டுமே அளக்கப்படும் ஒன்று இல்லை என்பது அவரது திடமான நம்பிக்கை.

வெறும் கறிகாய் வகைத் தாவரம் தானே என்று செடிகொடிகளை அனைவருமே அலட்சியம் செய்கின்றனர்.அவற்றிற்கு உரிய மரியாதையைத் தருவதில்லை.ஆனால் நவீன தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தில் ரொபேட்டுகளுக்கு இன்று எந்த அளவு முக்கியத்துவம் உண்டோ அந்த அளவு முக்கியத்துவம் வயல்வெளிகளில் அதேபோல தாவரங்கள் அதிசய செயல்களைப் புரிவதால் உண்டு என்பது மங்குசா தரும் புதிய தகவல்.

உதாரணமாக இன்று இவர்களது சோதனைச்சாலையில் நடைபெறும் ஆய்வுகளை எடுத்துக் கொள்வோம்.தாவர ஆராய்ச்சியின் விளைவாக இப்போது கண்டுபிடிக்கப்பட்ட ப்ளாண்டாய்ட் தான் செடியின் தண்டானது தகவலை அனுப்புவது போல இயந்திர வகையில் ஒன்றான பாட்ஸ் என்பவை செவ்வாய் கிரகத்தின் தரையில் போடப்பட்டு அங்கிருந்து பூமிக்கு தகவலை அனுப்ப முடிவுதற்கான ஏற்பாட்டைச் செய்ய வழிவகை செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பல் டாக்டர்களின் வாசல் அறைகளை அலங்கரிக்கும் வெறும் அலங்காரப் பொருளாக செடிவகைகள் இருந்த காலம் மலையேறிப் போனது என்று கிண்டலடிக்கிறார் மங்குசா.

சார்லஸ் டார்வினின் தாவரங்களின் இயங்கு சக்தி என்ற போட்டோ கிராபிக்ஸ் பற்றிய பேப்பர் 1880ல் வெளியிடப் பட்டது.ஆனால் தாவரங்களின் இந்த அறிவு பற்றிய விஷயத்தில் ஆர்வமும் விழிப்புணர்வும் மெதுவாகத்தான் உலகில் பரவலாயிற்று.

மனிதர்களுக்கு உள்ளது போன்ற உணர்வுகள் தாவரங்களுக்கு உள்ளதா என்பது பற்றி மங்குசா தெளிவாக விளக்குகிறார்.

தி சீக்ரட் லைப் ஆஙப் ப்ளாண்ட்ஸ் என்ற திரைப்படம் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுகளில் வெளியிடப்பட்ட போது உல்கமே வியந்தது.தாவரங்களுக்கு உணர்ச்சிகளும் உணர்வுகளும் உள்ளன என்பதை இந்தப் படம் சுட்டிக் காட்டிய போதிலும் அறிவியல் விஞ்ஞானிகள் அறிவுள்ள தாவரங்கள் பற்றிப் பேசுவதைக் கூடுமான வரையில் தவிர்த்தே வந்தனர்!

சிக்னல் அனுப்புவது, அனுப்பியதை உணர்வது ஆகியவை பற்றிய விஷயங்கள் மூளைக்கு இருக்கும் திறனில் உள்ள அறிவு போல தாவரங்களுக்கும் உள்ளது என்பது பற்றிய ஏராளமான ஆராய்ச்சி முடிவுகள் இப்போது வெளியாகி உள்ளன!

மங்குசா சர்ச்சைக்குரிய தாவர மூளை உயிரியல் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ப்ளாண்ட் நியூரோபயாலஜி என்ற இந்த வார்த்தையை அவர் பயன்படுத்துவதற்குக் காரணம் மனித நரம்பு அமைப்பில் உள்ளது போலவே தாவரங்களுக்கும் அமைப்பு உள்ளது தான் காரணம்!


பத்து லட்சம் யூரோக்கள் இதுவரை இந்த ஆய்வுக்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும் ஐந்து லட்சம் யூரோக்கள் வழங்கப்பட உள்ளது. இவ்வளவு பணம் இந்த ஆராய்ச்சிக்குக் கொட்டப்படுவானேன்?

இயற்பியல் விஞ்ஞானியான பேராசிரியர் போலோ ப்ளாஸி, இந்த ஆராய்ச்சி ஒரு போலி அறிவியல் ஆராய்ச்சியாக இதுவரை (சிலரால்) கருதப்பட்டு வந்த போதிலும் இனிமேல் அப்படி கருதப்பட நிச்சயமாக முடியாது என்கிறார்.

செடிகளின் மீது இசையின் தாக்கம் நிரூபணமான ஒன்று! இப்போது புவி ஈர்ப்பு விசையை உணர்வது, தொலைதூர தகவல்களை சிக்னல் மூலம் அனுப்புவது ஆகியவற்றில் தாவரங்களின் திறன் வியக்க வைக்கும் அளவில் உள்ளது நிரூபணமாகி விட்டது.

அடுத்த ஆண்டு ஜப்பானில் பன்னாட்டு விஞ்ஞானிகளின் குழு தாவரங்களின் அறிவு பற்றி உலகளாவிய அளவில் கூடி விவாதிக்கப் போகிறது!இந்த ஒன்றே இதன் முக்கியத்துவத்திற்குச் சரியான சான்று ஆகும்!

## புலியின் அன்பு முத்தம்



புலிக்கும் மனிதனுக்கும் இடையில் மலர்ந்துள்ள தூய்மையான நட்புஇதுவாகும்

மொஸ்கோவை சேர்ந்த 24 வயதாகும் அன்ட்ரீ கொலோசொவ் என்ற இளைஞனுக்கும், உலகிலேயே வேகமான பிராணியான சீட்டா வகை புலிக்கும் இடையில் நட்பு மலர்ந்துள்ளது. மொஸ்கோ மிருகக்காட்சி சாலையில் தாய் சீட்டா புலிக்கு 3 குட்டிகள் பிறந்தன. பிறந்து சிறிது நேரத்திலேயே இரண்டு குட்டிகள் இறந்து விட மூன்றாவது குட்டியான சீவா என்ற சீட்டா குட்டியை தாய் சீட்டா கைவிட்டு ஒதுக்கியது.

தனிமையில் உணவுக்கும் பாசத்துக்குமாய் தவித்த சீவா, மிருகக்காட்சிச்சாலையை சுற்றிப்பார்க்க வந்த அன்ட்ரீ கொலோசொவ்வை பாசத்துக்குள் ஈர்த்தது. மிருகக்காட்சி சாலை அலுவலகர்களின் அனுமதியுடன் சீவாவை தனது வீட்டுக்கு தூக்கி சென்ற அன்ட்ரீ கொலோசொவ், அதற்கு குழந்தைகளுக்கு பால் புகட்ட உதவும் புட்டிமூலம் பால் ஊட்டி அரவணைத்து வந்தார்.

ஒப்பந்தத்துக்கு அமைய 5 மாதங்களில் குட்டியை மீள மிருகக்காட்சி சாலையில் ஒப்படைத்த போதும், அங்கும் இவர்களின் நட்பு தொடர்கிறது. அன்ட்ரீ கொலோசொவ்வை கண்டால் துள்ளிக் குதிக்கும் சீவா விளையாடி இருவரும் முத்தங்கள் பரிமாறிக் கொள்வார்களாம்.

## நடை பயணம்



வாத்து முட்டை என்று தெரியாமலேயே கோழி அடைகாத்தது. அதில் இருந்து வெளியேறிய வாத்துக் குஞ்சுகளோடு கோழி ஆசையோடு வலம் வரும் சுவாரஸ்ய சம்பவம் இங்கிலாந்தில் நடக்கிறது. இங்கிலாந்தின் டார்சட் கவுன்டியில் உள்ள பூலே பகுதியில் பிலிப் பால்மர் என்பவர் பண்ணை வைத்திருக்கிறார்.

ஹில்டா என்ற பெயரிட்டு ஒரு கோழியை வளர்த்து வருகிறார். அது ஒரு மாதமாக 5 முட்டைகளை அடைகாத்து வந்தது. சமீபத்தில் அவை பொரிந்தன. 5 முட்டையில் இருந்தும் வெளியேறியது.. கோழிகள் அல்ல, வாத்துக் குஞ்சுகள். சிறிது நேரம் பேந்தப் பேந்த விழித்தது கோழி. அதற்கு பிறகு, தனது குஞ்சுகளாகவே நினைத்து வாத்துக் குஞ்சுகளை அரவணைத்துக் கொண்டது.

பண்ணை முழுவதும் வாத்துக் குஞ்சுகள் கூடவே சுற்றித் திரிகிறது. வாத்துக் குஞ்சுகளுடன் கோழி பாசத்துடன் பழகுவதை அப்பகுதியினர் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். இதுபற்றி பால்மர் கூறுகையில், இப்போது வாத்துக் குஞ்சுகளும் கோழியும் ஒன்றாக சுற்றுவது பார்க்க அழகாக இருக்கிறது. வாத்துக் குஞ்சுகள் நீந்த ஆரம்பிக்கும் வரை இந்த உறவு தொடரும். ஒருநாள் அவை ஓடையில் இறங்கும்போது, கோழி தயங்கி கரையில் நிற்கும். உண்மை அவற்றுக்கு அப்போதுதான் தெரியும் என்றார்.

ஜிம்னாஸ்டிக் என்பது உடலை ரப்பர் போல் வளைத்து செய்யும் கடினமான ஓர் விளையாட்டு. இதனை சர்வ சாதாரணமாக செய்கிறார் 86 வயது பாட்டி. ஜொகானா குஆஸ் என்ற பாட்டியே, இளம் ஜிம்னாஸ்ரிக் வீராங்கனை ஆச்சர்யப்படுத்தும் அளவுக்கு இந்த விளையாட்டில் கலக்குகிறார். 30 வயதில் பயிற்சி எடுக்க தொடங்கியதாக கூறும் இவர், தொடர்ச்சியாக 50 வருடங்களுக்கு மேலாக ஜிம்னாஸ்ரிக்கில் ஈடுபட்டு வருகிறார். இவர் கரப்பந்தாட்ட மாநில அணியிலும் வீராங்கனையாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அசத்தும் பாட்டி





இவை பார்ப்பதற்கு வினோதமாக காணப்படுவதுடன் ஒரே பாய்ச்சலில் அதிகளவு தூரத்தை கடக்கவல்லன.

இவ்வாறு மனிதனும் கடந்தால் எப்படி இருக்கும்? அந்த கற்பனையை நனவாக்கும் முகமாக காலில் அணியக் கூடிய உபகரணம் ஒன்று ஊருவாக்கப்பட்டுள்ளது. 166 யூரோ கொடுத்து அந்த உபகரணத்தை வாங்கினால் நீங்களும் பாயலாம் காங்காருவைப்போல்.

## நீங்களும் பாயலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணில் HNB வழங்கும் ஷொப்பிங் திருவிழா

## கிரடிற் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் வாடிக்கையாளர்களுக்கு



மலருகின்ற புத்தாண்டிலே நம் அன்புக்குரியவர்களுக்கான புத்தாடைகள், நம் இல்லத்திற்கான தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் என்பவற்றை அதி கூடிய விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள, HNB வழங்கும் ஷொப்பிங் திருவிழா இது.

எல்லாக்காலங்களிலும் யாழ் மக்களின் தோளோடு தோள் நின்ற HNB, இப்புத்தாண்டு காலத்தில் கிரடிற் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் மூலம் புத்தாண்டு பொருட்களை விலைக்கழிவில் கொள்வனவு செய்ய, யாழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறது.

### கீழ் காணும் காட்சி அறைகளிலுள்ள பொருட்களுக்கான விலைக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

| | |
|---|---|
| 1. மங்களா காட்சி அறை | |
| பிளாஸ்டிக் தளபாடங்கள், மெத்தைகள் மற்றும் பேபி கொட்ஸ் | 3% - 7% |
| மரத்தளபாடங்கள் மற்றும் ஏனைய தளபாடங்கள் | 5% - 20% |
| உலோக தளபாடங்கள் | 5% - 10% |
| சோபா செட்கள் | 5% - 15% |
| 2. கனடா ஜெயஸாஜீ சுப்பர் சென்ரர் | 10% - 50% |
| 3. கமலேஸ்வரி டெக்ஸ் | 10% |
| 4. சீமாட்டி (பிரைவட்) லிமிட்டட் | 10% - 15% |
| 5. ஸ்டைல் பார்க் | 10% |
| 6. மீடியா எலக்ரோ மார்ட் | 5% |
| 7. பெனின்சுலா சுப்பர் மோல் | 5% |
| 8. டி எஸ் ஐ | 7.5% |
| 9. த வேர்ல்ட் ஒவ் ஹெய்லீஸ் | 10% - 15% |
| 10. றொபாஸ் | 15% |
| 11. மிலேனியம் பெஷன் | 15% |

நிபந்தனைக்குட்பட்டது

மார்ச் 31 முதல் ஏப்ரல் 13 வரை மட்டுமே



HNB

ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி / Hatton National Bank PLC - PQ 82

பிட்ச் ரேட்டிங் : AA-(lka)

HNB தலைமை அலுவலகம், HNB டவர்ஸ், 479, ரி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.

மேலதிக விபரங்கட்கு: HNB கார்ட் சென்ரர், தொ.பேசி 4523523

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## உலகின் மிகச் சிறந்த உணவுச் சந்தை St.Lawrence Market



கனடாவின் ரொறன்றோ மாகாணத்தில் உள்ள St. [illegible]wrence Market-ஐ உலகின் மிகச்சிறந்த உணவுச் சந்தை என National Geographic [illegible]ழிதழ் தெரிவித்துள்ளது.

கடந்த 1803ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட Lawrence [illegible]arket-ல் 1830ஆம் ஆண்டு காலப் பகுதியில் நகரசபையும் இயங்கியது.

தற்போது அங்கு சுமார் 120 வணிகர்கள் பல்வே[illegible] உணவுப் பொருட்களை விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



*மனிதர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உருவாக்கப்பட்ட வீடுகளுக்கு கால் முளைத் தால் எப்படி இருக்கும்? தினமும் பிடித்தமான இடங்களில் தங்கலாம் அல்லவா?.*

*அதே போன்று இடத்திற்கு இடம் நகரும் வீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் அதிகம் காணப்படும் இந்த வீடுகள் சுற்றுலாப் பயணிகளுக்காக வாடகைக்கு விடப்படுகின்றன.*

*படத்தில் நீங்கள் காண்பது சகல வசதிகளையும் உள்ளடக்கிய 130 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் ஒன்றாகும்.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org